அன்னை பாலா

வரலாறு



நெமிலி பி.வெங்கட்கிரிதர்

அன்னை பாலா வரலாறு

(மஞ்சள் கயிறு மகிமை)

நெமிலி P. வெங்கட்கிரிதர், B.Sc.

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : ஏப்ரல் 1996

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை ரூ. 25.00

Laser Typeset at : LKM Computer Prints, Madras – 17
Printed at : Ravi Raja Offset, Madras – 14

3-3

முன்னுரை

அருள்மிகும் தேவி அன்னை பாலா திரிபுர சுந்தரியின் அழகான வரலாறு புத்தக வித்தகர் - இறைபணிச் செம்மல் திரு. வானதி திருநாவுக்கரசு அவர்களின் அன்பிலே அருமையான மலராகப் பூத்திருக்கிறது. திரு. வெங்கட்கிரிதரன் அவர்கள் உளம் உருகும் வண்ணம் எழுத்துக்களை மாலையாகக் கோர்த்து இறைவிக்கு நூல்மாலை சாற்றியிருக்கிறார்.

இந்த முன்னுரையே ஒரு விசித்திரம்தான். ஆம்! மகனுடைய நூலுக்கு தந்தையே முன்னுரை எழுதும் ஒரு பாக்கியத்தை அன்னை எனக்கு அளித்திருக்கிறாள். எழுத்துலகத்தில் பிள்ளையின் நூலுக்கு தந்தை முன்னுரை எழுதுவது அநேகமாக இதுதான் முதல் தடவையாக இருக்கும் என எண்ணுகிறேன். இதுவும் பாலாவின் திருவிளையாடலே.

அன்னை பாலாவைப் பற்றி "திரிபுர சுந்தரி திருவிளையாடல்" என்ற எனது நூலினை அன்னை பாலாவின் சன்னிதியில் வானதி திருநாவுக்கரசு அவர்கள் வெளியிடும்போது "வானதி பதிப்பக நூலினை வேறு எவராவது வெளியிட முதல் பிரதியினை பிரமுகர்கள் யாராவது பெற்றுக்கொள்வதுதான் வழக்கம். ஆனால் 'பாலா திரிபுர சுந்தரி' பதிப்பாளனாகிய என்னையே வெளியிட வைத்து டாக்டர் சீர்காழி. S. கோவிந்தராஜன் அவர்களை முதல் பிரதி பெற்றுக் கொள்ள வைத்துள்ளாள். பதிப்பாளரே வெளியீட்டாளராக மாறியதும் பாலாவின்

திருவிளையாடலே" எனக் குறிப்பிட்டார். அதுபோல்தான் இந்தத் திருவிளையாடலும் அமைந்துள்ளது.

இந்த நூலிலே அன்னை பாலாவின் வரலாறு மிகவும் ஆழமாகவும், அகலமாகவும் விவரித்து எழுதப் பட்டுள்ளது. அவளது தோற்றம் பிரமிப்பினை ஊட்டுவதாக உள்ளது. அவளது அரசாட்சி நெஞ்சினைக் கொள்ளை கொள்கிறது. எஃந்தனை சோதனைகள்! அதனையெல்லாம் தாண்டி எத்தனை சாதனைகள்!

அன்னை பாலாவின் ஒவ்வொரு இயக்கத்தையும் எழுத்தாளராகிய வெங்கட்கிரிதரனுக்கு அவனது அம்மா கனவில் கண்டு கூற அதனை எழுத்தில் வடிக்க அன்னை பாலா அருள்தர, அதற்கு முன்னுரை எழுதும் பாக்கியம் அவனது தந்தையாகிய எனக்குக் கிடைத்ததும் அவளது லீலா விநோதமே!

அன்னையைப் பற்றி அவளது கருணையால் நான் எழுதிய "திரிபுர சுந்தரி திருவிளையாடல்", "அன்னை பாலாவின் அற்புதங்கள்", "பாலா திரிபுர சுந்தரியின் லீலா விநோதங்கள்" ஆகியவற்றை வானதி பதிப்பகம் மிகவும் அருமையாக வெளியிட்டு இறைபணி புரிந்தது. இப்போது அவளது அருள் வரலாற்றை அழகுடன் வெளியிட்டு மீண்டும் அன்னை பாலாவின் பக்தர்கட்கு அருட்பிரசாதம் வழங்கியுள்ளார் வானதி திருநாவுக்கரசு அவர்கள்.

எழுத்தாளர் வெங்கட் கிரிதரனுக்கும், வானதி பதிப்பகத்தாருக்கும் அன்னை பாலாவின் அருளாசியால் பதினாறு பேறுகளும் நிறைய அம்பாளைப் பிரார்த்தனை செய்கிறேன்.

நெமிலி எழில்மணி

ஸ்ரீ பாலா பீடம்,
22, சத்திரத் தெரு,
நெமிலி –631 051,
வ.ஆ.அ.மா.

என்னுரை

அருள் மழையோடு, அமுத மழையும் இசை மழையும் இணைந்து பொழியும் அற்புதமான ஒரு தலம் நெமிலி. அங்கு தன்னிகரற்று விளங்கும் தாயாம் அன்னை பாலா திரிபுரசுந்தரியின் அதி உன்னதமான பீடம் அமைந்துள்ளது.

"பாலா பீடம்". பெயர் சொன்னால் போதும் பாவம் பறந்துவிடும். அந்த அன்னையின் திருவிளையாடல்கள், அற்புதங்கள், லீலா விநோதங்கள் போன்றவற்றை, வான் புகழும் வானதி பதிப்பகம் வாஞ்சையோடு வெளியிட்டிருக் கிறது.

அதன் வழியே தோன்றியிருக்கும் மகோன்னதமான, மகத்தான, மகிமை வாய்ந்த புத்தகம்தான் அன்னை பாலா வரலாறு. எனது புத்தகத்தைப் பற்றி நானே தற்பெருமையோடு கூறுவதாக தயவுசெய்து தவறாக நினைக்க வேண்டாம். இது எனது புத்தகமே அல்ல. அன்னை பாலா அவளுக்காக அவளே எழுதிக் கொண்ட அற்புதமான புத்தகம்தான் இந்த அன்னை பாலா வரலாறு.

பேனா பிடித்த பெருமையும், பெயரைப் போட்டுக் கொண்ட உரிமையும் பாலா எனக்களித்த பிச்சையாகவே கருதுகிறேன்.

லலிதா சகஸ்ரநாமத்தில் 965வது நாமம், பாலா, அடுத்த நாமம் 'லீலாவினோதினி'. பாலா என்பது சிறுவயது முதல் குமரிப் பருவம் வரையுள்ள பெண்களை அழைக்கும் சொல். சிறு பெண்ணாதலால் விளையாடுவதில் சந்தோஷ மடைபவள் என்பது லீலா வினோதினி என்ற நாமத்தின் அர்த்தம்.

அந்த பாலாவின் லீலா வினோதங்கள்தான் இந்தப் புத்தகம் உங்கள் கைகளில் தவழ காரணமாக இருந்தது. இந்து மதத்திற்கே உயிர் மூச்சான ஆதிசங்கர பகவத் பாதாள் தன்னுடைய திரிபுர சுந்தரி வேதபாத ஸ்தோத்திரத்தில் கீழ்க்கண்டவாறு கூறியிருக்கிறார்.

"உன்னைத் தவிர வழிபட வேறு தெய்வம் ஏது? உன் புன்சிரிப்பு அக்ஞான இருளை நாசம் செய்கிறது. உன் பாத தீர்த்தம் பிறப்பு இறப்பு என்ற நோயைத் தீர்க்கவல்லது. நீ சுலபமாக ஆராதிக்கத்தக்கவள். உன்னை நினைப்பவரை உலகமே வணங்கும்."

அத்தகைய பாலாவின் லீலா விநோதங்களை அன்புடன் பதிப்பித்த இறைபணிச் செம்மல் - புத்தக வித்தகர் - பாலாவின் பரம பக்தர் வானதி திருநாவுக்கரசு அவர்கட்கு என் பணிவு கலந்த நன்றி.

22, சந்திரத் தெரு,
நெமிலி – 631 051.

அன்புடன்
நெமிலி P. வெங்கட்கிரிதர்.

பொருளடக்கம்

1

கனவிலே வந்த அன்னை கருவி ஆக்கினாள் என்னை!

ஸ்ரீ பாலா பீடம். அமுத மழை பொழியும், அழகு நெமிலியில் உள்ள அற்புதமான ஒரு ஸ்தலம். சின்னஞ்சிறு பெண்ணாக, சிங்காரப் பட்டுடுத்தி, சிரித்த முகத்தோடு காட்சி தரும் அன்னை பாலாவைக் காண மூன்று அன்பர்கள், வெளியூரிலிருந்து நெமிலிக்கு வருகிறார்கள். பீடத்தில் நுழைகிறார்கள். பாலாவைப் பார்த்தவுடன் பரவசமடைகிறார்கள்.

வந்தவர்கள் ஸ்தல வரலாற்றைப் பற்றி கேட்க, எனது தாயார் எல்லாவற்றையும் கூறுகிறார்கள். அதைக் கேட்ட அன்பர்கள், இந்த விஷயங்களை நாங்கள் புத்தகமாக எழுதி வெளியிடுகிறோம் எனக் கூறுகின்றனர். அப்போதுதான் அந்த மெய் சிலிர்க்க வைக்கும் அற்புதம் நடக்கிறது. அதை வார்த்தைகளில் வர்ணிப்பது அவ்வளவு எளிதல்ல.

பீடத்தில் அமர்ந்திருக்கும் பாலா உயிர்ப் பெற்று, சிறிய பெண்ணாக உருப்பெற்று, என் தாயிடம் ஓடி வந்து "என் திருவிளையாடல்களையும், அற்புதங்களையும் என் மகன் (எழில்மணி) எழுதினான். அன்று முதல் இன்று வரை நடந்த சம்பவங்களை, உன் மூலம் நான் நடத்திய லீலைகளை உன் மகன் கிரிதரன் எழுத வேண்டும்.

வேறு யாரும் எழுதக்கூடாது. நீ சொல்லச் சொல்ல அவன் என்னைப் பற்றி எழுத வேண்டும். எனச் சொல்லி கீழே பார் எனக் காட்ட தெளிந்த நீரோடை போன்ற அமைப்பில் ஒரு தாலிச் சரடும் "மஞ்சள் (கயிறு) மகிமை" என்ற எழுத்துக்களும் தெரிகின்றன.

இதுதான் தலைப்பு. உன் மகன்தான் எழுத வேண்டும்" எனக் கூறி சிட்டாகப் பறந்து சட்டென்று பாலா மறைந்துவிட, என் தாய்க்கு கனவு கலைந்து விழிப்பு வந்துவிடுகிறது. பாலாவின் உத்தரவு கிடைத்தாலும் நான் இந்தப் புத்தகத்தை உடனே எழுதிவிடவில்லை. ஒன்றேகால் வருடம் தாமதமானது. 1995 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 27 ஆம் தேதி எழுதத் தொடங்கினேன்.

டிசம்பர் மாதம் 15 ஆம் தேதி எழுதி முடித்தேன். இது எனது முதல் அனுபவம். முழுக்க முழுக்க உண்மைச் சம்பவங்களை, சுருக்கமாகத் தொகுத்து எழுதியுள்ளேன். கற்பனை என்ற சொல்லுக்கே இடமில்லாமல், எனது தாத்தா திரு. G.K.V. சுப்ரமண்யம் அவர்கள், எனது தாய் நாகலட்சுமி பாண்டுரங்கன் அவர்கள் என்னிடம் கூறிய விஷயங்களை அப்படியே எழுதியுள்ளேன்.

தலைப்பு மட்டும்தான் நான் சுயமாக எழுதியது. மீதியெல்லாம் இங்கு நடந்த அதி உன்னதமான, அற்புதமான உண்மைச் சம்பவங்கள். பேனாவை மட்டுமே நான் பிடித்தேன். எழுதியது அன்னை பாலாதான் இதில் எனக்கு எந்தவித சந்தேகமுமில்லை. நான் வெறும் கருவி மட்டுமே. எழுதி முடித்தவுடன் எனக்கொரு மனநிறைவு வந்தது.

அந்த மன நிறைவு படித்து முடித்தவுடன் உங்களுக்கு ஏற்பட்டால், மன நிம்மதி ஏற்பட்டால் அதுவே எனக்கு மனமகிழ்ச்சி.

2

ஊருக்குள் வந்த உன்னதமான மனிதர்!

இராமஸ்வாமி அய்யர் - சாவித்திரி தம்பதிகள் மூட்டை முடிச்சுக்களோடு தங்கள் குழந்தைக்ளைக் கூட்டிக் கொண்டு ஊரை விட்டுக் கிளம்பும் போது மதியம் நெருங்கிவிட்டது. இராமஸ்வாமி அய்யர் பிறந்தது, வளர்ந்தது, மணம் புரிந்தது எல்லாம் "தாங்கி" எனும் சிற்றூரில். ஒரு சிறிய பிரச்சினை மாமியார் வீட்டில் எழுந்து ஒரு பெரிய சண்டையே வீட்டில் உருவாக, தான் பிறந்து வளர்ந்த ஊரையே துச்சமாக நினைத்து குடும்பத்தோடு புறப்பட்டு விட்டார்.

இவையெல்லாம் அன்னை பாலாவின் அற்புதங்கள் என அவருக்குத் தெரிய வாய்ப்பில்லை. இராமஸ்வாமி அய்யர் தெய்வ பக்தி மிகுந்தவர். அவரிடம் ராஜ ராஜேஸ்வரி அம்மன் விக்ரஹம் உட்பட சில விக்ரஹங்களும், சாளக்ராமங்களும் உண்டு. வேதங்களை நன்கு கற்ற சாதனையாளர். உபநிடதங்கள் பல கற்ற உத்தமர்.

அவரது வாழ்க்கைத் துணையாக வந்தவர் சாவித்திரி அம்மையார். அவரைப் பற்றி ஒரே வரியில் சொல்ல வேண்டுமென்றால் 'பத்தினித் தெய்வம் - பத்தரை மாற்றுத்

தங்கம்' தெய்வீகத் தம்பதிகளான இவர்களுக்கு மூன்று குழந்தைகள்.

1. வீரராகவன் – வாக்வாதினி எனும் வாக்குத் திறமைக்கு அதிபதியான வாக்தேவியின் பரிபூரண அருள் பெற்றவர்.

2. சுப்ரமண்யம் – பாலா எனும் இணையில்லா தெய்வத்தைக் கனவிலே கண்டு களிப்புற்று, பின்பு ஆற்றிலே கண்டு ஆனந்தித்து, பிறவிப் பயனை அனுபவித்து, பிறகு வீட்டிற்குக் கொண்டு வந்து விளையாட வைத்த வியத்தகு மனிதர்.

3. இராமலிங்கம் – அண்ணன்மார்கள் காட்டியவழியில் அன்பு நெறி மாறாமல் குடும்பத்தை அழைத்துச் சென்ற அருந்தவப் புதல்வர்.

இவர்கள் அனைவரும் நெமிலிக்கு வரவேண்டும், இவர்களுடன் தானும் நெமிலிக்கு வரவேண்டும் என அன்னை பாலா நினைத்ததின் விளைவே, இராமஸ்வாமி அய்யருக்கு தாங்கியில் ஏற்பட்ட குழப்பம்.

இவர்கள் ஊரை விட்டு வந்தபோது இராமலிங்கம் ஒரு வயது குழந்தை. மற்ற இருவரும் சிறுவர்கள். மூத்தவருக்கு 14 வயது. இளையவருக்கு 7 வயது. அனைவரும் அன்று இரவு ஒரு சிற்றூரில் தங்கி, பிறகு புறப்படுகின்றனர்.

நெமிலி கிராமத்தில் புரோகிதம் செய்ய போதிய ஆட்கள் இல்லை எனும் விவரம் காற்று வழியே அய்யரவர்கள் காதுக்கு எட்ட, கால்கள் நெமிலி நோக்கி நடக்கின்றது. அன்று மாலை நெமிலி எல்லையை அய்யர் குடும்பம் அடைந்தது.

ஊரில் தங்கும் இடம் பற்றி விசாரிக்க சத்திரத்துக்கு ஒருவர் வழி காட்டுகிறார். அனைவரும் சத்திரத்துக்கு வரும்போது இருட்டி விடுகிறது.

அந்தச் சத்திரம் 1860களில் காசி, இராமேஸ்வரம் செல்லும் யாத்ரிகர்களுக்கு வசதியாகக் கட்டப்பட்டது. நெமிலி வழியாகச் செல்லும் அன்பர்கள் அங்கு தங்கி இளைப்பாறி, பின் ஆற்றைக் கடந்து திருமால்பூர் வழியாகக் காஞ்சிபுரம் சென்று பிறகு ஒவ்வொரு ஸ்தலமாகச் சென்று முடிவில் காசிக்குச் செல்வர்.

அந்தச் சத்திரத்துத் திண்ணையில் ஒரு அம்மையார் சமைத்துக் கொண்டிருந்தார். வந்தவர்களைக் கண்டதும் எழுந்து வந்தார். எதிர்த் திண்ணையில் அமரச் சொல்லி, குடிப்பதற்கு நீர் கொடுத்தார். அந்த அம்மையார் பெயர் காமாட்சி. ஊர் காஞ்சிபுரம்.

பிறகு இராமஸ்வாமி அய்யர் சத்திரத்தைப் பற்றி விசாரிக்கிறார். அந்த சத்திரம், கடந்த ஐந்து வருடங்களாக பேய்களின் கூடாரமாக மாறிவிட்டதையும், இரவு நேரங்களில் அவைகளின் அட்டகாசங்கள் அதிகம் ஆனதால் யாரும் இங்கு தங்குவதில்லை எனவும் காமாட்சி அம்மாள் கூற சிறு கூட்டம் கூடிவிடுகிறது.

இராமஸ்வாமி அய்யர் அந்தச் சத்திரத்தில் குடும்பத்தோடு தங்கப் போவதாகக் கூற, எல்லோரும் வேண்டாம் என மறுக்கின்றனர். அய்யர் எதற்கும் அஞ்சவில்லை. ஊராரிடம் இரண்டு தீவட்டிகளை வாங்கிக் கொண்டு மூட்டை முடிச்சுக்களோடு உள்ளே செல்கிறார். சாவித்திரி அம்மாளும் துணிச்சலோடு, குழந்தைகளைக் கூட்டிக் கொண்டு உள்ளே செல்கிறார்.

விஷயம் காட்டுத் தீ போல் பரவ, இரவு முழுக்க ஊரில் இவர்களைப் பற்றிய பேச்சிலேயே கழிந்தது. சாவித்திரி அம்மாள் ஒரு அறையை சுத்தம் செய்து விளக்கேற்றி வைக்க, அந்த அறையில் உட்கார்ந்தபடி அய்யர் அவர்கள் ஸ்ரீஸூக்தம், துர்கா ஸூக்தம், லலிதா த்ரிசதி என ஒவ்வொன்றாக உரக்க பாராயணம் செய்ய,

அனலில் துடித்த புழு போல ஒவ்வொரு தீய சக்தியும் அந்த இடத்தை விட்டு அலறி அடித்துக் கொண்டு ஓடின.

காலை புலர்ந்தது. கதிரவன் மலர்ந்தது. சாவித்திரி அம்மாள் வாசல் பெருக்கி, நீர் தெளித்து, கோலம் போடுவதைக் காண கூட்டம் கூடிவிட்டது.

"நல்லவேளை... அவங்களுக்கு ஒண்ணும் ஆகலே!"

"மகராசியோட முகராசியைப் பாத்தப்பவே நினைச்சேன். அந்தம்மா மகாலட்சுமியேதான்."

"பேயாவது பிசாசாவது, அவங்ககிட்ட ஒண்ணும் பலிக்காது"

பலவிதமான பேச்சுக்கள். பெண்கள் முகத்தில் ஆச்சர்யம் கலந்த மகிழ்ச்சி. ஊர் முழுக்க விஷயம் பரவியது. கூட்டம் மேலும் கூடியது. அய்யரவர்கள் பூஜைகளை முடித்துக் கொண்டு வெளியே வந்தார்.

"சாமி... கும்புடறேங்க. இந்த சத்திரத்துக்குள்ள கிட்டதட்ட அஞ்சாறு வருஷமா யாரும் தங்கினதில்ல. ராவுல இந்தப் பக்கம் போகவே பயப்படுவாங்க... நீங்கதாங்க முதமுத முழுசா உள்ள போயி, முழுசா வெளிய வந்தீங்க..." என்றார் ஊர்ப் பெரியவர்.

"சாமி நீங்கதான் இந்த சத்திரத்துல இனிமே தங்கணும். எங்க எல்லாருக்கும் நல்லது பண்ணனும்" என்றார் ஒரு வயதான பெண்மணி.

அதற்குள் மற்றொரு பெரியவர் "சாமி பெரிய பெரிய மந்திரவாதி எல்லாம் வந்து ஒண்ணும் பண்ண முடியாமப் பயந்துப் போயி திரும்பி ஓடிட்டாங்க. நீங்க எப்படி சாமி பொண்டாட்டி புள்ளக் குட்டியோட ராவுல தனியா இருந்தீங்க?" ஆச்சர்யத்தோடு கேட்டார்.

"ஒரு நல்ல சக்தி உள்ள போனவுடனே அந்த தீய சக்தி வெளியப் போயிடுச்சி அவ்வளதான்" அய்யர் சிரித்தார். ஊராருக்கு புது உற்சாகம் வந்தது.

தான் இங்கு புரோகிதம் பார்க்க விரும்புவதாகக் கூற, ஊரார் ஆனந்தத்தோடும், அளவிலாத சந்தோஷத்தோடும், அவர் சொன்னதை ஆமோதித்து, அவர் குடும்பத் தேவைக்காக அரிசி பருப்பிலிருந்து அன்றாடச் சாமான்கள் வரை அனைத்தையும் கொண்டுவந்து அன்போடு அளித்தனர்.

3

மஞ்சள் மகிமையின் மகத்தான துவக்கம்

இராமஸ்வாமி அய்யரைப் பற்றிக் கேள்விப்பட்டு அவரைக் காண, வேதம் கற்ற அந்தணர்கள் மற்றும் வெளியூரைச் சேர்ந்த பிரமுகர்கள் என பலர் நெமிலிக்கு வந்தனர். அய்யரவர்கள் செய்யும் பூஜையில் கலந்து கொண்டனர்.

அய்யரவர்கள் வரவால் ஊருக்குத் தனி மரியாதை கிடைத்தது. அவரது செல்வாக்கு பன் மடங்கு உயர்ந்தது. நாட்கள் நகர்ந்தன. முதலில் வீரராகவ அய்யருக்கு திருமணம் நிச்சயமானது.

ஒரு நல்ல நாளில் வீரராகவ அய்யர் வரலட்சுமி எனும் மங்கையின் கைப் பிடிக்க ஊரே அவர்களை வாழ்த்துகிறது. அந்த ◌ந்திரத்தில் நுழைந்த இரண்டாவது பெண் வரலட்சுமிதான்.

வீட்டிற்கு வந்த வரலட்சுமி வீரராகவய்யரின் இரண்டு தம்பிகளுக்கு அண்ணியாக இல்லாமல் அன்னையாக இருந்து குடும்பப் பொறுப்பைத் தான் ஏற்க சாவித்திரி அம்மையாரின் பாரம் குறைந்தது. வீட்டில் இன்பம் நிறைந்தது.

ஆண்டுகள் உருண்டோடின. சுப்ரமண்ய அய்யருக்காக சம்பந்தம் பேச சில பெண் ஜாதகங்கள் வந்தன. இராமஸ்வாமி அய்யரைப் பற்றியும், அவரது குடும்பத்தைப் பற்றியும் ஊரே புகழ்ந்து பேசியதால் அந்தக் குடும்பத்தில் பெண் கொடுத்து சம்பந்தம் செய்ய பலரும் ஆசைப்பட்டனர். பெண் பார்க்க, ஒரு நாள் நிச்சயிக்கப்பட்டது.

எல்லா ஏற்பாடுகளும் முடிந்து புறப்படும் நேரம் சுப்ரமண்ய அய்யருக்கு அம்மை வந்துவிட்டது. உடலெங்கும் சிறு சிறு கொப்புளங்கள். யாரும் செல்லவில்லை. இரவு சுப்ரமண்ய அய்யர் பக்கத்தில் ஒரு குரல் கேட்டது.

"அவளூர் என்ற கிராமத்தில் சுப்புலட்சுமி எனும் பெண் இருக்கிறாள். அவள்தான் உனக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை. உனது அண்ணனுக்கு வாரிசு கிடையாது. உங்களது வம்ச விருத்திக்கும் வாழ்க்கை வளர்ச்சிக்கும், மேலும் நடக்க விருக்கும் பல தெய்வீக மாற்றங்களுக்கும் அந்த சுப்புலட்சுமி இங்கு வர வேண்டும்."

காலை தனது தாய் தந்தையிடம், இரவு நடந்ததைப் பற்றிக் கூற, ஆச்சர்யம் அடைந்தனர். நெமிலியிலிருந்து அவளூர் என்ற கிராமத்துக்கு உடனே ஆட்கள் விரைந்தனர்.

அங்கு ஒரு புகழ் பெற்ற அந்தணக் குடும்பத்தில் பிற்காலத்தில் நெமிலியில் நடமாடும் தெய்வமாக வாழப் போகும் சுப்புலட்சுமி அம்மையாரைக் கண்டனர். இராமஸ்வாமி அய்யரைப் பற்றியும், அவரது குடும்பத்தைப் பற்றியும் கூறினர்.

அடுத்த ஓரிரு வாரங்களில் இரு குடும்பங்களும் பரஸ்பரம் ஒருவரை ஒருவர் தெரிந்து கொண்டனர். சுப்புலட்சுமி தாய் தந்தைக்கு, இராமஸ்வாமி அய்யரின்

குடும்பத்தை நெமிலியில் வந்து பார்த்தபோது மிகவும் பிடித்து விட்டது.

அவளூரில் இருக்கும் சுப்புலட்சுமியைப் பற்றி அசரீரியாக வந்த வாக்கைப் பற்றி நினைந்து நினைந்து மகிழ்ந்தனர். நல்ல இடவசதி இருப்பதால் நெமிலியிலேயே திருமணத்தை வைத்துக் கொள்ளலாம் என முடிவெடுக்கின்றனர்.

சத்திரம் வீடானது. பிறகு அந்த வீடே சத்திரமானது. விழாக்கோலம் பூண்டது. ஒரு நல்ல நாளில் சுப்புலட்சுமியை அவளூரிலிருந்து அழைத்து வந்தனர். ஊரே அவரைக் காணக் கூடிவிட்டது.

அன்னை பாலா நீண்ட நாட்களாக இதைத் தான் எதிர்பார்த்து காத்திருந்தாள். நெமிலிக்கு வராமலேயே அன்னை நிகழ்த்திய முதல் அற்புதம் இதுதான். மஞ்சள் மகிமையின் துவக்கமும் இதுதான்.

அன்னை பாலாவின் மறைமுகமான ஆசிகளோடு சுப்ரமண்ய அய்யர் - சுப்புலட்சுமியின் திருமணம் ஊரே வியக்க, வந்திருந்த பெரியவர்கள் வாழ்த்த மிகவும் சிறப்பாக நடந்து முடிந்தது.

சுப்புலட்சுமியின் கழுத்தில் ஏறிய மஞ்சள் கயிற்றின் மகிமையால் பாலா நெமிலிக்கு வந்தாள். நெமிலிக்கு வந்த பாலா ஒவ்வொரு கால கட்டத்தில் தனது பிரதிநிதியாக ஒவ்வொருவரைத் தேர்ந்தெடுத்தாள். சுப்ரமண்ய அய்யருக்குப் பின் அவரது மகனான ஜானகிராம அய்யரின் மனைவியான கிரியம்மாவை தேர்ந்தெடுத்தாள். அதன் பிறகு அவரது மகன் பாண்டுரங்கன் (நெமிலி எழில்மணி) மனைவியான நாகலட்சுமியைத் தேர்ந்தெடுத்தாள்.

கிரியம்மாவுக்குப் பிறகு இந்தக் கிரியம்மாவை அதாவது கிரியின் அம்மாவை, எனது தாயை பாலா

தேர்ந்தெடுத்தாள். அவளூரிலிருந்து வந்த சுப்புலட்சுமி முதல் தொடங்கி தற்போது நெமிலியிருக்கும் நாகலட்சுமி வரை கிட்டதட்ட இந்த நூறு வருடங்களில் அன்னை பாலா நிகழ்த்திய அற்புதங்கள் எண்ணிலடங்காதவை.

அதில் சிலவற்றை எனது தந்தை நெமிலி எழில்மணி அவர்கள் புத்தகமாக எழுதியிருக்கிறார்கள். அவை 1978க்கு பிறகு நிகழ்ந்தவை. அன்னை பாலா தன்னைப் பற்றி எழுத எனது தந்தையைத் தேர்ந்தெடுத்தாள்.

அதே சமயம் அன்னை பாலா என்னையும் தேர்ந்தெடுத்தாள். அதன் நோக்கம் என்னவென்று எனக்கு அன்று புரியவில்லை. இன்று தேவி ஸூக்தம் படித்தபோதுதான் புரிந்தது. கண்ணில் கண்ணீர் கசிந்தது.

“அஹமேவ ஸ்வயமிதம் வதாமி ஜுஷ்டம் தேவேபிருத
மானுஷேபி: |யம் காமயே தம் தமுக்ரம் க்ருணோமி
தம் ப்ரஹ்மாணம் தம் ருஷிம் தம் ஸுமேதாம் ||

“எவனை நான் விரும்புகின்றேனோ, அவனை நான் எல்லோருக்கும் உயர்ந்தவனாகச் செய்கின்றேன். அவனை பிரம்மாவாகவோ, அவனை ரிஷியாகவோ, அவனை அறிவிற் சிறந்தவனாகவோ செய்கின்றேன்”

நான் அடைந்த பிறவி ஈடேற இது ஒன்றே போதும். இதுவரை எத்தனை பிறவி எடுத்தேனோ அத்தனைக்கும் மொத்தமாக, முத்தான இந்த வாய்ப்புக் கிடைத்தது. இதற்கெல்லாம் காரணம் அன்றைய “மஞ்சள் மகிமையின் மகத்தான துவக்கமே”.

4

ஆற்றிலே வந்தவள் ஆற்றலைத் தந்தவள்!

ஒரு நாள் இரவு சுப்ரமண்ய அய்யர் அயர்ந்து தூங்கிக் கொண்டிருக்கிறார். நடுநிசியில் அவருக்கு ஒரு கனவு. சாதாரண கனவா அது? தெவிட்டாத தெய்வீகக் கனவு அது! ஆம் அகிலமே போற்றிப் புகழ்ந்து வணங்கும் பாலா அவரது கனவில் பத்து வயது சிறுமியாக காட்சி கொடுத்து

“ஆற்றல் மிக்க நான், உனக்காக ஆற்றில் வருகிறேன். என்னை எடுத்துக் கொள்” எனக் கூற, அய்யரோ “குழந்தை நீ யாரும்மா?” எனக் கேட்கிறார்.

“என்னைத் தெரியல. நான்தான் பாலா” சிரித்தபடி குழந்தையான பாலா மறைய, நித்திரை கலைகிறது. உடலெல்லாம் வியர்த்து விட்டது.

மறுநாள் காலை சுப்ரமண்ய அய்யர் ஆட்கள் சிலரோடு பக்கத்திலிருக்கும் குசஸ்தலை ஆற்றுக்குச் சென்று தேடினார். வெள்ளம் அதிகமாகி அவர் ஆற்றில் அடித்துச் சென்றதுதான் மிச்சம். பாலா கிடைக்கவில்லை.

பாலா ஆற்றில் கிடைப்பாளா? சந்தேகம் கொண்ட சிலபேர் மறுநாள் அவருடன் செல்லவில்லை. விடா முயற்சியோடு மீண்டும் அவர் ஆற்றுக்குச் சென்று

தேடினார். ஆற்றல் மிக்க பாலா, அந்த ஆற்றின் ஒரு மூலையில் அவரின் கைகளில் அகப்பட்டாள். அவர் அடைந்த சந்தோஷத்திற்கு அளவே இல்லை.

அன்று அவரது அன்புச் சிறையில் அகப்பட்ட பாலா, இன்றுவரை வெளியே வர நினைத்ததே இல்லை. அந்த அன்புச் சிறை இன்று எங்களுக்குச் சொந்தமானது. பாலா எங்களுக்கு பந்தமானாள்.

பாலா இல்லத்திற்கு வரும் வேளை, நவராத்திரியும் வருகிறது. இது நாள் வரை நவராத்திரி விழா மிகவும் எளிமையான முறையில் நடந்து வந்தது. பாலா வீட்டிற்கு வந்த வேளை, நவராத்திரி விழாவை வெகு விமரிசையாக நடத்த வேண்டும் என்ற எண்ணம் சுப்ரமண்ய அய்யருக்கு ஏற்பட்டது.

கொளத்தூரிலிருந்து (பக்கத்திலிருக்கும் கிராமம்) வேதம் கற்ற பலர் வந்திருந்து தினந்தோறும் காலையில் மஹன்னியாச பூர்வக ருத்ராபிஷேகம், சூர்ய நமஸ்காரம், தேவி பாகவதம், சப்தசதி பாராயணம், பாலா சஹஸ்ரநாமம், அஷ்டோத்திரம் என மந்திரங்கள் முழங்க ஒன்பது நாளும் அன்னை பாலா திரிபுரசுந்தரி கல்யாண வைபவம் போல நவராத்திரி விழா நடைபெற்றது.

வந்தவர்களுக்கெல்லாம் அன்னதானம். வந்திருந்த சாஸ்திரிகளுக்கெல்லாம் வஸ்திரதானம். ஒன்பது நாளும் ஊரே விழாக்கோலம் பூண்டிருக்கும். அந்த ஒன்பது நாட்களும் திரும்பிய பக்கமெல்லாம் மந்திரம் ஒலிக்கும். சத்திரம் முழு நிலவாய் ஜொலிக்கும்.

ஒன்பது நாட்களை தன் வசப்படுத்திக் கொண்ட அன்னை பாலாவுக்கு ஒன்பது சக்திகள்.

1. த்ரிபுரா, 2. த்ரிபுரேசி, 3. த்ரிபுரஸுந்தரி, 4. த்ரிபுரவாஸினி, 5. த்ரிபுராஸ்ரீ, 6. த்ரிபுரமாலினீ, 7. த்ரிபுர ஸித்தா, 8. த்ரிபுராம்பா, 9. மஹாத்ரிபுரஸுந்தரி.

இந்த நவ சக்திகளை தன்னுள் வைத்திருக்கும் பாலாவிற்கு மொத்தம் ஒன்பது யோகங்கள்.

1. யம, 2. நியபி. 3. ஆஸன, 4. ப்ராணாயாம, 5. ப்ரத்யாஹார, 6. த்யான, 7. தாரணா, 8. ஸமாதி. 9. ஸஹஜாவஸ்தை.

இந்த நவயோகங்களைக் கொண்ட பாலாவிற்கு ஒன்பது யோகினிகள்.

1. ப்ரகட, 2. குப்த, 3. குப்த்தர. 4. ஸம்ப்ரதாய, 5. குலோத்தீர்ண. 6. நிகர்ப்ப, 7. ரஹஸ்ய, 8. அதிரஹஸ்ய, 9. பராபராதி ரஹஸ்ய.

இந்த நவயோகினிகளைக் கொண்ட பாவாவிற்கு ஒன்பது சக்கரங்கள்.

1. த்ரைலோக்ய மோஹனம். 2. ஸர்வாசாபரிபூரகம். 3. ஸர்வ க்ஷம் க்ஷோபணம். 4. ஸர்வ செளபாக்ய தாயகம். 5. ஸர்வார்த்த ஸாதகம். 6. ஸர்வ ரக்ஷாகரம் 7. ஸர்வ ரோகஹரம் 8. ஸர்வ ஸித்திப்ரதம், 9. ஸர்வானந்தமயம்.

இவையாவும் அன்னை பாலாவினுள் அடக்கம்.

நவசக்திகள், நவயோகங்கள், நவயோகினிகள் மற்றும் நவசக்கரங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் அன்னை பாலாவின் "நவராத்திரிகள்" எவ்வளவு விசேஷமானவை, எத்துணை புனிதமானவை என நான் எழுதவும் வேண்டுமோ?

தற்போது அந்த ஒன்பது ராத்திரிகளில் ஒவ்வொரு நாளும் ஒரு கலை விழாவோடு ஊரே வியக்க நவராத்திரி விழா நடக்கிறது. கிட்டதட்ட நூறு ஆண்டுகளுக்கும் மேலாக நடந்துவரும் நவராத்திரியில்தான் எத்தனை எத்தனை மாற்றங்கள், எண்ணிக்கையில்லா அற்புதங்கள்... அப்பப்பா "நினைத்தாலும் அருள் வந்து சேரும் பாலா நின் பெருமை யார் பாடக் கூடும்!

ஆற்றில் வந்தவள் ஆற்றல் தந்தவள். அவளுக்கு ஜாதி மத பேதம் கிடையாது. ஏழை பணக்காரன் என்ற வித்தியாசம் கிடையாது.

"இல்லையென்று பாலா திரிபுரசுந்தரி
யாருக்கும் சொன்னதில்லை!
இன்பத்தினை நாடும் அன்பர்க்கு கருணையை
ஈயாது விட்டதில்லை!
தொல்லையென்று அவள் எல்லையில்
வந்தோர்க்கு துயரேதும் வந்ததில்லை!
தூயவள் அவளுக்கு அருளதைப் பொழிவதில்
ஜாதிகள் மதமுமில்லை!

இது எனது தந்தை கவிஞர் நெமிலி எழில்மணி எழுதிய "பாலா கவச" வரிகள்.

5

பூவுலகில் பூத்த புதிய மும்மூர்த்திகள்!

நெமிலிக்கு வந்த மும்மூர்த்திகள் என ஊரே இந்த மூவரைப் பார்த்து வியந்தது. ஊரில் எந்த ஒரு விஷயமும் இவர்களைக் கேட்டுத்தான் நடை பெறும். வாசலில் வந்து நிற்கும்போதே வந்தவனுக்கு என்ன பிரச்சனை என வீரராகவய்யர் சொல்லிவிடுவார். உடனே தனது தம்பி இராமலிங்கத்தை அழைத்து "கொஞ்சம் விபூதி குங்குமம் கொடுத்து, வயத்துவலி சரியாயிடும்னு சொல்லி அனுப்பு" என்பார்.

வந்தவன் வாய் திறந்து வயிற்று வலி எனச் சொல்வதற்கு முன்பே வைத்தியம் தொடங்கி விடும். வாசலில் பதறியபடி ஒருவர் வந்து நிற்பார். "டேய்... உன் மாடு கரியாக்குடல் பக்கத்திலிருக்கற தோப்புல மேய்ஞ்சிட்டிருக்கு. போய்ப் பாரு. சீக்கிரம் போ..." பெரியவர் வீரராகவய்யர் சொல்லி முடித்தவுடன் வந்தவர் பக்கத்து கிராமமான கரியாகுடலுக்கு ஓடுவார்.

இவையெல்லாம் நமக்கு ஆச்சர்யமாக இருக்கலாம். இது எப்படி என யோசிக்கலாம். ஆனால் அன்றைய நெமிலிவாழ் மக்களுக்கு அதில் ஆச்சர்யமோ வியப்போ கொஞ்சமும் கிடையாது. காரணம் அவை அன்றாட

நிகழ்ச்சிகள். வீரராகவ அய்யரை அனைவரும் அன்போடும் மரியாதையோடும் 'பெரியவர்' என்றே அழைப்பார்கள். சுப்ரமண்ய அய்யரை 'சின்னவர்' என்று அழைப்பார்கள்.

வீரராகவய்யர் வீட்டுக்கு வந்தவர்களை கேட்காமலேயே அவர்களுக்கு எது தேவையோ அதைச் செய்து அனுப்புவார். சுப்ரமண்ய அய்யர் கதையே வேறு. வீட்டுக்கு வந்த பாலாவிடம் அவளுக்கு எது தேவை என்று கேட்டுக் கேட்டுச் செய்வார். ஆம் நாமெல்லாம் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு அவர் அன்றைய நாட்களில் பாலாவோடு சகஜமாகப் பேசிக்கொண்டிருப்பார்.

சுப்ரமண்ய அய்யர் கனவிலே தோன்றி பிறகு அவருடன் நேருக்கு நேர் பேசி மகிழ்ந்த அன்னை பாலா ஒரு நாள் அவரிடம் கூறிய அந்த தெய்வ வாக்கு இருக்கிறதே... அதை என்னவென்று சொல்வது, அன்று 'அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்று சொன்ன பெரியவர்கள் இன்று இருந்திருந்தால் 'அவளின்றி ஓர் அசைவும் இருக்காது' என்றே சொல்லியிருப்பார்கள்.

ஆம், அன்று ஒரு நாள் காலை. வீட்டில் ஏதோ பிரச்சினை. பிரச்சினை விளைவாக மனமுடைந்த சுப்பிரமண்ய அய்யர் பாலாவிடம் "அம்மா கடைசி வரைக்கும் நீ இப்படியேதான் பேசிக்கிட்டிருப்பியா? எங்களுக்கு ஒரு வழி சொல்லமாட்டியோ? எங்களுக்குன்னு எதுவும் செய்யமாட்டியா வீட்டுக்குள்ள பிரச்சினை வந்துடுச்சே... இதை நீ கவனிக்க மாட்டியா?" என்று கேட்டுவிட்டார்.

பாலா பேச ஆரம்பித்தாள்

'நான் இருக்கறப்போ உங்களுக்கு ஒரு வழி இல்லாம விட்டுடுவேனா? ஏதோ விட்ட குறை தொட்ட குறை அதனாலதான் நான் மறுபடியும் உங்ககிட்ட வந்து இருக்கேன். இப்ப உங்ககிட்ட பேசிக்கிட்டு இருக்கற

நான் எதுவும் செய்ய மாட்டேன். உங்களுக்கு வேண்டியதை செய்யறப்போ எதுவும் பேச மாட்டேன். உங்களுடைய நாலாவது தலைமுறைல நான் விஸ்வரூபம் எடுப்பேன். அப்ப உங்க வீட்டுக்கு மட்டும் இல்லே இந்த நாட்டுக்கே நான் வழி காட்டுவேன். இப்ப எனக்கு நீ செய். அப்புறம் உன் வம்சத்துக்கே நான் செய்யறேன். இதே நெமிலியிலே நாலாவது தலைமுறையில நான் யாருன்னு இந்த உலகத்துக்கே தெரிய வைக்கிறேன்"

இதுதான் பாலாவின் தெய்வவாக்கு. இதைக் கேட்டவுடன் அவருக்கு சந்தோஷம் அதிகமானது. வீட்டிலுள்ள அனைவருக்கும் பரமதிருப்தி.

அதுமட்டுமல்ல. பாலாவின் இந்தக் குடும்பத்தில் மாரியம்மனும் சேர்ந்து கொண்ட கதை மிகவும் சுவாரஸ்யமானது. கொஞ்சம் சோகமும் இணைந்தது. ஆம் ஒரு நவராத்திரியின் போது முடிவில் சண்டி ஹோமம் நடத்தலாம் என முடிவானது. ஹோமத்தின் முடிவில் பலி ஒன்று தர வேண்டும். அதற்கென பூசணிக்காயை பலியாகத் தரலாம் என முடிவு செய்யப்பட்டது.

அதே போல் நவராத்திரி முடிவில் சண்டி ஹோமம், பலி எல்லாம் நடந்து முடிந்தது. நவராத்திரி முடிந்தவுடன் சுப்பிரமண்ய அய்யரின் இரண்டு பேரன்கள், ஒரு பேத்தி உட்பட மூவருக்கு அம்மை வந்து உடலெல்லாம் கொப்புளம், கொப்புளமாக வந்துவிட்டது.

மூவரையும் வாழை இலையில் படுக்க வைத்திருந்தனர். இந்த நிலையில் அங்கு இருந்த ஒரு பெண் மணி மேல் தெய்வம் வந்தது. "நான்தான்டா மாரியம்மா வந்திருக்கேன். இந்த மூணு பேர்ல ஒருத்தனை நான் எடுத்துக்கறேன். எனக்கு கடைசி குழந்தை கிருஷ்ணமூர்த்தியை கொடுத்துடுங்க. நான் உங்க கூடவே தலைமுறைய தலைமுறையா வந்து நல்லது செய்வேன்.

நான் இங்கே இருக்க ஆசைப்படறேன்" எனச் சொல்ல வீட்டில் இருந்தவர்கள் "ஓ" எனக் கதறி ஆள் மாற்றி ஆள் அழ, இலையில் படுத்திருந்த கிருஷ்ணமூர்த்தி இரண்டடி உயரத்துக்கு எழும்பி அந்தரத்தில் நின்று பிறகு இறங்க, அடுத்த அரை மணியில் உயிர் பிரிந்தது.

சுப்ரமண்ய அய்யர் மற்றவர்களிடம் "இது எனக்கு நேத்தே தெரியும். கிருஷ்ணமூர்த்தி பிறந்தப்போவே சொன்னேன், அவனுக்கு அல்ப ஆயுசுன்னு. அல்ப ஆயுசா எங்கேயோ சாகிறதுக்கு பதிலா அம்மை வந்து, அம்மன் கிட்டப் போய்ச் சேர்ந்தான். எல்லாம் நல்லதுக்குத்தான்."

அவர் சொன்னதைக் கேட்டு அனைவரும் சிறிது ஆறுதல் அடைந்தனர். இப்படித்தான் மாரியம்மா எங்கள் குடும்பத்தில் வந்து இணைந்தாள். அதன் பிறகு நவராத்திரி நடக்கும் போது மாரியம்மனுக்கு அபிஷேகம் நடத்தி விட்டுத்தான் செய்வார்கள்.

இந்த வழக்கம் எப்படியோ நடுவில் நின்றுபோனது. பிறகு நவராத்திரி தொடக்கத்திலோ, முடிவிலோ வீட்டில் இரண்டு மூன்று குழந்தைகளுக்கு அம்மை வந்துவிடும். ஒவ்வொரு முறையும் இது தொடர ஒரு முறை "மாரியம்மன் எனது தாயின் கனவில் ஒரு பெண் வடிவில் தோன்றி "எனக்கு அபிஷேகம் பண்ண மறந்துட்டிங்களா? இல்ல என்னையே மறந்துட்டீங்களா?" எனக்கேட்டு விட்டு மாரியம்மன் கோவிலுக்குள் சென்று மறைய, அதன்பிறகு தான் மீண்டும் நவராத்திரி வந்தபோது மாரியம்மனுக்கு அபிஷேகம் செய்தோம்.

அதிலிருந்து நவராத்திரியின்போது குழந்தைகளுக்கு அம்மை வார்ப்பது நின்றுவிட்டது. அதன்பிறகு பாலாவின் பாடலில் "மாரியைப் பொழியும் மாரியும் நீயே அன்புடன் வருவாயம்மா" என்ற வரிகள் இணைந்தது.

6

மழலைகள் தோற்றம் மகிழ்ச்சியில் ஏற்றம்!

வீரராகவ அய்யருக்கு குழந்தைகள் இல்லை. அந்தக் குறையைப் போக்க அவர் தனது தம்பியின் குழந்தைகளைத் தன் குழந்தைகள் போல வளர்த்து வந்தார். அவ்வளவு பெரிய சத்திரத்தில் மழலைகளின் சிரிப்பொலி கேட்டால், அதில் ஏற்படும் மகிழ்ச்சியைச் சொல்ல வார்த்தைகள் ஏது?

சுப்ரமண்ய அய்யர்-சுப்புலட்சுமி அம்மையார் மூலம் இரண்டாம் தலைமுறை இனிதே உருவானது. மொத்தம் எட்டுக் குழந்தைகள்.

1. T.K. ஜானகிராமய்யர்.

(இவர்தான் மூத்தவர். நெமிலி கிராமத்துக்கே முடிசூடா மன்னராகத் திகழ்ந்தவர். நெமிலிக்கு பலவித வசதிகளை ஏற்படுத்தித் தந்தவர். நெமிலி எழில்மணி எனும் முத்தை ஈன்றெடுத்து உலகத்துக்குத் தந்த உத்தமர்)

2. அம்மாயி அம்மாள்.

(மூத்த மகள். பாலாபீடம் அமையக் காரணமாக இருந்த G.KV. சுப்ரமண்ய அய்யரைப் பெற்றெடுத்த புண்ணியவதி. பாலா வீட்டுக்கு வந்த பின்பு பிறந்த முதல் பெண் வாரிசு)

3. T.K. சுந்தரராமய்யர்.

(தந்தை சுப்ரமண்ய அய்யருக்கு அடுத்து ஐம்பத்தி ஐந்து வருடங்கள் பாலாவுக்கு பூஜைகள் நடத்தி வந்த புண்ணியர்.)

4. பாலாம்மாள்.

(பாலாவின் பெயர் கொண்ட பாக்கியசாலி. மங்கலம் எனும் கிராமத்திற்கே சக்கரவர்த்தியாகத் திகழ்ந்த சர்மா எனும் சாதனையாளனை ஈன்றெடுத்த சாந்த சொரூபி.)

5. காமாட்சி அம்மாள்.

(என்னைப் பெற்றெடுத்த தாய்க்கு உறுதுணையாக கடைசிவரை இருந்த உத்தமி.)

6. கோபாலகிருஷ்ணன்.

(இன்று நெமிலி எழில்மணிக்கு உறுதுணையாக நின்று பாலாவின் பூஜைகளை நடத்திவரும் வீரராகவன் எனும் குணசீலரைப் பெற்றெடுத்த சத்தியசீலர்.)

7. T.K. வெங்கட்ராமய்யர்.

(இன்று வெகு விமரிசையாக நடந்து வரும் "லட்சார்ச்சனை" விழாவை முதன்முதலில் தொடக்கி வைத்த மறக்கமுடியாத மாமனிதர்.)

8. கிருஷ்ணமூர்த்தி.

(சிறு வயதில் மாரியம்மனால் கவரப்பட்டு மாரியின் பாதகமலங்களைச் சென்றடைந்த இளந்தளிர்.)

இந்த எட்டுக் குழந்தைகளுக்கும் ஒட்டு மொத்த கார்டியன் வீரராகவ அய்யர்தான். அவரது கண் காணிப்பில்தான் குழந்தைகள் வளர்ந்தன.

இதன் நடுவே இராமலிங்க அய்யருக்கும் திருமணம் நடக்கிறது. அவருக்கு மூன்று குழந்தைகள்.

1. கோதண்டராமன்.

(தன்னுடைய இளம் வயதிலேயே நோய் வாய்ப்பட்டு அகால மரணமடைந்தார்.)

2. திரிபுர சுந்தரி.

(திருமணமாகி குழந்தைகள் இல்லை. மற்றவர்களுக்கு தனது வாழ்வை அர்ப்பணித்தார்).

3. பாலசுப்ரமண்யம்.

(அனைத்தும் கற்றுத் தெளிந்தவர். இவருக்கு மட்டும்தான் வாரிசுகள்).

ஆலமரமாய் இராமஸ்வாமி அய்யர் இருந்தார். அதிலிருந்து ஐம்பது அறுபது விழுதுகள் அழகுடன் தோன்றின. வீட்டில் பிள்ளைச் செல்வம் வந்தது. அதைத் தொடர்ந்து கல்விச் செல்வம் வந்தது. அதனால் செல்வாக்கு வளர்ந்தது.

அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாக பனிக்கட்டி உருகுவது போல் பணம் காசு குறைந்தது. செல்வாக்கு இருந்தது. செல்வம் இல்லை.

இன்று வான் உயர்ந்து நிற்கும் "ஸ்ரீ பாலா பீடத்தின்" அஸ்திவாரங்களே இவர்கள்தான். இன்றையத் தலை முறைக்காக அன்றையத் தலைமுறை சொத்து சேர்த்து வைக்கவில்லை. மேற்சொன்னவர்களின் உழைப்பும், உன்னத முயற்சியும், உண்மையான பக்தியும்தான், எங்களுக்கு அவர்கள் விட்டுச் சென்ற உண்மையான சொத்து.

7

வளர்பிறைக்கு பின் வந்த தேய்பிறை!

வளர்பிறை என்று ஒன்றிருந்தால் தேய்பிறை என்று ஒன்றிருக்கும். இது இயற்கையின் நியதி. அந்த இயற்கையின் முடிவில் நாம் இருந்தோம், பிறகு இறந்தோம் என்றிருந்தால், அந்த வாழ்விற்கு அர்த்தமில்லையென ஆன்றோர்கள் கூறியிருக்கிறார்கள்.

நிலவு கூட முழு நிலவாக பிரகாசித்துப் பிறகுதான் தேய்கிறது. நாம் இந்த பூமிக்கு வந்து சென்ற பின்பு நமது வாழ்க்கை பிறருக்கு வரலாற்றுச் சான்றுகளாக இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. பிறரது வாழ்விற்கும், வளர்ச்சிக்கும் வழிகாட்டியாக இருந்தாலே போதுமானது.

நடமாடும் தெய்வம் என்று பிறர் சொல்லும் அளவுக்கு நாம் இருக்கவில்லையென்றாலும் நல்ல மனிதர் என்றாவது பெயர் எடுக்க வேண்டும். ஒருவரது மறைவு பெற்றவர்கள், உற்றவர்கள் மட்டுமின்றி மற்றவர்களுக்கும் துயரத்தை ஏற்படுத்துமானால் அந்த மனிதர் நல்ல மனிதர் என்பதில் சந்தேகமேயில்லை.

அந்த வகையில் இராமஸ்வாமி அய்யர் சாவித்திரி அம்மையார் மறைவுக்கு ஊரே கணணீர் விட்டு அழுதது. ஒரு நல்ல ஆத்மா மறைந்தால் நான்கு பேருக்கு

வருத்தமாகத்தான் இருக்கும். ஆனால் அந்த ஆத்மா உண்மையில் மறைவதே இல்லை. அது மக்களுக்கு என்றும் வழி காட்டிக்கொண்டுதானிருக்கும்.

இராமஸ்வாமி அய்யருக்குப் பிறகு சுப்ரமண்ய அய்யர் அவரது இடத்துக்கு வந்தார். புரோகிதத் தொழிலைத் தொடர்ந்தார். வீட்டில் பாலா பூஜைகளையும் செய்து வந்தார். வீரராகவ அய்யரோ தாலுக்கா போர்டு பள்ளி ஒன்றை நெமிலியில் அமைத்து, அதில் தலைமை ஆசிரியர் பதவி ஏற்று பள்ளியைத் திறம்பட நடத்தினார்.

இராமலிங்க அய்யர் அந்தப் பள்ளியில் பணிபுரிந்து வந்தார். வீரராகவய்யரின் சீரிய முயற்சியால் சுப்ரமண்ய அய்யரின் மகன்களான T.K. ஜானகிராமய்யர், T.K. சுந்தரராமய்யர், T.K. வெங்கட்ராமய்யர் மற்றும் இன்று இறைபணி மன்றத்தில் தலைவராக இருக்கும் G.K.V. சுப்ரமண்யம் உட்பட அனைவரும் பள்ளித் தலைமை ஆசிரியர்களாகவும், ஆசிரியர்களாகவும் இருந்து புகழ் பெற்றனர்.

இன்று ஊரிலிருக்கும் தொண்ணூறு சதவீதத்தினர் இவர்களிடம் கல்வி பயின்றவர்கள். வீரராகவய்யர் கல்விக் கண் ஊற்றாக இருந்தார். சுப்ரமண்ய அய்யர் பக்தி மார்க்கத்தின் ஊற்றாக இருந்தார். இன்றைய தலைமுறையை நல்ல முறையில் வழி நடத்திச் செல்வது, அவர்கள் கொடுத்த கல்வியும் பக்தியும் தான். இந்த இரண்டும் நல்ல ஒழுக்கத்திற்கு அஸ்திவாரமாக அமைந்தன.

வீரராகவய்யர் பள்ளியில் பணிபுரிந்தாலும் புரோகித வேலைகளுக்கும் சென்று வ்ருவார். காரணம் ஒட்டு மொத்தமாக பக்கத்து கிராமங்கள் எல்லாவற்றுக்கும் சுப்ரமண்ய அய்யரே புரோகிதம் பார்க்க வேண்டும் என்றால் அது முடியாத காரியம்.

ஒரு நல்ல முகூர்த்த தினம். நிறைய முகூர்த்தங்கள். அண்ணன் தம்பிகளான மூவரும் அதிகாலையிலேயே முகூர்த்தங்களை நடத்தி வைக்கச் செல்கின்றனர். இராமலிங்க அய்யர் எப்போதும் சுப்ரமண்ய அய்யரோடு உதவியாகச் செல்வார்.

நல்ல மதிய வேளை. முகூர்த்தங்களை முடித்துக் கொண்டு திரும்பி வரும் வேளையில் வீராகவஅய்யருக்கு ஒரே தாகம். ஒரு மரத்தின் கீழ் நின்று விடுகிறார். அது அவரது மரணதாகம் என்று தெரிந்து விட்டது. உடன் வந்த ஒருவரை, வீட்டிற்குச் சென்று தம்பிகளிடம் கூறி தண்ணீர் கொண்டு வரும்படிச் சொல்கிறார்.

உடன் வந்தவரோ "சாமி... அவங்க வந்துட்டாங்களோ, இல்லையோ, அவங்க இல்லாட்டி நானே தண்ணி கொண்டு வரட்டுங்களா?" என்றார். வீரராகவய்யரோ "போடா... எல்லாந் தெரியும் எனக்கு. அவங்க ரெண்டு பேரும் வந்துட்டிருப்பாங்க சீக்கிரம் வரச்சொல்லு" எனச் சொல்லி உட்காரக்கூட முடியாமல் துண்டை விரித்துப் படுத்துவிட்டார்.

சத்திரத்து வாசலிலேயே சுப்ரமண்ய அய்யர் நின்று கொண்டிருந்தார். அவருக்கு, நடக்கவிருக்கும் சம்பவத்தை பாலா ஏற்கனவே கோடிட்டு காட்டிவிட்டாள். வந்த ஆள் வீரராகவய்யர் தண்ணீர் கேட்ட விஷயத்தைக் கூற சுப்ரமண்ய அய்யரும், இராமலிங்க அய்யரும் விபரீதம் நடக்கவிருப்பதை அறிந்தவர்களாக தண்ணீர் எடுத்துக் கொண்டு ஓடிவருகின்றனர்.

மரத்தின் கீழ் நெமிலி கிராமத்திற்கே விடிவெள்ளியாய் இருந்த வீரராகவ அய்யர் தூங்கிய நிலையிலேயே இறைவனடி சேர்ந்துவிட ஊரே இருளில் மூழ்கியது. எல்லோரும் கதறி அழுதனர். ஊரே

ஸ்தம்பித்தது. வீரராகவய்யர் வீட்டுக்குக் கொண்டு வரப்பட்டார்.

வரலட்சுமி அம்மாள் அழுத நிலையில் மயங்கி விழுந்து விட்டார். ஊரே தூக்கம் கொண்டாடிய இரண்டாவது இழப்பு, மறக்கமுடியாத இறப்பு. பிறகு தனது அறுபதாவது வயதில் சுப்ரமண்ய அய்யரை பாலா அழைத்துக் கொண்டாள். அவரின் மறைவு அவருக்கு ஏற்கனவே தெரிந்துவிட்டதால், தனது மூத்த மகன் ஜானகிராமய்யரை முன்னதாக பள்ளிக்கு ஆளனுப்பி வரச் சொல்லிவிட்டார்.

இரண்டாவது தலைமுறை, தலை எடுத்தபோது முதல் தலை முறையைச் சேர்ந்தவர்கள் மறைய, இவர்களை வழி நடத்திச் செல்ல பாலா சுப்புலட்சுமி அம்மாளைத் தேர்ந்தெடுத்தாள்.

8

நெஞ்சை நிமிர்த்திய நெமிலியின் வளர்ச்சி!

'பெயர் சொன்னால் போதும் தரம் எளிதில் விளங்கும்' என்று ஒரு விளம்பரம் வருமே. அது போல T.K. ஜானகிராமய்யர் பெயர் சொன்னால், வீட்டிலுள்ளவர்களுக்கு பயம் வரும். ஆனால் ஊருக்கோ பலன்கள் வரும். ஆம்! நெமிலி என்ற கிராமத்திற்கு எண்ணற்ற பலன்கள் அவரால் வந்தவை. ஆரம்ப கால விஞ்ஞான வசதிகளை நெமிலிக்குக் கொண்டுவந்து அழகுடன் அறிமுகப் படுத்தியது அவர்தான்.

நெமிலிக்கு மின்சார வசதி கிடைக்க முழு முதற் காரணம் அவர்தான். நெமிலியைச் சுற்றியுள்ள கிராமங்களை ஒன்றாக இணைத்து அதற்கு நெமிலியை தலைமைக் கிராமமாக மாற்றினார். அது மட்டுமின்றி அன்றைய காலத்தில் "மாடல் வில்லேஜ்" என்ற ஒரு திட்டம் இருந்தது. ஏதாவது ஒரு கிராமத்தை "மாடல் வில்லேஜாகக் காட்டினால் அந்தக் கிராமத்திற்கு கூடுதல் வசதிகள் உடனடியாக வந்து சேரும்.

T.K. ஜானகிராமய்யர் தனது முழு முயற்சியால் நெமிலியை மாடல் வில்லேஜாக மாற்றிக் காட்ட நெமிலிக்கு கூடுதல் வசதிகளை அரசு செய்து கொடுத்தது. அதன்

காரணமான மின்சார வசதி, சாலைவசதி, குடிநீர் வசதி என ஒன்றன் பின் ஒன்றாக வர ஜானகிராமய்யரின் முயற்சியால் நெமிலி நெஞ்சை நிமிர்த்தியது.

நெமிலிக்காக பாடுபட்ட அவரது பெயரில் ஒரு தெருவோ, அல்லது ஒரு உருவச்சிலையோ, இல்லை. இன்றைய நெமிலி பேருராட்சி கட்டடத்தில் ஒரு திரு உருவப்படமோ இல்லையென்பது ஆச்சர்யமான, அதே சமயம் வருந்தத் தக்க ஒரு விஷயமாகும்.

ஆனால் அவர் தந்த கல்வியினால் அனைவரின் உள்ளங்களிலும் சிலையாக் - தெய்வமாக வாழ்கிறார் என்றால் அது மிகையாகாது.

9

பிள்ளைகள் நடுவே நடமாடும் குலதெய்வம்!

சுப்புலட்சுமி அம்மையார் இங்கு வந்த பிறகுதான் அன்னை பாலா நெமிலிக்கு வந்தாள். அன்னை பாலாவின் மறுபிம்பம் சுப்புலட்சுமி அம்மாள் என்பதற்கு ஒரு சான்று இந்த சம்பவம். ஒரு நாள் மாலை சூரியன் அஸ்தமிக்கும் வேளை! நல்ல உயரமும், உடற் கட்டும் கொண்ட, நீண்ட வெண்ணிற தாடி வைத்திருந்த சாமியார் ஒருவர் சத்திரத்துத் திண்ணையில் வந்து உட்கார்ந்து குடிக்கத் தண்ணீர் கேட்டார்.

ஜானகிராமய்யர் குடிக்கத் தண்ணீர் கொண்டு வந்து கொடுக்க, சாமியார் அதை வாங்கிக் குடித்து விட்டு ஜானகிராமய்யரைப் பார்த்து

"உன் தம்பிகளைக் கூப்பிடு..." என்கிறார். தம்பிகள் வருகின்றனர். "... ஸ்வாமி நீங்க யாரு? எங்கே இருந்து வர்றீங்க..." ஜானகிராமய்யர் கேட்க

"நான் யாருன்னு எனக்கே தெரியாது! ஆனா நீ யாருன்னு எனக்குத் தெரியும். ஆமாம் உங்க குலதெய்வம் எது?" சாமியார் கேட்க அவர்களோ "வீரபத்ரஸ்வாமியான முருகன்தான் எங்க குல தெய்வம்" என்கின்றனர்.

"ஏண்டா... நீங்க இப்ப ஒரு குழந்தையை கும்புடறீங்க. கேட்டா வீரபத்ரஸ்வாமி குலதெய்வம்னு பொய் சொல்றீங்க... அப்படித்தானே!"

சாமியார் தீர்க்கமாகப் பார்த்தார். உடனே சுந்தர ராமய்யர் "ஆமாம்... நீங்க சொல்றது நிஜம்தான் ஸ்வாமி. வீரபத்ர ஸ்வாமி குலதெய்வம். ஆனா தினமும் பூஜைகள் பண்றது பாலாவுக்குத்தான். அதனால ஏதாவது தெய்வ குத்தம் வருமா ஸ்வாமி?" பயத்தோடு கேட்டார்.

"ஏண்டா... அம்மாவுக்கு செஞ்சா பிள்ளை கோவிச்சுப்பானா? பாலா யாருடா?" சாமியார் சிரித்தபடி கேட்டார். ஜானகிராமய்யரோ திருப்பி அவரிடமே "எல்லாம் தெரிஞ்ச நீங்கதான் ஸ்வாமி அதையும் சொல்லணும்" என்றார்.

"ஏண்டா காசுக்கு எப்படி ரெண்டு பக்கமோ அது போல பாலாவுக்கும் ரெண்டு பக்கம். ஒரு பக்கம் இந்த உலகத்தையே படைச்ச தாய். இன்னொரு பக்கம் கள்ளம் கபடமில்லாத சின்னக் குழந்தை. அதுவும் எப்படி ஒரு நிமிஷம், ஒரு இடத்துல நிக்காம விளையாடிக்கிட்டே இருக்கற துறுதுறுப்பான குழந்தை.

பெரியவங்கள ஒரு இடத்துல உக்காத்திவச்சிடலாம் அது கஷ்டமில்ல. சின்னக் குழந்தையை அதுவும் பாலாவை ஒரு இடத்தில உக்காத்திவக்கிறது ரொம்ப ரொம்பக் கஷ்டம். ஆமா நீங்க யாராவது பாலாவை நேரிலே பாத்திருக்கீங்களா?" என சாமியார் கேட்க, எல்லோரும் இல்லையென தலையாட்ட, உடனே சாமியார் "உங்க அம்மாவைக் கூப்பிடுங்க" என்கிறார்.

அவர்கள் தாய் சுப்புலட்சுமி அம்மா வெளியே வர, சாமியார் கை கூப்பி வணங்குகிறார்.

"இவங்கதாண்டா அந்த பாலா... விழுந்து கும்பிடுங்க..." எனச் சொல்ல அனைவரும் சுப்புலட்சுமி அன்னையின் காலில் விழுகின்றனர். சாமியார் சிரித்துக் கொண்டே செல்கிறார். அதன் பிறகு சாமியார், கண்ணில் படவே இல்லை.

10

மூன்றாம் தலைமுறையின் முத்தான முகவுரை!

இரண்டாம் தலைமுறை தொடங்கி மூன்றாம் தலைமுறை வரை பாலாவிற்கான பூஜைகளை திரு .T.K. சுந்தரராமய்யர் செய்து வந்தார். இங்கே ஒரு வியப்பூட்டும் விஷயத்தை நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். மூத்தவர் வீரராகவய்யர் இருக்க இரண்டாமவரான சுப்ரமண்ய அய்யருக்குத்தான் பாலா பூஜைகள் செய்யும் வாய்ப்புக் கிடைத்தது.

அதே போல் மூத்தவர் ஜானகிராமய்யர் இருக்க இரண்டாமவரான சுந்தரராமய்யர்தான் பூஜைகளை செய்து வந்தார். இந்த நான்காவது தலைமுறையில் மூத்தவனாக நானிருக்க, இரண்டாவது மகனான எனது தம்பி மோகனகிருஷ்ணன்தான் பாலா பூஜைகளை செய்து வருகிறான். வியக்கத்தக்க இந்த ஒற்றுமை வருகின்ற தலைமுறையிலும் தொடரும் என நினைக்கிறேன்.

சரி; கதைக்கு வருவோம். மூன்றாவது தலைமுறையில் சத்திரம் நிரம்பி வழிந்தது. நெமிலி கிராமத்துக்கு விடியலைத் தந்த T.K. ஜானகிராமய்யர் கிரியம்மாளை மணந்து நான்கு குழந்தைகளுக்குத் தந்தையானார்.

1. ராமமூர்த்தி.

(நெய்வேலி NLCயில் பணிபுரிந்து தற்போது ரிடையராகி மதுராந்தகத்தில் வசிக்கிறார். அவருக்கு இரண்டு ஆண் மற்றும் ஒரு பெண் குழந்தை).

2. வெங்கட சுப்ரமண்யம்.

(NLCயில் பணிபுரிந்து ரிடையராகும் சமயத்தில் மிகப் பெரிய லாரி விபத்து ஒன்றில் சிக்கி, நெய்வேலி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, அன்னை பாலாவின் ஒரே துணையால் உயிர் பிழைத்தவர். இவருக்கு மூன்று பெண் குழந்தைகள், இரண்டு ஆண் குழந்தைகள்.)

3. பாண்டுரங்கன் (நெமிலி எழில்மணி)

(பாலாவின் செல்லப் பிள்ளையான இவர் நெடுஞ் சாலைத் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றவர். பாலாவின் கவசம், சுப்ரபாதம் & பாடல்கள் போன்றவற்றை எழுதிய கவிஞர். வானதி பதிப்பகத்தின் மூலம் அன்னை பாலாவின் திருவிளையாடல்கள், அற்புதங்கள் & லீலா வினோதங்கள் போன்றவற்றை எழுதிப் புகழ் பெற்ற புண்ணியர். அத்துடன் என்னையும், அன்னை பாலாவுக்கு பூஜைகள் செய்யும் எனது தம்பியையும் ஈன்றெடுத்த தந்தை.)

4. வசந்தாம்மாள்

(மூன்றாவது தலைமுறையின் முதல் பெண் வாரிசு. ராமமூர்த்திக்கு அடுத்துப் பிறந்தவர். நான் உட்பட பல பேருக்கு கிடைத்த ஒரே ஒரு முத்தான அத்தை. இவருக்கு மூன்று ஆண்குழந்தைகள். பாலாவுக்கு சேவைகள் புரிவதில் முதலில் நிற்பவர்.)

T.K. ஜானகிராமய்யரின் தங்கையும், வீட்டின் முதல் பெண் வாரிசுமான அம்மாயி அம்மாளுக்கு இரண்டு குழந்தைகள்.

1. G.K.V. சுப்ரமண்யம்.

(வீட்டிற்கே பெரியவர். இறைபணி மன்றத்தின் தலைவர். இந்தக் கதை எழுதத் தேவையான பல விஷயங்களை எனக்குக் கூறியவர். பாலா பீடம் வரக் காரணமாக இருந்தவர். தனது தம்பியின் குழந்தைகளை வீரராகவய்யர் எப்படிப் பொறுப்புடன் வளர்த்து ஆளாக்கினாரோ அதுபோல தனது தம்பி குழந்தைகளை வளர்த்து ஆளாக்கியவர். நெமிலி ஸ்ரீ பாலா பீடம் உருவாகக் காரணமாக இருந்தவர்.)

2. G.K. பாலசுப்ரமண்யம்

(திருமதி நாகலட்சுமி எழில்மணியை பெற்றெடுத் தவர். நல்ல முருக பக்தர். அண்ணனிடம் தனது மூன்று குழந்தைகளையும் ஒப்படைத்துவிட்டு அகால மரணமடைந்த அன்புத்தம்பி.)

பாலாவின் பூஜைகளைச் செய்து வந்த T.K. சுந்தரராமய்யருக்கு மூன்று குழந்தைகள் 1. விருத்தகிரி. 2. சரஸ்வதி. 3. ராஜேஸ்வரி.

நவராத்திரியில் லட்சார்ச்சனைக்கு வித்திட்ட T.K. வெங்கட்ராமய்யருக்கு ஐந்து குழந்தைகள்.

1. பாலகிருஷ்ணன். 2. கிரிஜா. 3. ஜானகிராமன் 4. சாந்தி. 5. உஷா.

T.K. கோபால கிருஷ்ணய்யருக்கு இரண்டு குழந்தைகள்.

1. சந்தானம். (இருபது வயதில் இறைவனடி சேர்ந்தவர்.

2. T.K.G.வீரராகவன்.

(TNEBயில் பணிபுரிந்து தற்போது ரிடையராகி, இப்போது பூஜைகள் செய்து வரும் மோகனுக்கு

கார்டியனாக இருந்து, பாலாவுக்கு பூஜைகள் செய்து வரும் இவருக்கு இரண்டு பெண் குழந்தைகள், ஐந்து ஆண் குழந்தைகள்.)

நான் மேற்குறிப்பிட்ட நபர்களுக்கு பிறந்தவர்கள், அவர்களுக்கு பிறந்த குழந்தைகள் என பட்டியலிடுவது நீண்டு கொண்டே போகிறது. இத்தனை பெயர்களையும் நாம் எழுதிப் படிக்கவே இவ்வளவு கஷ்டமாக இருக்கிற தென்றால், இத்தனைப் பேர்களும் ஒரு இடத்தில் கூடுவது எவ்வளவு கஷ்டம். அதுவும் வருடத்திற்கு இரண்டு (அல்லது) மூன்று முறை ஒரு இடத்தில் கூடுவதென்றால் அது நடக்கக் கூடிய காரியமா. ஒவ்வொருவரும் ஒவ்வொரு மூலையில் இருக்கிறார்கள்.

ஆனால் எங்கள் அன்னை பாலா, ஆசை பாலா, அன்பு பாலா அதை சர்வ சாதாரணமாக நடத்திக் காட்டுகிறாள். நவராத்திரியின் போது எத்தனை உறவினர்கள் இருக் கிறார்களோ அத்தனை உறவினர்களும் நெமிலியில் ஒன்று கூடி "நாங்கள் அனைவரும் நெமிலி பாலா குடும்பத்தைச் சேர்ந்தவர்கள்" என்று பெருமை பொங்கக் கூறுவதை நீங்களும் ஒரு முறை நெமிலிக்கு வந்து பார்த்தால் தெரியும்.

11

உறவினர்கள் இடமாற்றம் உறைவிடமும் கைமாற்றம்!

நெஞ்சை நிமிர்த்திய நெமிலியின் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்த T.K. ஜானிகிராமய்யர் மறைவுக்குப் பிறகு பூஜைகள் செய்துவந்த T.K. சுந்தரராமய்யருக்கு காவேரிப்பாக்கத்தில் வேலை மாற்றம் வந்து விடுகிறது. அதற்கு முன்பாக அவரது தம்பியான T.K. வெங்கட் ராமய்யருக்கு அரக்கோணத்திற்கு வேலைமாற்றம் வந்து விடுகிறது.

அன்றைய காலகட்டத்தில் பஸ் வசதி கிடையாது. சைக்கிளில்தான் செல்லவேண்டும். தினமும் போய் வருவது கடினம். ஆகவே T.K. வெங்கட்ராமய்யர் தனது குடும்பத்தோடு அரக்கோணம் சென்றுவிட்டார். T.K. சுந்தரராமய்யரோ பூஜைகள் செய்ய வேண்டும். அவரும் குடும்பத்தோடு காவேரிப்பாக்கம் செல்ல நினைத்தார்.

G.K.V. சுப்ரமணய்த்திற்கு போளிப்பாக்கத்தில் தலைமை ஆசிரியர் வேலை. அவரது குடும்பமும், அவரது தம்பி குடும்பமும் நெமிலியில். இவருக்கும் என்ன செய்வதென்று குழப்பம். இதன் நடுவில் பாலா “தன்னை நெமிலியிலிருந்து அகற்ற வேண்டாம், அப்படி அகற்றினால் உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவருக்கும் கஷ்டங்கள்

வரும்" என்றதாக பூஜை செய்யும் T.K. சுந்தரராய்யருக்கு உத்தரவு வந்தது.

"கஷ்டமோ நஷ்டமோ நீ என்னுடன் வந்தே தீர வேண்டும்" என பாலாவை தன்னோடு அழைத்துச் சென்றுவிட்டார். 1954 ஆம் வருடம் அவர் தனது குடும்பத்தோடு பாலாவையும் எடுத்துச் சென்றார். படிப்பை முடிக்க வேண்டி T.K. ஜானகிராமய்யரின் மகனான பாண்டுவும் காவேரிப்பாக்கம் சென்றுவிட்டார்.

அதற்கு முன்பாகவே ஜானகிராமய்யரின் மூத்த மகன்களான ராமமூர்த்தியும், வெங்கட சுப்ரமண்யமும் நெய்வேலியில் உள்ள NLCயில் வேலை கிடைத்ததால் நெய்வேலி சென்று விட்டனர். கோபாலகிருஷ்ணய்யர் மறைவுக்குப் பின்பு அவரது மகனான T.K.G. வீரராகவன் அவர்கள் வேலூரில் வேலை கிடைத்ததால் வேலூருக்குச் சென்றுவிட்டார்.

இப்படியே எல்லோரும் தங்கள் குடும்பத்தோடு நெமிலியை விட்டுச் சென்று கொண்டே இருந்தனர். மூன்றாம் தலைமுறையில் மூலைக்கு ஒருவராய்ச் சென்று விட்டனர். பாலா சொன்ன தெய்வ வாக்கு நான்காம் தலைமுறையில் நான் நெமிலியில் விஸ்வரூபம் எடுப்பேன் என்பதாகும். ஆனால் பாலாவே நெமிலியை விட்டுச் சென்றுவிட அவளது தெய்வ வாக்கு எப்படிப் பலிக்கும். கடைசியாக நெமிலி சத்திரத்திலிருந்தது G.K.V. சுப்ரமண்யர் அய்யர் குடும்பந்தான்.

ஆனால் ஒன்று மட்டும் நடந்தது. "நான் நெமிலியை விட்டுச் சென்றால் அனைவருக்கும் கஷ்டங்கள் உண்டாகும்" என்று பாலா சொன்ன உத்தரவு சீக்கிரமே நடந்தது. G.K.V. சுப்ரமண்ய அய்யர் தனது மனைவியைச் சத்திரத்தில் விட்டு விட்டு ஒரு முக்கிய அலுவலுக்காக

சித்தூர் செல்கிறார். உடன் தனது தம்பி குடும்பத்தையும் குழந்தைகளையும் அழைத்துச் செல்கிறார்.

சென்ற இடத்தில் குழந்தைகளுக்கு ஒருவர் மாற்றி ஒருவராக டைபாய்டு ஜுரம் வந்து விட, அங்கேயே தங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. வைத்தியம் பார்க்கவேண்டி அவர் அங்கேயே இருந்துவிட, நெமிலி யிலிருந்த சில அன்பர்கள் (தீயவர்கள் என்று குறிப்பிடுவானேன்?) "அய்யர் குடும்பத்துக்கு எதுக்கு இவ்வளவு பெரிய சத்திரம்?" என கிராம அதிகாரிகள் மற்றும் கல்வி அதிகாரிகள் சில பேரிடம் கூறி, அந்த சத்திரத்தை பள்ளியாக மாற்றி விட்டனர்.

G.K.V. சுப்ரமண்ய அய்யரின் மனைவியை பாத்திர பண்டங்களோடு ஒரு சிறிய அறையில் தள்ளி விடடு, மற்ற எல்லா இடங்களையும் வகுப்பறைகளாக மாற்றி சிறுவர் சிறுமிகளைக் கொண்டு வந்து நிரப்பிவிடுகின்றனர். "என்னடா சினிமாவில் வருவ்து போல் இருக்கிறதே என்று நினைக்கிறீர்களா? இது வெறும் கதையல்ல. கற்பனையல்ல. ஒரு காலத்தில் நெமிலியில் கொடிகட்டிப் பறந்த புகழ் பெற்ற அய்யர் குடும்பத்துக்கு ஏற்பட்ட பரிதாபமான நிலை இது. சினிமாவில் வருவது போன்றே அன்றைய நெமிலி வாழ் பொதுமக்களும் கைகட்டி வாய்மூடி கண்டு கொள்ளாமல் இருந்துவிட்டனர்.

பாழடைந்த, பேய்கள் நிறைந்த அந்த சத்திரத்தை புனித ஸ்தலமாக மாற்றியவர் இராமஸ்வாமி அய்யர். அந்த சத்திரத்தை நல்ல முறையில் சீர்படுத்திய பெருமை G.K.V. சுப்ரமண்ய அய்யரைச் சாரும். அந்தக் கால கட்டத்திலேயே கிட்டதட்ட பத்தாயிர ரூபாயை அதற்கென செலவு செய்தார்.

அந்தச் சத்திரம் இன்று கை மாறிப் போனது. திரும்பி வந்த அய்யர் குடும்பத்துக்கு அதிர்ச்சி. அனாதை போல

அவரது மனைவி ஒரு மூலையில் பாத்திர பண்டங்களோடு அமர்ந்திருக்க கோபம் கொண்டு உடனே கோர்ட்டுக்கு அவர் செல்லவில்லை. இந்த நிலைக்கு ஆளாக்கியவர்கள் யார் என்று தெரிந்தும் அவர்களோடு சண்டை போடச் செல்லவில்லை. தந்தையின்றித் தவிக்கும் தனது தம்பி குழந்தைகளோடும், குடும்பத்தோடும் ஒரு வாடகை வீட்டிற்குச் சென்றார். இதில் கொடுமை என்னவென்றால் நெமிலியிலிருந்த யாரும் இதைப் பற்றிக் கவலைப் படவோ, வருத்தப்படவோ இல்லை என்பதுதான்.

12

கனவிலே சென்றவள் கவலையை வென்றவள்!

நெமிலி பாலாவின் பாதம் வீழ காவேரிப் பாக்கம் என்ன புண்ணியம் செய்ததோ. ஊருக்குள்ளே அழகிய ராமர் கோயில் தெருவில் பாலா நுழைந்தாள். வாடகைக்கு வீடு கிடைத்தது. T.K. சுந்தரராமய்யர் தனது அன்றாட பூஜைகளை முடித்துக் கொண்டு தினமும் பள்ளிக்குச் சென்று மாலை வீடு திரும்புவார்.

நாட்கள் நகர்ந்தது. நவராத்திரி நெருங்கியது. "பாலாவிற்கு நவராத்திரி பூஜைகள் மற்றும் சண்டி ஹோமம் செய்ய வேண்டும். தங்கள் ஒத்துழைப்பும் அனுமதியும் எங்களுக்குத் தேவை" என அய்யரவர்கள் வீட்டு உரிமையாளரிடம் கூற அவரோ "நீங்க வீடு வாடகைக்கு வந்தப்ப இதையெல்லாம் சொல்லலை. இங்க அதெல்லாம் முடியாது. இந்த வீட்டுல ஹோமம் செய்ய நான் ஒத்துக்க மாட்டேன்" என்று பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

காரணம் நேற்று இரவு அய்யரும் அவரது மனைவியும் பேசிக் கொண்டிருந்ததை வீட்டு உரிமையாளர் கேட்டுவிட்டார். அவர்கள் பேசியது இதுதான். "போன வருஷம் வரைக்கும் நவராத்திரி நெமிலியிலே நடந்தது. இந்த வருஷம் முதன்முதலா இங்க நடக்கப் போகுது. கூட்டம்

நிறைய வந்தாலும் பிரச்சனை இல்லை. இடவசதி, தண்ணி வசதி எல்லாம் இருக்கு. பணவசதிதான் இல்லை. ஒம்பது நாள் செய்யாட்டியும் பரவால்ல. சண்டி ஹோமத்துக்கு முன்னாடி கடைசி மூணு நாளாவது நல்லபடியாச் செய்யணும். எல்லாம் அவகிட்டதான் இருக்கு." என இருவரும் பேசிக்கொண்டார்கள். இதுதான் வீட்டு சொந்தக்காரருக்கு பிடிக்காமல் போனது.

"இதப் பாருங்க! அறுபது வருஷமா நடந்துகிட்டு வந்த நவராத்திரி பூஜை. அதை நாங்க நிறுத்தமுடியாது. நிறுத்தவும் கூடாது. ஒரு நாலு நாளைக்கு நீங்கதான் அட்ஜஸ்ட் பண்ணிக்கனும்" அய்யர் பொறுமையாகக் கூறினார். வீட்டுக்காரருக்கு கோபம் வந்துவிட்டது.

"யார் வீட்டில யார் அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு போறது. நீங்க வீட்டைக் காலி பண்ணுங்க. இல்ல பூஜையை சத்திரத்துல, கோயில்ல வைங்க. அத விட்டுட்டு கும்பல் கூடி கூத்தடிக்க என் வீடு லாயக்கில்ல. நான் இப்பவே சொல்லிட்டேன்."

"அவ பூஜையை நிறுத்தவோ, மாத்தவோ எனக்கும் அதிகாரமில்ல. உங்களுக்கும் அதிகாரமில்ல. உங்களால என்ன பண்ணமுடியுமோ பண்ணிக்கிங்க. எனக்கு கவலை இல்ல." அய்யரவர்கள் வீராவேசமாகப் பேசிவிட்டாலும் மனதுக்குள் ஒரு மூலையில் கொஞ்சம் பயமிருக்கத்தான் செய்தது.

"அய்யரே, நாளைக்கு காலைல நீ முதல்ல வீட்டைக் காலி பண்றே. நான் வேற யாரையாவது கொண்டு வந்து வச்சிக்கறேன். உங்களுக்கும் எனக்கும் ஒத்து வராது. இப்பவே சொல்லிட்டேன். அப்புறம் எம்மேல வருத்தப்பட்டு பிரயோசனமில்லை. நீங்க வேற வீட்டைப் பாத்துக்குங்க. என்னால முடியாது"

வீட்டுக்காரர் முணுமுணுத்தபடி தன் வீட்டுக்குள் சென்றார். அய்யரவர்கள் மனைவிக்குப் பயம் வந்து விட்டது. வந்த இடத்தில் இதென்ன புதுப் பிரச்சனை என்று அழ ஆரம்பித்து விட்டார்.

இரவு முழுக்கத் தூங்கவில்லை. இன்னும் ஒரு மாதம்தான் இருக்கிறது. அதற்குள் வீட்டைக் காலி செய்துகொண்டு, மற்றொரு வீட்டுக்கு குடிபோக வேண்டும். வீட்டை சீர்படுத்தவே நேரம் சரியாக இருக்கும். இந்த நிலைமையில் நவராத்திரி எப்படி செய்வது? புது வீட்டுக்குச் சென்று அங்கும் ஒரு பிரச்சனை ஏதாவது ஒரு வடிவத்தில் தோன்றினால் என்ன பண்ணுவது?

இரவெல்லாம் கண் விழித்து இருந்ததால் அய்யரவர்களின் மனைவியான மீனாட்சி அம்மாளுக்கு கண்களெல்லாம் சிவந்துவிட்டது. அழுது அழுது முகம் வீங்கிவிட்டது. காலை வந்தது. வாசல் தெளித்து கோலம் போட வந்த மீனாட்சி அம்மாளுக்கு திடுக்கிட்டது. தெருவின் முனையில் வீட்டுக்காரர் நான்கைந்து பேரைக் கூட்டிக்கொண்டு வேகவேகமாக வந்து கொண்டிருந்தார்.

அம்மையாருக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. வீட்டுக்குள் ஓடிச் சென்று விஷயத்தைக் கூறினார்கள். வீட்டைக் காலி செய்யச் சொல்லி ஆட்களோடு வந்து வீட்டுக்காரர் மிரட்டப் போவதாக அனைவரும் நினைத்தனர். "பள்ளிக்குச் செல்லும் இரண்டு பெண் குழந்தைகள். மகனோ வெளியூரில் வேலை செய்து கொண்டிருக்கிறான். நாம் நான்குபேர் அவர்களை என்ன செய்துவிட முடியும். வீட்டைக் காலி செய்துவிடலாம்" என மீனாட்சி அம்மாள் பயத்தோடு கூறினார்.

அவர்கள் நான்கு பேரோடு ஐந்தாவதாக 'பாலா' எனும் அந்த அற்புத சக்தி இருப்பதை அவர்கள் நால்வரும் சுத்தமாக மறந்துவிட்டார்கள். வீட்டுக்காரரோடு வந்த

நான்கு பேரும் வீட்டு முற்றத்தில் வந்து நின்று கொண்டு தோண்ட ஆரம்பித்தார்கள். ஒவ்வொருத்தர் கையிலும் கடப்பாறை மண்வெட்டி இருந்தது.

அய்யரவர்கள் வெளியே வந்தார். அவருக்கு ஒன்றும் புரியவில்லை. அதற்குள் வீட்டுக்காரர் அவரைப் பார்த்து விட்டு கிட்டே வந்தார். "அய்யரே... என்னை மன்னிச்சுடுங்க. நான் உங்ககிட்ட கொஞ்சம் முரட்டுத்தனமாப் பேசிட்டேன்." எனச் சொல்லி "சீக்கிரம் தோண்டுங்க நேரமாச்சி" என்றார். தோண்டியவர்களில் ஒருவன் ஆச்சர்யத்தோடு "ஐயா... இங்க வந்து பாருங்கய்யா" என்றான்.

வீட்டுக்காரர் குனிந்து பார்க்க அங்கே ஒரு ஹோமகுண்ட அமைப்பு இருந்தது. உடனே அவர் ஓடிச் சென்று அய்யர்காலில் விழுந்தார்.

"சாமி... ராத்திரிகனவுல ஒரு சின்னப் பொண்ணு வந்து உன் வீட்டு முற்றத்திலே ஒரு ஹோமகுண்டம் புதைஞ்சிருக்கு. தோண்டிப் பாரு தெரியும். அதுலதான் எனக்கு சண்டி ஹோமம் நடக்கப் போகுது. அய்யர் குடும்பம் காலி செஞ்சா உன் குடும்பம் நடுத்தெருவுக்கு வந்துடும்னு சொல்லிச்சு சாமி. நீ எந்தப் பூஜை வேணும்னாலும் செஞ்சிக்க. வீட்டைக் காலி பண்ணாதே" என்றவுடன் அய்யரவர்கள் பாலாவை நினைத்து பெருமை பொங்க ஆனந்தக் கண்ணீர் வடித்தார்.

13

சுற்றமதை அகற்றினாள் சுப்ரமண்யத்தை அமர்த்தினாள்!

அருமையான ஒரு சதுரங்க ஆட்டத்தை அன்னை பாலா ஆடிக் காட்டினாள். ஒவ்வொரு காயாக நெமிலியிலிருந்து நகர்த்தினாள். ஒரு காயை மட்டுமே நெமிலியில் அமர்த்தினாள். அதுதான் G.K.V. சுப்ரமண்யம் என்ற காய். சுப்ரமண்ய அய்யர்தான், அன்று பாலா நெமிலிக்கு வரக் காரணமாக இருந்தவர். இன்று 'பாலா பீடம்' நெமிலிக்கு வரக் காரணமாக இருந்தவர் இந்த G.K.V.சுப்ரமண்ய அய்யர்தான்.

தனது தலைமுறை கட்டிக் காத்து வந்த சத்திரம் கையை விட்டுப் போனது. அவர் கலங்கவில்லை. கவலை கொள்ளவில்லை. கண்ணீர் விடவில்லை. தலைமை ஆசிரியராகப் பணியாற்றிய அவருக்கு பதினேழு கிலோ மீட்டர் தொலைவில் இருந்த போளிப்பாக்கம் என்ற கிராமத்திற்கு வேலை மாற்றல் வந்தது.

அவர் நினைத்திருந்தால் சத்திரம் போன கையோடு, குடும்பத்தை அழைத்துக்கொண்டு போளிப் பாக்கம் சென்றிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை. குடும்பத்தோடு அவரைப் போகவிடாமல் செய்த சக்தி எது? சைக்கிளுக்கு ஆள் அமர்த்திக் கொண்டு தினமும் 34

கிலோ மீட்டர் பள்ளிக்குச் சென்று வருவார். தினமும் 34 கிலோ மீட்டர் சென்று வர அவருக்குத் தெம்பு கொடுத்த சக்தி எது? அவரை குடும்பத்தோடு நெமிலியில் தங்க வைத்த அந்த சக்தி சாட்சாத் அன்னை பாலாதான் G.K.V. சுப்ரமண்ய அய்யர் தனது மனைவி மற்றும் தம்பி குடும்பத்தோடு கிட்டதட்ட ஒன்பது வருடங்கள் வாடகை வீடுகளில் தங்கி வாழ்ந்தார். T.K. ஜானகிராமய்யர் பிறந்த போது இருந்த செல்வமும் செழிப்பும், அவர் மறைந்த பிறகு கொஞ்சம் கொஞ்சமாக குறைய ஆரம்பித்து, பாலா நெமிலியை விட்டுச் சென்ற பிறகு மிகவும் ஏழ்மை நிலை ஏற்பட்டு ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு இடத்தில் அல்லல் பட்டது.

ஒவ்வொரு குடும்பமும் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமல்ல நஞ்சமல்ல. ஊருக்கே அன்ன தானம் செய்த அந்த அய்யர் குடும்பம் மூன்றாவது தலைமுறையில் மூலைக்கு ஒன்றாகச் சென்று ஒரு வேளை உணவுக்கு அவதிப்பட்ட அந்த அவலமான சூழ்நிலை என்றுமே மறக்க முடியாத ஒன்று. ஒவ்வொருவருடைய வாழ்விலும் ஏற்பட்ட கஷ்டங்களைப் பட்டியலிட்டால் ஒரு புத்தகம் எழுதும் அளவுக்கு நீண்டு கொண்டே செல்லும்.

ஒரு காலத்தில் நல்ல நிலையிலிருந்த G.K.V. சுப்ரமண்ய அய்யரும் காலப்போக்கில் கடன் வாங்கி குடும்பம் நடத்தும் நிலைக்குத் தள்ளப்பட்டார். எல்லோருக்கும் ஏகப்பட்ட சோதனைகள், மன வேதனைகள் ஏற்பட துன்பமும் துயரமும் கோரத் தாண்டவம் ஆடியது. அன்று பாலா, தன்னை நெமிலியிலிருந்து அகற்றினால் அளவற்ற சோதனைகள் ஏற்படும் என்று சொன்ன அந்த உத்தரவு உண்மையானது.

பதினேழு வருடங்கள் கழித்து பாலா மீண்டும் நெமிலிக்கு வந்த பின்புதான் படிப்படியாக முன்னேற்றம்

ஏற்பட்டது. திருமணங்கள் நடந்தது. பணக் கஷ்டம் குறைந்தது. மனக் கஷ்டம் குறைந்தது. மனத்தில் மகிழ்ச்சி நிறைந்தது. ஆனால் இந்தப் பதினேழு வருடங்களில் நடந்த பல சம்பவங்கள் சுவையானவை. அவற்றில் சிலவற்றை நாம் இந்த அத்தியாயத்திலும் வரும் அத்தியாயங்கள் சிலவற்றிலும் காண்போம்.

தீயவர்களின் வினையால் இருந்த இருப்பிடம் பறிபோனது. பாலா நினைத்திருந்தால் அந்த சத்திரம் மீண்டும் கைக்கு சிக்கியிருக்கும். ஆனால் அந்த இடத்தை பாலா மீண்டும் விரும்பவில்லை. இன்னும் சிறிது தூரம் தள்ளி ஆற்றுக்குப் பக்கத்தில் ஒரு இடத்தை அன்னை பாலா 1964 ஆம் ஆண்டு தேர்வு செய்தாள்.

அருணாசல முதலியார் என்பவரை கருவியாகக் கொண்டு அந்த இடத்தில் அய்யரவர்களை அஸ்திவாரம் போடச் சொல்லி, வீடு கட்ட ஒவ்வொரு கட்டத்திலும் உதவிகள் பலவற்றை முதலியார் மூலமாக கொடுத்து வந்தாள். G.K.V. சுப்ரமண்ய அய்யரும் அங்கும் இங்கும் கடன் வாங்கி கொஞ்சம் கொஞ்சமாக வீட்டைக் கட்டினார்.

வீட்டைக் கட்ட, மரச்சாமான்கள் பலவற்றை ஒரு அரிஜன அன்பர் ஒருவரிடம் கடனாக வாங்கியிருந்தார். கடன் வசூல் செய்ய வந்த அந்த அரிஜன அன்பர் வீட்டிலிருந்த தம்பி மகளான நாகலட்சுமியைப் பார்த்து "இந்தப் பொண்ணுக்கு நீங்க நினைச்சிருக்கற மாப்பிள்ளை தான் அமையும். உங்க சொந்தக்காரங்களே இதுக்கு முட்டுக்கட்டையாக இருக்காங்க. ஆனாலும் அந்தப் பையன்தாங்க உங்க பொண்ண கட்டிக்குவாங்க." எனச் சொல்லிவிட்டுச் சென்றார்.

T.K. ஜானகிராமய்யரின் கடைசி மகனான பாண்டுவிற்கு (எழில்மணி) நாகலட்சுமியை திருமணம்

செய்து வைக்கலாம் என G.K.V. அய்யர் நினைத்திருந்தார். வீடு கட்டி முடிந்தவுடன் கிரஹப்பிரவேசம் நடந்து முடிந்தது. மீண்டும் கடன் வசூல் செய்ய வந்த, அந்த அரிஜன அன்பர் அய்யரிடம்

"சாமி... கிரஹப் பிரவேசம் முடிஞ்சு போச்சு அடுத்து மூணு மாசத்துல பொண்ணு கல்யாணமும் முடிஞ்சுடும்" எனச் சொல்ல அய்யர் சிரித்தார்.

"வீடு கட்டிய கடனே தீரவில்லை. இதில் கல்யாணம் எப்படிப் பண்ணுவது" எனக் கேட்டார். ஆனால் அந்த அரிஜன அன்பரோ "சாமி... நான் சொன்னா நீ நம்பமாட்டே. இன்னும் மூணு மாசத்திலே கல்யாணம் நடக்குதா, இல்லையா பாரு" எனக் கூறி கடன் தொகையை வாங்கிச் சென்றார்.

இது நடந்தது 1967 ஆம் வருடம் பிப்ரவரி மாதம்.

14

பாலாவின் கணிப்பு
பாண்டு-நாகலட்சுமி இணைப்பு!

மூன்றாம் தலைமுறையில் நடந்த மிக முக்கியமான திருமணம். இந்தத் திருமணத்தை முழுக்க முழுக்க நடத்தி வைத்தது அன்னை பாலாதான் என்றால் உங்களுக்கு ஆச்சர்யமாக இருக்கும். பாலா சொன்ன தெய்வ வாக்கு "நான்காம் தலைமுறையில் நான் விஸ்வரூபம் எடுப்பேன்" என்பதாகும். மூன்றாம். தலைமுறையில் மூலைக்கு ஒருவராய்ச் சென்ற போதிலும் G.K.V. அய்யரை மட்டும் நெமிலியில் நிறுத்தி வைத்ததற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

முதல் காரணம் நெமிலியில் புதிதாக தனக்கென ஒரு இடம் அதாவது "பாலா பீடம்" வேண்டும் என்பது. இரண்டாவது காரணம் நான்காம் தலைமுறை தலையெடுக்க மூன்றாவது தலைமுறையில் ஒரு தெய்வீகத் திருமணம் நடக்க வேண்டும். அந்த தெய்வீகத் தம்பதிகள் மூலம் பிறக்கும் குழந்தையின் காரணமாக பல தெய்வீக மாற்றங்கள் நிகழ வேண்டும்.

மறைந்த T.K. ஜானகிராமய்யரின் கடைசி மகனான பாண்டுரங்கனை பாலா தேர்வு செய்தாள். பாண்டுரங்கன் அவர்கள் படிக்கும் காலத்திலேயே தாய் தந்தையை

இழந்தவர். ஒரு சித்தப்பா காவேரிப்பாக்கத்தில். மற்றொரு சித்தப்பா அரக்கோணத்தில். அண்ணன்கள் நெய்வேலியில் அக்கா மங்கலம் எனும் கிராமத்தில். தனது படிப்பை காவேரிப்பாக்கத்தில் தொடர்ந்தார். சித்தப்பா வீட்டிலும் கஷ்டம். இந்த நிலையில் அவரது அண்ணன் நெய்வேலியில் இருந்த வெங்கடசுப்ரமண்யம் தான் படிப்புச் செலவுகளை ஏற்றுக் கொண்டார். அங்கு அவருக்கும் கஷ்ட நிலைமை.

ஒருவாறாக கஷ்டப்பட்டு எஸ். எஸ். எல். ஸி. முடித்தவுடன் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் பரிட்சை எழுதி தேர்வு பெற்று நெடுஞ்சாலைத் துறையில் வேலைக்குச் சேர்ந்தார். பாண்டுவிற்கு வாழ்க்கைத் துணையாக, பிற்காலத்தில் பாலா பீடத்தைக் கட்டிக் காக்கும் அரணாக G.K.V. அய்யர் தம்பி மகள் நாகலட்சுமியைத் தேர்ந்தெடுத் தாள் பாலா.

இவர்கள் இருவருக்கும் திருணம் நடத்தலாம் என வீட்டில் பேசிக் கொண்ட போதிலும் பாண்டுவின் அக்காவான மங்கலம் வஸந்தாம்மாளும் அரக்கோணம் சித்தப்பா வெங்கட்ராமய்யரும் சேர்ந்து வேறு நல்ல இடத்தில் பெண் பார்க்கலாம் என முடிவு செய்து எங்கெல்லாமோ பெண் தேடினார்கள். பாலா சிரித்தபடி மீண்டும் காய்களை நகர்த்தினாள்.

எண்ணி இரண்டே மாதம் பாண்டு நாகலட்சுமி திருமணம் முடிவானது. இதில் இரண்டு ஆச்சர்யமான விஷயங்கள்.

1. அரிஜன அன்பர் சொன்னது போல மூன்று மாதத்துக்குள் திருமணம் நடந்தது.

2. என்னுடைய கணிப்பையா மாற்றுகிறாய் எனச் சொல்லி வஸந்தாம்மாள் ஊரான மங்கலத்திலேயே அதுவும் அவர்கள் வீட்டிலேயே திருமணத்தை பாலா நடத்திக் காட்டினாள்.

1967 ஆம் வருடம் மே மாதம் 15 ஆம் தேதி. பாணாவரம் அடுத்த மங்கலம் கிராமத்தில் ஏகப்பட்ட கூட்டம். உறவினர்கள் ஒரு புறம், நண்பர்கள் ஒரு புறம். மங்கலத்திலிருந்த வீடே கலகலப்பானது. வந்திருந்த நண்பர்களுக்காக ஒரு வீடு ஒதுக்கப்பட்டிருந்தது. நல்ல முகூர்த்த வேளையில் பாண்டுரங்கன் நாகலட்சுமி திருமணம் நடைபெற்றது. உறவினர்கள் அனைவருக்கும் ஆனந்தம். பாலாவுக்கு பரமானந்தம்.

திருமணம் முடிந்தது. தம்பதிகள் சாந்தி முகூர்த்த அறையில் நுழைந்தனர். சிறிது நேரத்திற்கெல்லாம் அன்னை பாலா, பாண்டுவின் சித்தப்பா மகள் சாந்தி வடிவத்தில் நாகலட்சுமியின் பக்கத்தில் கட்டிலில் வந்து அமர்ந்து கொண்டாள். நாகலட்சுமிக்கு பேச வாய் வராமல் ஏதேதோ உளர அன்னை பாலாவோ படுத்திருந்த நாகலட்சுமி மீது வந்து உட்கார்ந்து கொள்ள, பாண்டுரங்கனுக்கு ஒன்றும் தெரியவில்லை. அவர் கண்களுக்கு எதுவும் புலப்பட வில்லை.

நாகலட்சுமியோ “என்னங்க அவளை போகச் சொல்லுங்க... போகச் சொல்லுங்க எனக் கத்த, பாண்டுரங்கனோ “என்ன ஏதேதோ உளறுகிறாய்” என்று கத்த, இருவருக்கும் வாக்குவாதம் முற்றிவிட்டது. பாலாவோ சிரித்தபடி நாகலட்சுமி மீது படுத்துவிட, நாகலட்சுமியால் ஒன்றும் செய்ய முடியவில்லை. சுப்புலட்சுமி அம்மா, கிரியம்மாவுக்கு பிறகு பாலா ஐக்கியமானது நாகலட்சுமியிடம்தான். பாலா ஒவ்வொரு கட்டத்திலும் தனக்குத் தேவையானவர்களை தானே தேர்ந்தெடுத்துக் கொள்வதுதான் ஆச்சர்யமான விஷயம்.

அதன்பிறகு நாகலட்சுமி கண்ட கனவில் மூன்று பெண்மணிகள் ஒருவர் பின் ஒருவராக வந்தார்கள். முதல் பெண்மணி உள்ளே நுழைந்து சிரித்தபடி நாகலட்சுமி

பக்கத்தில் வந்து உட்கார்ந்து கொண்டு நான்தான் வரலட்சுமி அம்மா எனச் சொல்லி தலையைக் கோதி விடுகிறார். இரண்டாவது பெண்மணி சிரித்தபடி உள்ளே வந்து "நான்தான் சுப்புலட்சுமி அம்மா" எனச் சொல்கிறார்.

மூன்றாவதாக வந்தவர் "நான்தான் உன்னோட மாமியார் கிரியம்மா" எனக் கூறுகின்றார். நாகலட்சுமிக்கோ சந்தோஷம். "நீங்கல்லாம் உயிரோட வந்துட்டத நெனச்சா எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. நீங்க எங்கயும் போகக் கூடாது. எங்கூடத்தான் இருக்கணும். போக மாட்டேன்னு சத்தியம் பண்ணிக் கொடுங்க". என்று கேட்க மூவரும் சத்தியம் செய்து கொடுத்து

"நாங்க மூணு பேரும் உங்கூடவே இருப்போம் நீ எதுக்கும் கவலைப்படாதே" எனக் கூறுகின்றனர்.

காலையில் கண்விழித்த நாகலட்சுமி தனது கடைசி பாட்டியான காமாட்சி அம்மாளிடம் நடந்ததைக் கூற அனைவரும் ஆச்சர்யம் அடைந்தனர். ஒருவரிடம் ஒருவர் சொல்லிச் சொல்லி மகிழ்ந்தனர். பாலாவின் கணிப்பால் வந்த இணைப்பு என்றால் சும்மாவா?

15

தெய்வத்தை வேண்டுதல் தெய்வீகக் கலசம் தீண்டுதல்!

திருமணம் முடிந்து அனைவரும் நெமிலி திரும்பினர். இல்லற வாழ்க்கை இனிதே துவங்கியது. ஒரு சமயம் ஏதோ ஒரு காரணத்தினால் பயந்து போய் நாகலட்சுமிக்கு அபார்ஷன் ஆகிவிடுகிறது. மந்திரித்து விபூதி தருவதற்காக பகளா வீட்டு கிருஷ்ணமூர்த்தி என்பவரிடம் அழைத்துச் செல்கிறார் G.K.V. அய்யர். கிருஷ்ணமூர்த்தி என்பவரும் மந்திரித்து விபூதி கொடுத்து விட்டு, "இரவு கனவு வரும். அது என்ன கனவு என்று என்னிடம் வந்து கூறு" எனச் சொல்லி அனுப்புகிறார்.

அதே போல் இரவு கனவு வருகிறது. மறுநாள் மந்திரித்தவர் வீட்டுக்கு நாகலட்சுமி செல்கிறார். "இரவு கனவில் எனது தாத்தா சுந்தரராமய்யர் கோவிலுக்குச் சென்று திரும்பி வருகிறார். கையிலிருந்த பூக்கூடையில் தேங்காய், பழங்கள் இருக்கிறது. ஒரு தேங்காயை என்னிடம் கொடுத்தார். வாழைப்பழம் வேண்டுமா எனக் கேட்டார். இன்னுமொரு தேங்காய் வேண்டும் என்றேன். கொடுத்தார் பெற்றுக் கொண்டேன்" என்று நாகலட்சுமி சொல்ல,

மந்திரித்தவர் சிரித்தபடி "என்னம்மா பழத்தைக் கேக்காம விட்டுட்டியே? உனக்கு பெண் குழந்தை

வேணாமா" எனக் கேட்டார். நாகலட்சுமிக்கு ஒன்றும் புரியவில்லை "அம்மா... நேத்து உன் கனவுல வந்தது முருகன். நீ அவர்கிட்ட ரெண்டு தேங்காய் வாங்கினே. உனக்கு ரெண்டும் ஆம்பளைப் புள்ளைங்கதான். பழம் வாங்கியிருந்தா பொம்பளப் புள்ளை நிச்சயம்!" என்றார்.

அதன் பிறகு தெருவழியே சென்று கொண்டிருந்த அரிஜன அன்பரும் வெளியே இருந்த நாகலட்சுமியைப் பார்த்து "உனக்கு ரெண்டு ஆம்பளைப் பசங்க ராஜாவாட்டம் பொறப்பாங்க" எனக் கூறிவிட்டு சென்றார். முதல் ராஜாவாக 1968 ஆம் வருடம் ஜூன் மாதம் நான் பிறந்தேன். எனது பாட்டி கிரியம்மாவின் ஞாபகமாக கிரிதரன் என்றும் வேங்கடநாதன் அருள் வேண்டும் என்பதற்காக வெங்கட்கிரிதர் என்றும் பெயர் சூட்டினார்கள்.

நான் என்னைப் பற்றியும் என் மூதாதையர்கள் பற்றியும் புத்தகம் எழுதுவேன் என்று கனவிலும் நினைக்க வில்லை. சரி கதைக்குப் போகலாம். காவேரிப்பாக்கம் சென்றதிலிருந்து பாலாவுக்கு நவராத்திரி விழா வசதியின்மை காரணமாக கடைசி மூன்று நாட்கள் நடைபெறும். அதனைத் தொடர்ந்து சண்டி ஹோமம் நடைபெறும். அதற்குண்டான பூஜை செலவுகள் 900 ரூபாயிலிருந்து 1000 ரூபாய் வரை ஆகும்.

அதில் பாதிப் பணத்தை எனது தந்தை கொடுத்து விடுவார். மீதிப் பணத்தை எனது தாத்தா காவேரிப் பாக்கத்தில் வசூல் செய்து கொள்வார். இவ்வாறாக வருடா வருடம் நவராத்திரி விழா நடந்து வந்தது. எனது தாய் நாகலட்சுமி ஐந்து வருடங்கள் கழித்து மீண்டும் கர்ப்பவதி ஆனார்கள். ஏழாம் மாதம் எல்லோரும் நவராத்திரிக்காக காவேரிப் பாக்கம் சென்றார்கள் நானும் உடன் சென்றேன் எனக்கு சரியாக ஞாபகமில்லை.

நாளைக்குச் சண்டி ஹோமம். முந்தின இரவு எனது தாய்க்கு ஒரு கனவு ஏற்பட்டது. மெய் சிலிர்க்க வைக்கும்

அந்தக் கனவை எப்போது நினைத்துப் பார்த்தாலும் உடல் சிலிர்க்கும்.

நவராத்திரியின் போது முதலில் கலச ஸ்தாபனம் செய்வார்கள். ஒரு கலசத்தை நன்கு அலங்கரித்து அதற்கு கண், மூக்கு பொருத்தி உதடு வரைந்து, அதில் முழுத் தேங்காயை வைத்து ஒரு ரவிக்கைத் துணியை வைத்து, அதில் அன்னை பாலாவை ஆவாஹனம் செய்வார்கள்.

அந்த நவராத்திரி நாட்களின் போது பாலா அந்தக் கலச கும்பத்தில் இருப்பதாக ஐதீகம். அதுதான் உண்மையும் கூட. எனது தாய்க்கு வந்த கனவில் பூஜை நடக்கும் கூடத்தில் நின்று கொண்டு பாலாவைப் பார்த்து நேருக்கு நேர் பேசுவது போன்று வந்தது.

"அம்மா பழையபடி நீ நெமிலிக்கு வந்துடு. உனக்கு நவராத்திரியை நானே நடத்துகிறேன். நானூறு ஐநூறு என்ன நாலாயிரம் அஞ்சாயிரம் ஆனாலும் நானே நடத்துறேன். இன்னும் ஏன் *40,000* இல்ல *50,000* ஆனாக் கூட நான் நடத்துறேன். நீ நெமிலிக்கு வரணும். வருவியா? எவ்வளவு செலவானாலும் பரவாயில்லம்மா நீ எங்ககூட வந்துடு" என்று சொன்னதுதான் தாமதம்.

அங்கிருந்த கலச கும்பம் மெதுவாக எழும்பி வந்து, எனது தாயின் தலையைத் தொட்டு ஆசீர்வாதம் செய்ய கனவு கலைந்தது. கனவில் கலசக் கும்பத்தைப் பார்த்தாலே மிகவும் நல்லது. அந்தக் கலச கும்பமே நேரடியாக வந்து தலையைத் தொட்டு ஆசீர்வாதம் செய்ய என்ன பாக்கியம் செய்திருக்க வேண்டும். இந்த விஷயந் தெரிந்தது முதல் அனைவரும் இதைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தனர்.

இந்த சம்பவத்திற்குப் பிறகுதான் பாலா நெமிலிக்கு வந்தது. கனவு வந்த அந்த நவராத்திரிதான் பாலா அங்கு செய்து கொண்ட கடைசி நவராத்திரி. அடுத்த நவராத்திரி நெமிலியில் நடைபெற்றது என்றால் பாலாவின் மகிமையை, பாலாவின் அற்புதத்தை என்னவென்று சொல்வது!

16

அய்யரின் நினைப்பும் அன்னையின் கணிப்பும்!

1973ஆம் வருடம் ஜனவரி மாதம் 22 ஆம் தேதி பாண்டுரங்கன் - நாகலட்சுமி தம்பதிகளுக்கு இரண்டாவது குழந்தை பிறந்தது. குழந்தைக்கு மோகனகிருஷ்ணன் எனப் பெயர் சூட்டினர். அன்னை பாலா விரும்பிய அருமை பாலகன் அவதரித்து விட்டான். இனி நாம் நெமிலி சென்று விடலாம் என பாலா பரவசமடைந்தாள்.

பதினேழு வருடங்கள் என்றால் சும்மாவா? இராமனின் வனவாசமே 14 வருடங்கள்தான். பாலாவின் வனவாசமோ 17 வருடங்கள். இந்த நிலையில் T.K. சுந்தரராமய்யர் பணியிலிருந்து ஓய்வும் பெற்று விட்டார். மூத்த பெண் படிப்பு முடித்தாகிவிட்டது. இளைய பெண் எஸ்எஸ்.எல்.ஸி பரிட்சை எழுத வேண்டியதுதான் பாக்கி.

பிறகென்ன பாலாவை அழைத்துக் கொண்டு நெமிலி வரவேண்டியதுதானே. ஆனால் அய்யர் மனமோ வேறு மாதிரி கணக்குப் போட்டது. இதுவரை காவேரிப் பாக்கத்தில் இருந்துவிட்டோம். இனி கடைசிக் காலத்தை இங்கேயே ஓட்டிவிடலாம். யார் மீண்டும் நெமிலிக்குப் போய் வீடு பார்த்து, பிறகு இந்த வீட்டை காலி செய்து

கொண்டு அங்கும் இங்கும் அல்லல்படுவார்கள் என நினைத்தார்.

இதே சுந்தரராமய்யர்தான் 17 வருடங்களுக்கு முன்பு நெமிலியை விட்டு புறப்படும்போது எனது வாத்தியார் வேலைக்காகத்தான் காவேரிப்பாக்கம் செல்கிறேன் என சொல்லிச் சென்றார். வாத்தியார் வேலைதான் முடிந்துவிட்டதே. பிறகென்ன நெமிலி செல்ல வேண்டியது தானே.

ஆனால் அய்யரவர்களோ காவேரிப்பாக்க வாழ்க்கையே கடைசி வரை போதும் என நினைத்தார். பணியிலிருந்து ஓய்வு பெற்றுவிட்டாலும் அவர் அங்கேயே தங்க நினைத்ததின் முக்கிய காரணம் அவரது மகனும் மருமகளும் உடன் இருப்பதுதான்.

அவரது மகன் விருத்தகிரி விருத்தாசலத்தில் நெடுஞ்சாலைத் துறையில் பணியாற்றிக் கொண்டிருந்தார். அவருக்குத் திருமணம் நடந்தது. மனைவி பெயர் உமா. வேலை நிமித்தமாக அவர் விருத்தாசலத்திற்கு தனிக்குடித் தனம் செல்ல நேர்ந்தது. அங்கேயே சில வருடங்கள் குடும்பம் நடத்தினார்.

தனது வயதான தாய் தந்தையர் காவேரிப்பாக்கத்தில் இருப்பதால் அதன் சுற்றுப் புற ஊர்களுள் ஏதாவது ஒன்றுக்கு வேலை மாற்றம் தரும்படி விருத்தகிரி கோர, அவருக்கு அரக்கோணத்திற்கு வேலை மாற்றம் வந்தது. விருத்தகிரி - உமா தம்பதிகள் விருத்தாசலத்தை காலி செய்து கொண்டு காவேரிப்பாக்கத்துக்கு வந்துவிட்டனர்.

காவேரிப்பாக்கத்திலிருந்து தினமும் அரக்கோணத் திற்கு சென்று பணி புரிந்து வீடு திரும்புவார். இதன் காரணமாகத்தான் சுந்தரராமய்யர் அங்கேயே செட்டில் ஆகி விடலாம் என நினைத்தார் தனது வாழ்க்கையின் இறுதி அத்தியாயங்களை காவேரிப்பாக்கத்திலேயே

முடித்துக் கொள்ள நினைத்தார். அதனால் அவருக்கு நெமிலியின் நினைப்பே வரவில்லை.

நல்ல பழக்கமோ, தீய பழக்கமோ நமக்கு பிடிக்காமல் நாம் அதை செய்து வந்தாலும் காலப் போக்கில் நமக்கு அந்தப் பழக்கம் மிகவும் பிடித்து விடும். இது மனித இயல்பு. ஒரு நாள் பசிக்காக திருடியவன், பிறகு பசி வரும் போதெல்லாம் திருட ஆரம்பித்து கடைசியில் அதை தனது தொழிலாகவே மாற்றிக் கொள்வான். பிறகு மாட்டிக் கொள்வான் என்பது வேறு விஷயம்.

தினமும் ஒரு பத்து பைசாவை ஒரு பிச்சைக் காரனுக்கு போடலாம் என விளையாட்டாக முடிவெடுத்த ஒருவன், காலப்போக்கில் அதை தவிர்க்க முடியாத தலையாய கடமையாக நினைத்து விடுவான். இதுதான் மனத்தின் இயல்பு. ஆகவே நல்ல விஷயங்கள் சிலவற்றை நாம் வீம்புக்காக தொடங்கினாலும் பரவாயில்லை. அது காலப்போக்கில் வியத்தகு மாற்றங்கள் பலவற்றை நமக்கு உண்டாக்கும்.

இதுபோலத்தான் பாலா பூஜைகள் செய்து வந்த T.K.சுந்தரராமய்யரும் பதினேழு வருட காவேரிப்பாக்க வாழ்க்கையில் தன் மனத்தைப் பறி கொடுத்துவிட்டார். அவருக்கு யார் எடுத்துச் சொல்வது. எப்படிப் புரியவைப்பது. பார்த்தாள் பாலா. அய்யரவர்களின் மனத்தை மாற்றி அவரை நெமிலிக்கு போகச் செய்வது இயலாத காரியம். இந்த இடத்தில் பாலா ஒரு புது டெக்னிக்கை பயன்படுத்தினாள். அந்த டெக்னிக் அபாரமாக வேலை செய்தது.

பொதுவாக குடிப்பழக்கத்திற்கு ஆளானவர்களோ, இல்லை போதை பழக்கத்துக்கு ஆளானவர்களோ திருந்த வேண்டும் எனச் சொன்னால் அவர்களுக்கு வெறும்

அட்வைஸ் செய்து கொண்டிருந்தால் போதாது. Availability என்று ஒன்று இருப்பதால்தானே இவர்கள் குடிக்கிறார்கள்.

Availability இல்லாமல் செய்துவிட்டால் முதலில் குதிப்பார்கள். குடிப்பதற்கு இல்லையே என்று தவிப்பார்கள். பிறகு தலையெழுத்தே என்று மாற்றிக் கொள்வார்கள். நரிக்கு கூட பழம் எட்டியிருந்தால் அது ஆஹா ஆஹா என்றுதான் குதித்திருக்கும். எட்டாத காரணத்தினால் அது சீச்சீ இந்தப் பழம் புளிக்கும் எனக் கூறிச் சென்றது.

பாலா அய்யரவர்களை நெமிலிக்கு கூட்டி வர மேற்சொன்ன டெக்னிக்கைத்தான் பயன்படுத்தினாள். வழக்கம் போல சதுரங்க ஆட்டத்தில் ஒரு காயை நகர்த்தினாள். விருத்தகிரி மனைவியான உமாவிற்கும், அய்யரவர்களுக்கும் ஒரு சிறு சண்டை. தம்பதிகள் இருவரும் நெமிலிக்குத் தனிக்குடித்தனம் வந்துவிட, தலை எழுத்தே என்று சுந்தரராமய்யர் தனது குடும்பத்தோடு பாலாவை கூட்டிக் கொண்டு பதினேழு வருடங்கள் கழித்து நெமிலிக்குத் திரும்பினார்.

இது போன்ற சாமர்த்தியமான காரியங்களை பாலாவைத் தவிர வேறு யார் செய்ய முடியும்! "அவளின்றி ஓர் அசைவும் இருக்காது" என்பது சரிதானே.

17

அறுபது நாட்களில் அன்னையின் அற்புதம்!

ஒரு வழியாக அன்னை பாலாவை அய்யர் அவர்கள் நெமிலிக்கு அழைத்து வந்தார். தனது மகன் மற்றும் மருமகளோடு வாடகை வீட்டில் வசித்து வந்தார். மீண்டும் பிரச்சனை ஆரம்பமானது. நவராத்திரி விழாவை எங்கு நடத்துவது? அவர்கள் தங்கிய வீட்டில் விழா நடத்தலாம் என்றால் வீட்டுக்காரம்மா ஒத்துக் கொள்ளவில்லை.

நவராத்திரி நெருங்கிவிட்டது. இன்னும் அறுபதே நாட்கள் உள்ள நிலையில் அன்னை பாலா தன் அற்புதத்தை ஆரம்பித்தாள். வெளியூரிலிருந்த வீரராகவன் (கோபாலகிருஷ்ண அய்யர் மகன்) நெமிலிக்கு அழைக்கப் பட்டார். எனது தந்தையும் வீராகவன் அவர்களும் கலந்தாலோசித்தனர்.

கையில் காசில்லை. வீரராகவன் வெளியே பத்து பைசா வட்டிக்கு கடன் வாங்கிக் கொடுத்தார். இவர்களோடு பூஜைகள் செய்யும் T.K. சுந்தரராமய்யர் மகன் விருத்தகிரியும் சேர்ந்து கொண்டார். அவர் தனது பங்குக்கு மனைவியின் நகைகளை அடமானம் வைத்து பணம் வாங்கிக் கொடுத்தார். எனது தந்தையும் கடன் வாங்கி பணம் சேர்த்தார்.

குப்பத்திலிருந்த கிருஷ்ணன் மேஸ்த்திரி வரவழைக்கப் பட்டார். செங்கற்கள், சிமெண்ட் மணல் எல்லாம் வந்து சேர கடன் வாங்கி கடகால் (அஸ்திவாரம்) கட கடவென எழும்பியது. அதன் பிறகு சுவர் எழும்பியது. இந்த இடத்தில்தான் நாம் பாலா தனக்கு தேர்வு செய்த இடத்தைப் பற்றிச் சிறிது யோசிக்க வேண்டும். பாலா, G.K.V. அய்யர் வீட்டின் பின் புறத்தை அன்றே தேர்வு செய்து விட்டாள்.

G.K.V. அய்யர் வீடு கட்டிக் கொண்டிருந்த சமயம் நடைபெற்ற சம்பவம் இது. அய்யரின் வீட்டிற்கு எதிர்ப்புறம் நாகப்பன் எனும் கோயில் பூசாரி குடிசை போட்டு வாழ்ந்து வந்தார். ஒரு நாள் மாலை வெள்ளை உடை அணிந்த பெண்மணி அய்யரின் வீட்டுக்குள் நுழைவதை நாகப்பன் பார்த்துவிட்டு எதிரே இருந்து ஓடி வந்து "யாரும்மா நீ?.. எதுக்கு உள்ள போறே? என்று கேட்க "இது என் வீடு. இந்த இடம் எனக்கு சொந்தம்." எனக் கூறிக் கொண்டே அந்தப் பெண்மணி பாதி கட்டியிருந்த அந்த வீட்டுக்குள் சென்று மறைந்துவிட, அதைப் பார்த்த எதிர் வீட்டுக்காரரான நாகப்பன் ஸ்தம்பித்துவிட்டார்.

பிறகு G.K.V. அய்யரிடம் அதைக் கூறினார். அவருக்கு ஏகப்பட்ட ஆச்சர்யம். இதில் ஆச்சர்யப்பட என்ன இருக்கிறது. சொல்லப் போனால் பயப்படத்தானே வேண்டும் என்று நீங்கள் நினைக்கலாம். நான் வெள்ளை உடை அணிந்த பெண்மணி எங்கிருந்து வந்து அய்யர் வீட்டுக்குள் நுழைந்தாள் என இன்னும் எழுதவில்லை. அதை நான் எழுதினால் உங்களுக்கும் ஆச்சர்யமாக இருக்கும்.

அந்தப் பெண்மணி பக்கத்திலிருந்த பள்ளியிலிருந்து (முன்பு பாலா இருந்த சத்திரம்) வெளியே வந்து G.K.V.

அய்யரின் வீட்டுக்குள் நுழைந்ததைத்தான் எதிர்வீட்டு நாகப்பன் பார்த்தார்.

அந்த இடத்தில்தான் பாலா தன் பீடத்தை அறுபதே நாட்களில் கட்டி முடித்தாள். அந்தச் சமயம் உறவினர் மரணம் காரணமாக நவராத்திரி விழா கடைசி மூன்று நாட்கள் மட்டும் சிறப்பாக நடந்தது.

18

தித்திக்கும் திரிபுரையின் திகைப்பான விளையாட்டு!

அன்னை பாலா என் அன்னைக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றினாள். அய்யரின் கணிப்பைப் பொய்யாக்கி, அவர் செய்து வந்த பூஜைகளை நெமிலியில் செய்ய வைத்தாள். எண்ணி அறுபதே நாட்களில் அழகிய வீட்டை அமைத்து அருமையாக நவராத்திரியை நடத்திக் காட்டினாள். முதல் வருடம் நேரமின்மை, துக்கம் காரணமாக மூன்று நாட்கள் நடந்தது.

பிறகு அதைத் தொடர்ந்து வருடா வருடம் ஒன்பது நாளும் நவராத்திரி விழா விமரிசையாக நடந்தது. செலவுகளும் கூடியது. நவராத்திரி நெருங்கும் சமயம் எனது தந்தை நவராத்திரிக்கு ஆகும் செலவை பட்ஜெட் போட்டுப் பார்க்கும் வேளையில் அங்கு வந்த எனது தாய் ஒரு வினாடி தான் சொன்ன வாக்கை மறந்து "இந்த முறை நவராத்திரியில் சில நிகழ்ச்சிகளை குறைத்துக் கொள்ளலாம். செலவு அதிகமாகிறது. கையில்தான் பணமில்லையே" என்று கூறினார்.

அவ்வளவுதான். அன்னைக்கு வந்ததே கோபம். அன்றைக்கு எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை, நவராத்திரியை நாங்கள் நடத்துகிறோம். நெமிலிக்கு

வந்துவிடு எனச் சொல்லிவிட்டு இன்று செலவு அதிகம் என்றா கூறுகிறாய்? பாலா தன் விளையாட்டை ஆரம்பித்தாள். நன்றாக விளையாடிக் கொண்டிருந்த மோகனுக்கு திடீரென்று ஜுரம் வந்து அசைவின்றி படுத்து விட்டான். பேச்சு மூச்சு இல்லை.

இரவு மணி பத்து. நான்கு வயது குழந்தையான மோகனைத் தூக்கிக் கொண்டு தாத்தா, மாமா, அப்பா அனைவரும் எங்கள் ஊர் மருத்துவரான நடராஜனிடம் சென்றார்கள்.

அவர் ஒரு பவர்ஃபுல் இஞ்செக்ஷனைப் போட்டு "கண் விழித்து, உடலில் அசைவு ஏற்பட்டால் உடனே வந்து சொல்லுங்கள்" என்றார்.

குழந்தையை வீட்டுக்கு கொண்டு வந்தனர். கை கால் அசைவின்றி, போட்டது போட்டபடி இருக்க அனைவரும் பாலாவைப் பிரார்த்தித்தனர். எனது தந்தைக்கு கோபம் வந்தது. எனது தாயுடன் சண்டை போட ஆரம்பித்தசார்.

"எல்லாம் உன்னால்தான்டி.... நீதான் நவராத்திரி செலவைக் குறைச்சுக்கோ. அது வேணாம்... இது வேணாம்னு வீம்பு பண்ணி குழந்தையை இப்ப படுக்க வச்சிட்ட...

நீ யாருடி செலவைக் குறைக்கச் சொல்றது. உங்க அப்பா அம்மா கொடுத்த பணத்தையா நான் செலவு பண்றேன். என் பணம்டி. சொந்தப் பணம். என் சம்பளப் பணம். சம்பளப் பணம் மொத்தத்தையும் செலவு பண்ணி நவராத்திரி செய்வேன்.

பத்தலேன்னா பத்து பேருகிட்ட கடன் வாங்கியாவது பத்து நாள் நவராத்திரி செய்வேன். அதெல்லாம் என் இஷ்டம். அதக்கேக்கறதுக்கு நீ யாருடி? குழந்தைக்கு

ஏதாவது ஆச்சுது... அவ்வளவுதான். இனிமே நவராத்திரி செலவைப் பத்தி பேசினே நடக்கற கதையே வேற"

என் தந்தை மூச்சு விடாமல் பேச "ஐய்யோ... நான் பாலாவுக்கு கொடுத்த வாக்கை மறந்துட்டேங்க. இனிமே நான் எதிலேயும் தலையிட மாட்டேன்.'" எனக் கூறி எனது தாய் அழ,

"இப்ப கேட்டுக்க. என் பணத்தை, உனக்கு நகைங்க வாங்கியோ பட்டுப் புடைவை வாங்கியோ செலவு செய்ய மாட்டேன்.

எல்லாத்தையும் பாலாவுக்குத்தான் செலவு செய்வேன். நீ எதிலேயும் தலையிடக் கூடாது."

என்று எனது தந்தை கூற, இன்று வரை எனது தாய் தனக்கென எதுவும் செய்து கொள்ளவவில்லை என்பது குறிப்பிட வேண்டிய விஷயம்.

சரி இவர்கள் சண்டைக்கு வருவோம் சண்டை நடந்து முடிய கிட்டதட்ட இரண்டு மணி நேரம் பிடித்தது. சண்டை ஓய்ந்த மறு நிமிடம் குழந்தை கண்ணைத் திறந்தான். உடலை அசைத்தான். அழ ஆரம்பித்தான். தாத்தா இந்த விஷயத்தை டாக்டரிடம் சொல்ல அவர் வீட்டுக்குச் சென்றார்.

அந்த இரவு நேரத்தில் டாக்டர் நடராஜன் வராண்டா வெளியே சேரில் அமர்ந்திருந்தார்.

"சார் பேரன் பொழைச்சுட்டான். ரொம்ப நன்றி சார்" என G.K.V. சுப்ரமண்ய அய்யர் டாக்டரிடம் கூற, அவரோ

"சார்... உங்க வீட்டுல இருக்கற சக்திதான் உங்க பேரனைக் காப்பாத்தியிருக்கு. அவனுக்கு வந்தது ஒரு வகையான டிப்தீரியா. இதுக்கு நல்ல ட்ரீட்மெண்ட் மெட்ராஸ்லதான். அதுவும் உங்க பேரன் ரொம்ப சீரியஸ்

கண்டிஷன். ராத்திரி மெட்ராஸ் போக வசதியில்லை யேன்னு சொல்லித்தான் நான் ஒரு இஞ்செக்ஷன் போட்டேன். ஒண்ணு மட்டும் நிச்சயம், நான் போட்ட இஞ்செக்ஷனால மட்டும் அவன் பொழைக்கல. அதை என்னால சொல்ல முடியும்" என்றார்.

டாக்டர் சொன்னதை வீட்டில் வந்து தாத்தா சொன்னவுடன் அனைவருக்கும் கண்ணில் நீர் வந்து விட்டது. பாலாவின் பெருமையை நினைத்து நினைத்து மகிழ்ந்தனர்.

இதைச் சொல்லும்போது நான் படித்த கதை ஒன்று நினைவுக்கு வருகிறது. கடவுள் தீயவர்களுக்கு தண்டனை தருகிறார். அதே சமயம் நல்லவர்களுக்கும் தண்டனை கிடைக்கிறதே அது ஏன் என்ற வினா எழுந்தபோது, இந்தக் கதை உதயமானது.

ஒரு ஊரில் இரண்டு அண்ணன் தம்பிகள். இருவருக்கும் நிலத்தகராறு. தம்பி அண்ணனைக் கத்தியால் வயிற்றில் குத்தி விடுகிறான். ஊரே அவனைத் திட்டித் தீர்க்கிறது. போலீஸ் வந்து பிடித்துச் செல்கிறது. குத்துப்பட்ட அண்ணனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்கின்றனர்.

ஆப்பரேஷன் தியேட்டரில் டாக்டர் கத்தியால் அவன் வயிற்றைக் கிழித்து சரிந்த குடலை சரி செய்து, ஆப்பரேஷனை வெற்றிகரமாக முடிக்க ஊரே அவரைப் பாராட்டுகிறது.

இதில் ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். தம்பியாவது அண்ணனைக் கத்தியால் வயிற்றில் குத்தினான். டாக்டரோ கத்தியால் அவன் வயிற்றையே கிழித்தார். ஆனால் முன்னதை அனைவரும் தூற்றினர். பின்னதை அனைவரும் போற்றினர். காரணம் இங்கு செயல் முக்கியமல்ல. நோக்கம் தான் முக்கியம்.

தம்பியோ ஒரு உயிரை எடுக்க கத்தியை உபயோகித்தான். டாக்டரோ ஒரு உயிர் பிழைக்க கத்தியை உபயோகித்தார். கடவுள் நமக்குத் தருவது மேற்சொன்ன இரண்டாவது வகை,

பாலா தருவது பனிஷ்மென்ட் அல்ல. அது ட்ரீட்மென்ட். பாலா நல்லவர்களுக்கு ஒரு போதும் பனிஷ்மென்ட் தரமாட்டாள். அது நிச்சயம்.

19

அருள் வாக்கு சொன்ன அரிஜனப் பெரியவர்!

அருள் வாக்கு சொன்ன அரிஜனப் பெரியவர் என்றால், தன் மேல் அருள் வந்து ஆடிக்கொண்டோ, இல்லை வந்தவர்களிடம் கேள்விக்கு இவ்வளவு பணம் என்று வாங்கிக் கொண்டோ அருள் வாக்கு சொன்னவர் என்ற அர்த்தமல்ல. அவ்வப்போது நடக்கவிருப்பதை தெய்வ சங்கல்பத்தால் என் அன்னையிடம் அந்தந்த காலகட்டத்தில் கூறியவர். முந்தைய அத்தியாயங்களில் என் அன்னைக்கு யாருடன் திருமணம், எப்போது திருமணம் என்று கூறிச் சென்ற அரிஜன அன்பர்தான் இவர்.

எனது அன்னையிடம் இரண்டு ஆண் குழந்தைகள் பிறக்குமென்று கூறிச்சென்றவர், கிட்டதட்ட பதினெட்டு வருடங்கள் கழித்து மீண்டும் தெருவழியே பக்கத்து கிராமமான அசநெல்லிக் குப்பத்திற்கு சென்ற போது, வீட்டுக்கு வெளியே துவைத்த துணிகளை உலர்த்திக் கொண்டிருந்த எனது அன்னையிடம்

"என்னம்மா... ரெண்டும் ஆம்பளைப் புள்ளைங்க தானே" என்று கேட்டார்.

"நீங்க சொன்ன மாதிரியே ரெண்டும் ஆம்பளைப் பசங்கதான்" என்று கூற

"உனக்கென்னமா? இனிமே குறையே கிடையாது. நல்லாருப்பே" என்றார் பெரியவர்.

"வீட்டுக்குள்ள வாங்க. தெருவிலே நின்னுகிட்டே பேசறீங்க..."

"இந்த வீடென்னம்மா... பின்னால இன்னும் பெரிசா கட்டுவே. அப்ப வரேன்." சொல்லிவிட்டுச் சென்றார் பெரியவர்.

பிறகு அந்த அரிஜனப் பெரியவர் சொன்னது போலவே வீட்டுக்கு பின்புறம், பாலா பீடத்துக்கு எதிர்ப்புறம் அழகான மணிமண்டபம் கட்டினோம். இதற்கு முன்பு திறந்தவெளி இடமாக இருக்கும் அந்த இடத்தில் நவராத்திரி வந்தால் பந்தல் போட்டு விழா நடத்துவோம். ஓலையால் வேய்ந்த பந்தலான அதற்கு கீழே மாலை, இரவு வேளைகளில் சொற்பொழிவுகள், இசைக்கச்சேரிகள் நடக்கும்.

மழை வந்தால் திண்டாட்டம். பந்தி போட்டு பரிமாறிக் கொண்டிருப்பார்கள். மழை வந்துவிடும். சாப்பிட்டுக் கொண்டிருப்பதை கையில் எடுத்துக்கொண்டு மூலைக்கு ஒருவராக ஓடுவார்கள். கச்சேரி நடந்து கொண்டிருக்கும். மழை வந்துவிடும். பக்க வாத்தியங்கள் பக்கத்துக்கு ஒன்றாக, ஒவ்வொருவரும் ஒவ்வொரு வாத்தியத்தோடு ஒவ்வொரு இடத்தில் ஒதுங்குவார்கள்.

அப்போது நாங்கள் சிறுவர்கள். எங்களுக்கு மழை வந்துவிட்டால் கொண்டாட்டம். காரணம் மழையில் நனைந்தபடி, பந்தலில் இந்தப் பக்கம், அந்தப் பக்கம் ஓடுபவர்களைக் கண்டால் எங்களுக்கு ஒரே குஷி. மழையினால் நவராத்திரியில் ஏற்பட்ட இடைஞ்சல்கள், அவஸ்தைகள் கொஞ்ச நஞ்சமல்ல என்பது நாங்கள் கொஞ்சம் பெரியவர்களானபோதுதான் உணர்ந்தோம்.

மணிமண்டபம் கட்டிய பிறகு மழையால் எங்களுக்கு எந்தவித தொந்தரவும் வரவில்லை.

சரி இப்போது கதைக்கு வருவோம். மணிமண்டபம் கட்டி முடிந்தபின்பு ஒரு நாள் எனது அன்னை துணிகளை உணர்த்த வெளியே சென்ற போது மீண்டும் அந்த அரிஜனப் பெரியவர் தென்பட்டார். எனது அன்னைக்கு அவரைப் பார்த்தவுடன் சந்தோஷம்.

“பெரியவரே... நீங்க சொன்னமாதிரி பின்பக்கம் கட்டிட்டோம்” என்று மகிழ்ச்சியோடு கூற, அந்தப் பெரியவரோ

“அதென்னமா... அதுககு மேலேயும் கட்டப்போற பாரு...” என்று சிரித்தபடி கூறினார்.

“போங்க பெரியவரே... இதுக்கே ஏகப்பட்ட கடன் பாக்கி. இதுக்கு மேல நாங்க எப்படி கட்டறது. அது போகட்டும். நீங்க உள்ள வந்து ஒரு டம்ளர் காபி சாப்பிடுங்க”

“நீ மேல கட்டதான் போறே. நீ மேல கட்டிட்டேன்னு என்கிட்ட சொல்றத நான் கேக்கத்தான் போறேன்... பாரு” எனக் கூறி வீட்டுக்குள் வராமலேயே தெருவழியாகச் சென்று விட்டார் அந்தப் பெரியவர்.

அந்த அரிஜனப் பெரியவர் சொன்ன வாக்கு அப்படியே பலித்தது. நவராத்திரிக்கு வரும் கூட்டம் வருடா வருடம் அதிகரிக்க இடவசதி குறைந்தது. அதற்கென இரண்டாண்டுகளுக்குள் மண்டபத்தின் மேலே ஒரு ஹால் இரண்டு ரூம் கட்டப்பட்டது.

அதன்பிறகு ஒரு நாள் வீட்டுக்குள் வேலையாக இருந்த எனது அன்னை ஏதேச்சையாக வெளியே வர, அந்தப் பெரியவர் வாசலில் நின்றபடி

"என்னம்மா மேல கட்டியாச்சில்ல. அன்னிக்கு என்னமோ காசில்ல. கடன் கிடன்னு சொன்னியே. இப்ப பாத்தியா. நான் அன்னிக்கே சொன்னேன் இல்ல" அந்த அரிஜனப் பெரியவர் பேசப் பேச எனது அன்னைக்கு பேச்சே வரவில்லை

"இதுக்கே பிரமிச்சுப் போயிட்டா எப்படி? இன்னும் பக்கத்துல வேற புதுசா கட்டப்போறே. உனக்கென்னமா? இந்த வீட்டுக்கே மகாலட்சுமி நீ" எனச் சொல்ல, அது வரை பிரமித்துப் போயிருந்த எனது அன்னை, அவரைப் பார்த்து.

"பெரியவரே இதுவரைக்கும் சொன்னீங்களே அது நிஜம். பின்னால கட்டுவேன்னு சொன்னீங்க கட்டினோம். அதுக்கு மேலேயும் கட்டுவேன்னு சொன்னீங்க. கட்டினோம். இப்ப நீங்க சொல்றது நான் நம்பமாட்டேன். ஏன்னா பக்கத்துல இருக்கறது பிறருக்கு சொந்தமான இடம். அந்த இடத்துல நா்ங்க எப்படிக் கட்டறது"

எனது அன்னைக்கு அவரை மடக்கிவிட்டதாக மனசில் ஒரு நினைப்பு.

"இதோ பாரும்மா... அங்கேயும் கட்டதான் போறீங்க. நான் தான் சொல்றேன் இல்ல" எனச் சொல்லி சத்தம் போட்டு சிரித்தவர், இந்த முறையும் வீட்டுக்கு வராமல் சாக்கு போக்கு சொல்லிவிட்டு குப்பத்துக்கு சென்று விட்டார்.

அவர் சொன்னது போலவே அந்த இடத்தை விலைக்கு வாங்கி, அங்கு ஒரு புதிய கட்டடம் கட்டினோம். அந்த இடம் வாங்க உதவியவர் திரு. ராஜு முதலியார் ஆவார். அந்த உத்தமரின் உன்னத முயற்சியால் பாலா பீடம் விரிவடைந்தது. அதில் குறிப்பிடப்படவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றால் பாலா பீடம் எழும்ப உதவியவர்களில் முதன்மையானவரான திரு. அருணாசல

முதலியார் அவர்களின் சகோதரர்தான் பாலாவின் பரம பக்தரான திரு. ராஜு முதலியார்.

அந்த அரிஜனப் பெரியவர் ஒவ்வொரு காலகட்டத்தில் சொன்ன ஒவ்ரொரு வாக்கும் பலித்தது. அதற்காக அந்த மாமனிதர் எந்தவிதப் பலனையும் எதிர் பார்க்கவில்லை. இவ்வளவு ஏன்? வீட்டிற்குள் வந்து ஒரு டம்ளர் தண்ணீர் குடித்ததில்லை. மற்றொன்று என்ன வென்றால் அவர் எதையுமே கேட்டுச் சொல்லவில்லை. அவராகவே சொன்னார்.

இதில் பாலாவின் பங்கு என்னவென்றால், அந்த அரிஜனப் பெரியவர் வீட்டைக் கடந்து செல்லும் நேரம் உள்ளே எந்த வேலை செய்து கொண்டிருந்தாலும் என் அன்னையை வெளியே அழைத்து வருவதுதான். இது போல ஒரு முறை இரு முறை நடந்திருந்தால் இது, ஏதேச்சையாக நடந்தது எனக் கூறலாம். ஆனால் இதுமாதிரி பல தடவை நடந்திருக்கிறது.

முதலில், இரண்டும் ஆண் குழந்தைகள்தான் என்று கூறிச் சென்றார். அப்போது உள்ளே வேலைகளில் ஈடுபட்டிருந்த என் அன்னை தற்செயலாக வெளியே வந்தார். அதனைத் தொடர்ந்து பல வருடங்களுக்குப் பிறகு வெளியே துணி உலர்த்த என் அன்னை வந்தபோது பின்பக்கம் கட்டுவீர்கள் எனக் கூறிச் சென்றார்.

மூன்றாவது முறை வந்தபோது அதற்கு மேல கட்டுவீர்கள் என்று கூறிச் சென்றார். அப்போதும் என் அன்னை சொல்லி வைத்த மாதிரி வெளியே வந்தார். அதன் பின்பு சில ஆண்டுகள் கழித்து மீண்டும் தெருவழியே சென்றபோது என் அன்னை வெளியே வர பக்கத்திலும் புதிதாக கட்டுவீர்கள் எனக் கூறிச் சென்றார்.

ஒரு நாளும் எனது அன்னையார் அந்த அரிஜனப் பெரியவரைத் தேடிச் சென்று ஏதையும் கேட்கவில்லை.

அதே போல அவரும் வீட்டுக்கு முன் வந்து நின்று என் அன்னையைக் கூப்பிட்டழைத்து எதையும் கூறவில்லை. அவர் அந்த வழி செல்லவும் அந்த வேளை எனது அன்னை வெளியே வரவும் இப்படி ஒரு வினோதமான, வியப்பான சந்திப்பை பாலாவைத் தவிர வேறு யாரால் நிகழ்த்த முடியும்.

அதன் பிறகு என் அன்னை அவரை வெளியே இன்று வரை பார்க்கவில்லை. ஒரு வேளை இந்தக் கதை எழுதி பிரசுரம் ஆவதற்குள் பார்த்தாலும் பார்க்கலாம். அவர் இருப்பிடம் கூட யாருக்கும் தெரியாது. அந்த அரிஜனப் பெரியவர் மனிதரா அல்லது சித்தரா? அன்னை பாலாவுக்கு மட்டுமே அந்த உண்மை தெரியும்.

20

அன்னைக்குத் தேவையான எண்ணெய் அபிஷேகம்!

டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் எங்கள் குடும்ப நண்பர். அவரது துணைவியார் திருமதி சுலோசனா அவர்கள் என் தாயிடம் மிகவும் பிரியம் உள்ளவர்கள்.

ஒரு முறை திரு. சீர்காழி கோவிந்தராஜன் அவர் களுக்கு சீரியஸ் என்ற வதந்தி பரவ அதை உண்மை என நினைத்த எனது தாயார் உடனே, அவர் உடல் நிலை சரியாக வேண்டும், தில்லை காளியம்மனுக்கு எண்ணெய் அபிஷேகம் செய்விக்கிறேன் என்று வேண்டிக் கொண்டார். நல்ல வேளையாக அவருக்கு ஒன்றும் ஆகவில்லை.

இந்த விஷயத்தை எனது தாயார், என் தந்தையிடம் கூறி, தில்லைக் காளியம்மனுக்கு அபிஷேகம் செய்விப்பதாய் வேண்டிக் கொண்டேன், நீங்கள் அவரிடம் கேளுங்கள் எனக் கூற, எனது தந்தையோ சண்டை போட ஆரம்பித்தார்.

"சொல்லாம கொள்ளாம நீயா வேண்டிக்கிட்டா அதை எப்படி நான் அவர்கிட்ட சொல்லி பணம் கேக்க முடியும். ஐயா நீங்க ரொம்ப சீரியஸ்னு தகவல் கிடைச்சது. உடனே என் பொண்டாட்டி தில்லை காளியம்மனுக்கு

அபிஷேகம் செய்யறதா வேண்டிக்கிட்டா. 500 ரூபாய் பணம் எடுங்கன்னு அவர்கிட்ட எப்படிக் கேக்கறது.

அதெல்லாம் என்னால முடியாது. நீ எப்ப வேண்டிக்கிட்டியோ, நீயே செய். உன்னால செய்ய முடியல, பணம் இல்லன்னா இனிமே இது மாதிரி வேண்டிக்காதே" என்று தீர்த்துக் கூறிவிட்டார்.

அந்த நேரத்தில் வீட்டிலும் பயங்கர பண நெருக்கடி. ஏழ்மையான சூழ்நிலை. நிறைய கடன் வேறு. இந்த நிலையில் 500 ரூபாய்க்கு எங்கு போவது. ஒரு காலத்தில் உணவுக்கும், உடைகளுக்கும் அவதி நிலை. அதன் பிறகு உணவுக்கும் உடைக்கும் பிரச்சனை இல்லை. ஆனால் இதர செலவுகள் என்ற சொல்லுக்கே இடமில்லை. அவ்வளவு பண நெருக்கடி. அதனால் வீட்டில் ஒன்றும் செய்ய இயலாத சூழ்நிலை. தந்தை கூறுவதும் நியாயம்தான். ஒருவரிடம் சென்று, எப்படி எடுத்த எடுப்பில் விஷயத்தைக் கூறி பணம் கேட்பது. சம்பந்தப்பட்டவர்கள் தப்பாக நினைத்துவிட்டால் அது அசிங்கமல்லவா?

இந்த நிலையில்தான் அந்த ஆச்சர்யமான விஷயம் நடந்தது. எனது தந்தை சீர்காழி கோவிந்தராஜன் அவர்களின் இல்லத்திற்கு ஏதோ ஒரு விஷயமாகச் செல்ல, அங்கு அவர் ஒவ்வொரு கோயிலுக்கும் அபிஷேகத்திற்கு என பணம் கொடுத்துக் கொண்டிருந்தார். என்னவென்று தந்தை விசாரிக்க, "ஒரு விபத்தில் தான் தப்பிப் பிழைத்ததால் இந்த ஏற்பாடு" என அவர் கூற, எனது தந்தையும் அபிஷேக விவரத்தை அவரிடம் கூற, உடனே 500 ரூபாயை எடுத்து அவர் கொடுக்க, தில்லைக் காளியம்மன் மகிமையை என்ன வென்று சொல்வது.

பிறகு தில்லைக் காளி அம்மனுக்கு நடைபெற்ற எண்ணெய் அபிஷேகத்தில் சீர்காழி குடும்பத்தினர் கலந்து கொண்டனர். எனது அப்பாவும் உடன் சென்றார். எனது

அன்னையை அழைத்துச் செல்லவில்லை. கோயிலில் அபிஷேக விவரத்தைக் குருக்களிடம் கூற அவர் "வேண்டிக் கொண்ட உங்கள் மனைவியை நீங்கள் ஏன் அழைத்து வரவில்லை" எனக் கேட்டிருக்கிறார்.

அபிஷேகம் நல்ல முறையில் நடந்தது. இருந்தாலும் என் அன்னை வராதது தில்லைக் காளிக்கு குறையாக இருந்தது. அன்னையை சன்னதிக்கு வரவழைத்து எண்ணெய் அபிஷேகம் செய்து கொள்ள தில்லைக் காளி முடிவெடுத்தாள். சோதனையாக எனது தந்தைக்கு மஞ்சட் காமாலை வர, எனது தாய் வேண்டிக் கொள்ள, நாங்கள் அனைவரும் குடும்பத்தோடு சிதம்பரம் சென்று அன்னைக்கு எண்ணெய் அபிஷேகம் செய்து மகிழ்ந்தோம்.

21

மாமி வடிவில் வந்த மாரியம்மன் மகிமை!

ஒரு நாள் காலை எனது தந்தை சென்னைக்கு புறப்பட்டுச் சென்றார். அன்று HMVயில் ஒலிப்பதிவு. திரு. சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் மாரியம்மனைப் பற்றிய நான்கு பாடல்கள் பாடவிருந்தார். அதில் தந்தையின் பாடலான "மாரியைப் பொழிபவள் மாரியம்மா - துயர் மாறிடச் செய்பவள் மாரியம்மா" என்ற பாடலும் இருந்தது.

எனது தந்தையார் சீர்காழி கோவிந்தராஜன் இல்லத்திற்குச் சென்று, அங்கிருந்து அவருடன் புறப்பட்டு ஸ்டுடியோவுக்குச் சென்றார். பாடல் பதிவு ஆரம்பமானது. இங்கு எனது தாய்க்கு உடல் வெப்பம் அதிகமாகி, கொப்புளம் கொப்புளமாக அம்மை வார்த்து விட்டது. பாடல் பதிவு முடிந்தவுடன் தந்தை வீட்டுக்குத் திரும்ப, எனது அன்னையார் அம்மை வந்து படுத்திருப்பதைக் கண்டு அதிர்ச்சியுற்றார்.

நாட்கள் செல்லச் செல்ல அம்மை குறைந்தது. மூன்று ஜலகம் முடிந்த பின்னாலும், கை காலை அசைக்க முடியாமல் ஒரே வலி. ஒரு வாரம் எனது அன்னை வலியைப் பொறுத்துக் கொண்டார்கள். அதன் பிறகு

அவர்களால் முடியவில்லை. எழுந்து கொள்ளவும் முடியாமல், உட்கார்ந்திருக்கவும் முடியாமல் எத்தனை நாட்கள்தான் ஓரே இடத்தில் படுத்திருப்பது.

பிறகு எங்கள் ஊர் மருத்துவரான நடராஜன் அவர்களிடம் அழைத்துச் சென்றார்கள். அவர் முழுவதுமாக பரிசோதித்து முடித்துவிட்டு ஒரு ஊசி மருந்தை எழுதிக் கொடுத்தார். அந்த மருந்து சென்னையில்தான் கிடைக்கும் என்றும், தினமும் ஒரு ஊசி வீதம் தொடர்ந்து பதினைந்து நாட்கள் போட்டுக் கொள்ள வேண்டும் என்றும் கூறினார். இங்கே ஒரு விஷயத்தை நான் குறிப்பிட வேண்டும். எனது தாயார், எது வந்தாலும் சரி உடனே மருத்துவரிடம் சென்றுவரும் பழக்கம் கொண்டவரல்ல. கூடிய மட்டும் மருத்துவரிடம் செல்வதை தவிர்த்துவிடுவார்.

எனது தாத்தாவிடம் சொல்லி அனுப்புவார். அவர் தான் மருத்துவரிடம் சென்று அம்மாவுக்குத் தேவையான மருந்து மாத்திரைகளை வாங்கி வருவார். இது நாள் வரை எனது தாயார் எத்தனை முறை மருத்துவமனை சென்று வந்திருக்கிறார் என்பதைக் கணக்கிட்டு கூறி விடலாம்.

ஊசி எல்லாம் போட்டுக் கொண்டதாக சரித்திரமே இல்லை. இந்த நிலையில் பதினைந்து ஊசி என்றால் எப்படி? இரவே எனது தாயார் ஊசிக்குப் பயந்து மாரியம்மா, காளியம்மா, புவனேஸ்வரியம்மா, பாலா இவர்களுக்கு மனுப் போட்டுவிட்டார்.

அதென்னமோ தெரியவில்லை. நாமும் வேண்டு கிறோம். அம்மனுக்கு ஆயிரம் மனுக்கள் கொடுக்கிறோம். அவையெல்லாம் அமைச்சர் கையில் சிக்கிய மனுக்கள் போல அமைதி காக்கிறது. எனது அன்னை தரும் மனு மட்டும் உடனே பரிசீலனைக்கு வந்து விடுகிறது. எந்தவித கஷ்டத்திற்கும் ஒரு தீர்வு அவரது கனவில் வந்துவிடுகிறது.

மருந்தால் சாதிக்க முடியாத ஒன்று கனவிலே வந்த மாரியம்மனால் சாதிக்க முடிகிறதென்றால் அந்த மகத்துவத்தை என்னவென்று சொல்வது.

சோதிப்பது என்பது பொதுவாகவே கடவுளுக்கு பிடித்தமான ஒன்று. பக்தனை சோதிப்பது, பாமரனைச் சோதிப்பது, பண்டிதனைச் சோதிப்பது, இப்படிப் பலதரப் பட்டவர்களைச் சோதிப்பது என்பது கடவுளுக்கு கை வந்த கலை.

சோதனையும், வேதனையும் மனிதனை மனிதனாக மாற்றுகிறது."

"அம்மா என்னால் முடியவில்லை. தாயே உன் கருணை விழியை என் பக்கம் திருப்பு, உன் கை கொடுத்து என்னைக் காப்பாற்று" என்று கதற வேண்டாம், மனமுருகி, நினைத்தால் போதும் நமது துன்பம் மாயமாய் மறைந்து விடும்.

எனது தாயாரும் இதைப் போலத் தான், அம்மனை மனமுருகி வேண்டினார்கள். இரவு தூக்கம். தூக்கத்திலே கனவு. கனவிலே எனது தாயார் வீட்டிற்கு வெளியே உட்கார்ந்திருக்க, வீட்டின் பின் புறம் இருக்கும், தெருவில் வசிக்கும் செல்லம் மாமி அங்கு வருகிறார். எனது தாயை வீட்டிலுள்ளவர்கள் "பேபி" என்றுதான் அழைப்பார்கள்.

"என்ன பேபி வெளியே உட்கார்ந்திருக்க" எனக் கேட்டுக் கொண்டே மாமி பக்கத்தில் வர

"ஒண்ணுமில்ல மாமி. கை கால்லாம் ஒரே வலி. நடக்க முடியலை. உட்கார முடியலை. ரொம்பக் கஷ்டமா இருக்கு."

"அட... இவ்வளவுதானா? இதுக்கா இப்படி கஷ்டப் படறே!" பக்கத்தில் வந்து அமர்ந்தபடி

"எங்க கையை காலை நீட்டு"

"வேண்டாம் மாமி... நீங்க எதுக்கு..."

வேண்டாம் வேண்டாம் என்று என் தாயார் தடுத்தும் கேட்க்காமல் மாமி கை கால்களை உருவி விட்டார். "வயசில பெரியவங்க... நீங்க போய் என் காலைப் பிடிச்சிவிடலாமா?" என்று என் தாயார் கூறுவதைப் பொருட்படுத்தாமல் கை கால்களை உருவிட்ட மாமி

"ஏண்டி மாரியைப் பொழிபவள் மாரியம்மா, துயர் மாறிடச் செய்வதும் மாரியம்மான்னு உன் புருஷன் எழுதிட்டான். நான் இது கூட செய்யலேன்னா எப்படி?" எனச் சொல்லிய மாமி சிரித்தபடி அங்கிருந்து எழுந்து செல்ல கனவும் கலைகிறது.

மறுநாள் எனது தாயாருக்கு கை கால் வலி போன இடம் தெரியவில்லை. எழுந்து நன்றாக நடந்தார். எல்லோருக்கும் ஆச்சர்யம். ஒரு வாரமாக நடக்க முடியாமல் அவதிப்பட்ட அன்னையார் டாக்டர் சொன்ன ஊசியை இன்னும் ஒன்று கூட போட்டுக் கொள்ளவில்லை. அதற்குள் எழுந்து நன்றாக நடக்கும் அதிசயத்தைக் கண்டு அனைவரும் வியந்தனர்.

கனவைப் பற்றியும் மாமி வடிவில் வந்த மாரியைப் பற்றியும் எல்லோரிடத்திலும் என் அன்னை கூற மாரியம்மன் மகிமையை நினைத்து அனைவரும் மெய் சிலிர்த்தனர்.

22

கனவு வந்தது
கவலை தீர்ந்தது!

மங்கலம் கிராமத்தில் வசிக்கும் பெரியவர் திரு. ஐயா அவர்கள் எனது தந்தைக்கு வந்துள்ள தோஷப்படி ஒரு மூன்று (அல்லது) நான்கு மாதம் வெளியூரில் தங்கிவிட்டு வருவது நல்லது என்றும், அதனால்தான் உடம்பில் நோய்கள் பிடிக்கிறது என்றும் கூறினார்கள். அப்போது என் தந்தை அரக்கோணத்தில் வேலை பார்த்து வந்தார்.

ஆகவே நாங்கள் தற்காலிகமாக அரக்கோணத்தில் சில மாதங்கள் குடியிருந்தோம். அப்போது ஒரு நாள், மாமி ஒருவர் மடிப்பிச்சைக் கேட்டு வந்தார். எனது தாயார் அவருக்கு காசு கொடுக்க எண்ணி, வீட்டில் பாத்திரங்கள் அடுக்கும் ஷெல்ப்பில் ஒரு ஐம்பது பைசா நாணயம் ஒன்றைக் கண்டெடுக்க பதினைந்து நிமிடங்கள் பிடித்தது.

வீடு முழுக்க துடைத்து வைத்தது போல பணமே இல்லை. ஏழ்மை வீட்டில் ஏளனமாய்ச் சிரித்தது. "ஒரு பத்துபைசா இல்லையே மடிப்பிச்சை கேட்டு வந்திருக்கும் மாமிக்குப் போட" என கண்ணில் நீர் வந்துவிட்டது. நல்ல வேள்ளையாக ஒரு ஐம்பது பைசா நாணயம் கண்ணில் தட்டுப்பட்டது.

அதை எடுத்துக் கொண்டு வெளியே வந்தார். மாமியிடம் கொடுத்தார். "புதுசா குடி வந்தேளா" மாமி கேட்டாள். "ஆமாம் மாமி." எனது தாய் பதில் கூற "எந்த ஊரு?" மீண்டும் மாமி கேள்வி கேட்க "நெமிலி" என்று என்தாயார் பதில் சொன்னவுடன் அந்த மாமி முகம் பளிச்சிட்டது. "நெமிலியிலே ஒரு மாமிக்கு கனவுல அம்பாள் வந்து பேசறாளாமே. அந்தமாமியை நோக்குத் தெரியுமா?" மாமி ஆவல் பொங்க கேட்டாள்.

"உங்களுக்கு எப்படித் தெரியும்" என எனது தாயார் கேட்க, "அவங்க, சின்ன மாமியார் லலிதா மாமியை எனக்குத் தெரியும் அந்த மாமிதான் சொன்னா. நெமிலியில இருக்கற எம் மருமககிட்ட சொல்லு வழி கிடைக்கும்னு. உனக்குத் தெரியுமா" முகத்தில் ஒருவித எதிர்பார்ப்புடன் மாமி கேட்டாள்.

"அது நான்தான் மாமி... எனக்குதான் கனவு வரும்" எனது தாயார் சொல்லி முடிக்கவில்லை. வாசலிலேயே மாமி அழுது விட்டாள். பிறகு எனது தாயார் அவர்களை உள்ளே அழைத்துச் சென்று என்ன விஷயம் என்று கேட்க மாமி தனது மகனின் சோகக் கதையை அழுதபடி கூறினாள்.

மாமியின் மகன் பேங்க்கில் நல்ல உத்தியோகத்தில் இருப்பதாகவும், திருமணம் நன்றாக நடந்து குழந்தை கூட பிறந்ததாகவும், பிறகு அவர் புத்தி பேதலித்து அலுவலகம் செல்லாமல் பித்து பிடித்ததுபோல் வீட்டில் இருப்பதாகவும் மாமி அழுது கொண்டே கூறினாள்.

"நல்ல டாக்டர்கிட்ட காட்ட வேண்டியதுதானே" எனது தாயார் மாமியிடம் கேட்டார்.

"எல்லா டாக்டரும் பாத்தாச்சு. ஒரு பிரயோஜனமும் இல்ல. இப்ப பொண்டாட்டி புள்ளைய பாத்தா வெறுப்பு. சாப்பாட்டை பாத்தா வெறுப்பு. சரியா சாப்பிட்டு ஒரு

மாசம் ஆச்சு. வீட்டுல நிம்மதி இல்ல. நீதான்மா. அம்மாகிட்ட கேட்டு ஒரு வழி சொல்லணும்."

"நானா இதுவரைக்கும் எதுவும் கேட்டதில்ல மாமி. தானா கனவு வரும். அப்படி ஏதாவது கனவு வந்து ஏதாவது சொன்னா, கண்டிப்பா சொல்றேன்" எனக் கூறி மாமிக்கு ஆறுதல் சொல்லி அனுப்பி வைத்தாள் எனது அன்னை.

அன்று இரவு கனவு வந்தது. அதிலே மாமியின் மகனுக்கு பில்லிசூன்யம் வைத்திருப்பதாக தெரியவந்தது. பிறகு மாமி எனது அன்னையைத் தேடி வந்தபோது எனது அன்னை எல்லா விவரத்தையும் கூறினார்கள். மாமியோ... பையனை அழைத்துக் கொண்டு பில்லி சூன்யம் எடுப்பவர் வீட்டுக்குச் சென்று வந்ததாகவும், அதெல்லாம் ஒன்றுமில்லை எனவும் கூறியதாகவும் எனது தாயாரிடம் கூறினார்கள்.

எனது அன்னையோ உங்கள் மகனுக்கு சூன்யம் வைத்திருப்பதாகத்தான் கனவு வந்தது எனக் கூறியும் மாமிக்கு திருப்தி வரவில்லை. இரண்டு மூன்று இடத்தில் மகனைக் காட்டியதும் அங்கு சூன்யம் எல்லாம் கிடையாது என்று கூறியதும்தான் மாமிக்கு நினைவு வந்தது. பிறகு மாமி சென்று விட்டாள். இரண்டு மாதம் வீட்டுப் பக்கமே வரவில்லை.

அதற்குள் நாங்களும், மீண்டும் நெமிலிக்கு திரும்பி விட்டோம். ஒரு நாள் அந்த மாமி நெமிலிக்கு வந்தார். எனது அன்னையைப் பார்த்து "எனது மகனுக்கு இன்னும் அதிகமாகிவிட்டது". எனச் சொல்லி அழ, எனது தாயார் வாலாஜாவில் சூன்யம் எடுப்பது ஒருவருக்கு நன்றாக வரும், அவரிடம் உங்கள் மகனை அழைத்துச் செல்லுங்கள் என்று கூற வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த குட்டியம்மா என்ற பெண்மணியும் அதையே கூறினார்கள். தன் மகன் தேவராஜை உடன் அனுப்புவதாகவும், உங்கள் மகனை

இங்கே கூட்டிவாருங்கள் எனவும் அந்த மாமியிடம் குட்டியம்மா கூறினார்கள்.

"அவன் வெளியே வரமாட்டேன் என முரண்டு பிடிக்கிறான். அவனை நான் எப்படி நெமிலிக்கு அழைத்து வருவேன்" என மாமி கலங்க பாலாவின் குங்குமப் பிரசாதத்தை எனது அன்னை மாமியிடம் கொடுத்து "இதை உங்க மகன் நெத்தியிலே வச்சு கூட்டிக்கிட்டு வாங்க" எனக் கூறினார்.

மாமியின் மகன் பிரசாதம் செய்த மாயத்தால் கட்டுண்டு, தகராறு ஏதும் செய்யாமல் நெமிலிக்கு வர, இங்கிருந்து தேவராஜ் என்பவர், அவரை வாலாஜாவுக்கு அழைத்துச் சென்றார். அங்கு அவருக்கு ஒரு வடையில் மருந்து வைத்து கொடுத்தது கண்டு பிடிக்கப்பட்டது. மருந்து வைப்பது என்றால், வேண்டாதவர்கள், அல்லது பிடிக்காதவர்கள் மீது வஞ்சம் தீர்க்க, அவர்கள் வாழ்க்கையை நாசமாக்க சூன்யக்காரர் சிலரிடம் சொல்லி மருந்து செய்து சம்பந்தப்பட்ட நபருக்கு ஏதாவது தின்பண்டத்தில் வைத்துக் கொடுத்து விடுவது.

மாமியின் மகன்மேல் பொறாமை கொண்ட சிலர் அதுபோல மருந்தை வடையில் வைத்துக் கொடுத்ததை வாலாஜாவில் உள்ளவர் கண்டுபிடித்து வயிற்றுக்குள் இருந்த அந்த மருந்தை எடுத்துவிட்டார். அதன் பிறகு மாமியின் மகன் குணமடைந்து சகஜ நிலைக்குத் திரும்பி, பிறகு குடும்பத்தோடு பாலா பீடத்திற்கு வந்தார்கள்.

அன்னைக்கு கனவு வந்தது.

மாமிக்கு கவலை தீர்ந்தது.

23

உரிய நேரத்தில் வந்த உன்னத உபதேசம்!

எந்த பாலகன் வரவால் பாலா மகிழ்ந்தாளோ, நான்காம் தலைமுறையில் பூஜைகள் செய்ய பாலா எந்த பாலகனை தேர்வு செய்தாளோ, அந்த பாலகனுக்கு பாலா அளித்த சோதனைகள் ஒன்றல்ல இரண்டல்ல. எல்லா வகையிலும் அவனுக்கு சோதனைகள், வேதனைகள். தேர்வுகள் பல செய்து பிறகு அதில் தேர்ச்சி பெற்றவரை தேர்ந்தெடுப்பதுதான் அன்று தொட்டு இன்று வரை தொடரும் பழக்கம்.

பாலாவோ முன்னுக்குப் பின் முரணாக மோகன கிருஷ்ணனை, எனது தம்பியை தனக்கு பூஜைகள் செய்ய தேர்வு செய்து, பிறகு அவனுக்கு பல வித தேர்வுகளை வைத்தாள். சுப்ரமண்ய அய்யருக்குப் பிறகு தன்னுடைய பதிமூன்றாம் வயதில் சுந்தரராமய்யர் உபதேசம் பெற்றுக் கொண்டார். அதே போல் மோகனுக்கும் பதிமூன்று வயது வர வீட்டிலிருந்தவர்கள் அவனுக்கு உபதேசம் செய்து வைக்கும்படி சுந்தரராமய்யரிடம் கூறினார்கள்.

அதே சமயம் பாலாவின் உத்தரவும் வந்துவிட்டது. அதில் மோகன்தான் பூஜைகள் செய்ய வேண்டும் என்று தெள்ளத் தெளிவாக இருந்தது. ஆனால் அய்யரவர்களோ

பாலா உபதேசம் இந்தச் சின்ன வயதில் அவனுக்கு வேண்டாம். அவனால் அவள் தரும் சோதனைகளைத் தாங்கிக் கொள்ள முடியாது என்று கூறினார். நாங்கள் சும்மா இருந்துவிட்டோம். பாலா விடுவாளா?

அரக்கோணம் தாலுக்காபீஸ் சென்ற சுந்தர ராமய்யர் கீழே விழுந்து, கால் முறிந்து படுத்த படுக்கை ஆகிவிட்டார். தன்னால் எதையும் செய்ய இயலாத சூழ்நிலை, மோகனுக்கு உபதேசம் செய்து விட்டார்.

அவனோடு கோபாலகிருஷ்ணய்யர் மகனான T.K.G. வீரராகவனான எனது பெரியப்பாவுக்கும் உபதேசம். காரணம் சண்டிஹோமம் எல்லாம் செய்ய வேண்டும். அதை கிரஹஸ்தர்களானவர்கள்தான் செய்ய வேண்டும். அதற்காக அவருக்கும் பாலா உபதேசம் நடந்தது.

மோகனுக்கு உபதேசம் முடிந்த சிறிது காலத்திற்குள் உடல் நிலை அடிக்கடி பாதிப்புக்குள்ளானது. ஏதோ ஒரு வித நோய் வந்து கொண்டே இருக்கும். சரியாக பள்ளிக்குச் செல்ல முடியாது. சரியாக படிக்க முடியாது. சோதனை மேல் சோதனை.

படிப்பில் படு மந்தமாகிவிட்டான். பள்ளிப் படிப்பு அவனைப் பாடாய்ப் படுத்தியது. ஒருவாறாக மிகவும் கஷ்டப்பட்டு பிரயத்தனப்பட்டு பத்தாவது முடித்து +2 முடிப்பதற்குள் பாலா அவனை பல விதங்களில் சோதித்து விட்டாள். படிப்புக்கும் பாலாவுக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் கேட்க்கலாம்.

நிச்சயமாக அவனது படிப்பில் பாலாவுக்கு நிறையவே சம்பந்தமுண்டு. அவன் இங்கு இருக்க வேண்டும் முழுக்க முழுக்க தன்னுடன் இருக்க வேண்டும். அதற்காக எத்தனை வழி முறைகள் உண்டோ, அத்தனையும் பாலா பிரயோகித்தாள். அதில் சாம்பிளுக்கு ஒன்று

+2 முடித்தவுடன், பூந்தமல்லிக்கு பக்கத்தில் பம்மலில் ஒரு பாலிடெக்னிக் உண்டு, அங்கு சேர்ந்து படிக்க மோகன் அப்ளிகேஷன் வாங்கிவந்தான். பூந்தமல்லி, பெரியப்பா வீரராகவன் குடும்பத்தோடு தங்கியிருக்கும் ஊர். அங்கு தங்கி, அங்கிருந்து தினமும் பம்மல் சென்று பாலி டெக்னிக்கில் படித்து விட்டு வரலாம், என்பது மோகனின் திட்டம்.

தினமும் சென்று வர பஸ் பாஸ் வாங்கிக் கொள்ளலாம் என முடிவு செய்தான். வாரத்துக்கு ஒரு முறை நெமிலிக்கு வரலாம். இது அவன் போட்ட ஐடியா. அவன் போட்ட திட்டத்தின்படி பம்மல் பாலிடெக்னிக்கில் அப்ளிகேஷன் வாங்கினான். தனக்குத் தேவையான டிப்ளமோ கோர்ஸை தேர்வு செய்து, அதில் எல்லா விவரங்களையும் பூர்த்தி செய்தான்.

சீட் கிடைப்பது பற்றி பிரச்சினை இல்லை. பாலிடெக்னிக்கில் தெரிந்தவர்கள் பலர் இருக்கிறார்கள். டொனேஷன் ப்ராப்ளமும் கிடையாது. அப்ளிகேஷன் கொடுத்தால் போதும். சீட் கிடைத்த மாதிரிதான் பூர்த்தி செய்த அப்ளிகேஷனை பாலா பீடத்திற்குள் வைத்தான். நாளை காலை போஸ்ட் செய்ய வேண்டியதுதான் பாக்கி. இரவு வந்தது. தூங்கப் போய்விட்டான்.

அன்று இரவு என் அன்னைக்கு கனவு. அதிலே மோகன் படிப்புக்காக பூந்தமல்லி செல்லக்கூடாது. இதை அவனிடம் நீ சொல்லக்கூடாது. காலை எழுந்தும் அவனே உன்னிடம் என்ன சொல்கிறான் என்று கேள். பிறகு எல்லாம் என் இஷ்டப்படி நடக்கும் என பாலா ஒரு சிறுமி வடிவத்தில் வந்து கூறினாள்.

காலை புலர்ந்தது. எல்லாவற்றையும் ப்ளான் செய்து வைத்திருந்த மோகன், தான் எங்கு தங்க வேண்டும், எப்படிச் செல்ல வேண்டும் என திட்டம் போட்டு நேற்று

இரவு அப்ளிகேஷனை ஆசையோடு பாலா பீடத்தில் வைத்த மோகன், காலை எழுந்து வந்து தனது தாயிடம் "அம்மா... நான் பூந்தமல்லி போகமாட்டேன். எனக்கு பாலிடெக்னிக் வேண்டாம். நான் அரக்கோணத்திலேயே ஒரு கம்ப்யூட்டர் சென்டர் வந்திருக்கு. அங்கேயே படிச்சிக்கிறேன்" என்று சொன்னால் இதில் பாலாவின் சம்பந்தம் இல்லையென்று நாம் எப்படிக் கூறுவது. எந்தக் காயை எப்படி நகர்த்த வேண்டும் என்று அவளுக்குத் தெரியாதா? பிறகு அவன் அரக்கோணம் சென்று கம்ப்யூட்டர் கோர்ஸில் சேர்ந்தான். பாலா நெமிலிக்கு வர காரணமாக இருந்த விருத்தகிரி-உமா தம்பதிகள் பாலா பீடம் இருக்கும் வீட்டில்தான் வசித்து வந்தார்கள். சுந்தர ராமய்யர் குடும்பமும் அங்குதான் வசித்து வந்தது.

சுந்தரராமய்யர் மோகனுக்கு உபதேசம் செய்த சிறிது காலத்திற்குள் உடல் நிலை மோசமாகி பாலாவின் பாதகமலங்களில் சென்று சேர்ந்தார். அவருடைய இரண்டு மகளுக்கும் ஏற்கனவே திருமணம் ஆகிவிட்டது. அவருடைய மனைவி மீனாட்சி அம்மாள் மட்டும் இருந்தார்.

அரக்கோணத்தில் சேர்ந்த மோகனுக்கு அங்கு ஒரு துணை வேண்டும் என்று பாலா மீண்டும் காய்களை நகர்த்த, விருத்தகிரி குடும்பம் அரக்கோணம் சென்றது. வெள்ளிக்கிழமைகளில் நெமிலிக்கு வந்து பூஜைகள் செய்துவிட்டு, திங்கட்கிழமை மோகன் அரக்கோணம் சென்று விடுவான்.

உரிய நேரத்தில் வந்த அந்த உன்னத உபதேசத்தால் இதுவரை சோதனைகள்தான் வந்திருக்கிறது. இனிமேல் சாதனைகள் வரவிருக்கிறது.

"காலம் கனியும். அதுவரை காத்திருப்போம்".

24

எழில்மணி கட்டிய
எழில் மணிமண்டபம்!

மாரிதாஸர் ஸ்வாமிகள். ஆதம்பாக்கம் நவசக்தி கருமாரி அம்மன் கோவில் ஸ்தாபகரான இவர்தான் பாலாவின் மணிமண்டபத்திற்கு முதன் முதலில் பிள்ளையார் சுழி போட்டவர். முதலில் அடிக்கல் நாட்டியவர். பூஜைகள் செய்து வரும் வீரராகவன் அவர் களோடு மின் வாரியத்தில் பணி புரிந்தவர்.

பாலா பீடத்திற்கு எதிரே மண்டபத்திருப்பணியை துவக்கி வைத்தார் திரு. மாரிதாஸ ஸ்வாமிகள். ஒரு திருப்பணிக் கமிட்டியை ஆரம்பித்து தலைவர், செயலாளர், பொருளாளர் என சிலரைத் தேர்வு செய்து டொனேஷன் புக்ஸ் எல்லாம் ரெடியாகிவிட்டது.

இந்த நிலையில் எனது அன்னைக்கு கனவு வந்தது. “எனக்காக ஒவ்வொருவரிடம் டொனேஷன் என்ற பெயரில் பிச்சை வாங்கக்கூடாது. எனக்கு தேவையானதை நானே எனது மகன் எழில் மணி மூலம் செய்து கொள்வேன்” என்று பாலா எனது அன்னையிடம் திட்டவட்டமாக கூறி விட்டாள்.

இதை எப்படி அவர்களிடம் சொல்வது. கமிட்டி உருவாகிவிட்டது. புத்தகங்கள் தயாராகிவிட்டது. இந்த நிலையில் அவர்களிடம் கமிட்டி எல்லாம் வேண்டாம்.

நாங்களே பார்த்துக் கொள்கிறோம். டொனேஷன் வசூல் செய்ய வேண்டியதில்லை என்று எப்படிக் கூற முடியும்?

பாலா மீண்டும் காய்களை நகர்த்த ஆரம்பித்தாள். கமிட்டித் தலைவர், பொருளாளர், செயலாளர் இவர்களுக்குள் ஏதோ பிரச்சனை. பிரச்சனை பெரிதாக அவர்களே ஒதுங்கிக் கொண்டார்கள்.

கமிட்டி காணாமல் போனது. பிறகு அப்பா கடன் வாங்கி கொஞ்சம் கொஞ்சமாக தூண்களை எழுப்பினார். மண்டபம் சிறிது சிறிதாக கட்டப்பட்டு ஒரு நிலைக்கு வந்தது. இடையில் சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் திரிபுரசுந்தரி தேனிசை என்னும் கேஸட்டை வெளியிட பின்னணிப் பாடகர் கலைமாமணி திரு. K. வீரமணி அவர்களால் மண்டபத் திறப்பு விழா மிக விமரிசையாக நடந்தது. பாலா சொன்னது போல் நான்காவது தலை முறையில் கொஞ்சம் கொஞ்சமாக விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருக்கிறாள். அதன் முதல் கட்டம் இந்த மணி மண்டபம். தனக்குத் தேவையானவற்றை தன் மகன் மூலம் செய்து கொள்வதில் அவளுக்கு அலாதி பிரியம்.

அன்றிலிருந்து இன்று வரை யாரிடமும் அது தேவை... இது தேவை என பாலாவுக்கு என் தந்தை எதையும் கேட்கவில்லை. பாலாவிற்காக, பாலாவின் மீதுள்ள பற்றுக்காக அவளது பக்தர்கள் அவளுக்குச் செய்வதை என் தந்தை தடுத்ததுமில்லை. அவளது ஒப்புதலின்றி அவளது கற்பூரத் தட்டில் பத்து பைசா போட முடியாது என்பது பாலா சொன்ன வாக்கு.

பாலாவிற்கென தனது வாழ்வை தந்தையான எழில்மணி அவர்கள் அர்ப்பணித்துக் கொண்டதால் பாலா அவரோடு ஒன்றிவிட்டாள்.

"எழில்மணி கட்டிய எழில் மணிமண்டபத்தில் பாலா எழிலோடு அமர்ந்திருக்கிறாள். வரும் ஏழை எளியவர்க்கு அருள் கொடுக்கிறாள்.

25

அரங்கம் சிறக்க வேண்டும் அன்பு மகன் திறக்க வேண்டும்!

புண்ணியம் சேர்க்கும் புரட்டாசி மாதம் வந்தால் போதும் நெமிலிக்கு புத்துணர்ச்சி வந்துவிடும். ஆம்! ஓங்கி உயர்ந்திருக்கும் அந்த பாலா பீடத்தில் அந்த ஒன்பது, நாளும் இடைவிடாமல் வேத மந்திரங்கள் ஒரு புறம் ஒலிக்கும், கலை நிகழ்ச்சிகள் மறுபுறம் நடக்கும். இயல், இசை, நாடகம் என முத்தமிழும் அன்னை பாலாவின் முன்னே முழங்கும்.

நவராத்திரி நிகழ்ச்சிகளுக்கு வசதியாக வெளியே ஒரு மேடை அமைக்கப்பட்டு சுற்றி பந்தல் போடப்படும். ஒவ்வொரு நவராத்திரியிலும் முதல் நிகழ்ச்சியாக பத்மஸ்ரீ. இசைமணி டாக்டர். சீர்காழி எஸ். கோவிந்தராஜன் அவர்களின் நிகழ்ச்சி நடைபெறும். இறுதி நிகழ்ச்சியாக கலைமாமணி K. வீரமணி அவர்களின் நிகழ்ச்சி நடைபெறும்.

திரு. சீர்காழி கோவிந்தராஜன் மறைவுக்குப் பிறகு வந்த நவராத்திரியில் வழக்கமாக போடப்படும் மேடைக்கு அவர் நினைவாக **"இசைமணி சீர்காழி எஸ். கோவிந்தராஜன் இசை அரங்கம்"** எனப் பெயரிடப் பட்டது. நவராத்திரி பத்திரிகைகளில் இசைமணி சீர்காழி

எஸ். கோவிந்தராஜன் இசை அரங்கத்தில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும் எனப் போடப்பட்டது.

நவராத்திரியும் வந்தது. அரங்கம் பெயர் எழுதப்பட்ட புதிய பேனர் மேடையில் கட்டப்பட்டது. முதல் நிகழ்ச்சி திரு. மாம்பலம் சீனுவாசன் என்பவரது இசைக்கச்சேரி. நேரம் போய்க் கொண்டிருக்க பாட வேண்டியவர் வரவே இல்லை. எனது அன்னையோ தலைவலி காரணமாக உள்ளே படுத்திருந்தார்.

"சீர்காழி அரங்கத்துல என் புள்ளைதான் முதல்ல பாடணும். அப்புறம்தான் மத்தவங்க பாடணும். முதல்ல அவனைப் பாடச் சொல்லு" என பாலா என் அன்னையின் கனவில் வந்து உத்தரவிட, விஷயம் என் தந்தையான திரு. எழில் மணி அவர்களிடம் உடனே சொல்லப் படுகிறது.

அவருக்கோ தயக்கம். சரி அன்னையே கூறிய பிறகு சும்மா இருந்தால் எப்படி? எழில்மணி மேடையேறி இரண்டு பாடல்கள் பாட கச்சேரி செய்ய வேண்டிய நபர் ஒரு மணி நேரம் தாமதமாக வந்து சேர்ந்தார். பிறகு ஒன்பது நாளும் நிகழச்சிகள் தடங்கல் ஏதுமின்றி நல்ல முறையில் நடைபெற்றது. பாலாவின் இந்த லீலையை ஒரு நிமிடம் யோசித்துப் பாருங்கள்.

சீர்காழி அரங்கத்தில் பாடவேண்டியவரை ஒரு மணி நேரம் தாமதப்படுத்தி, அந்த நேரத்தில் எழில்மணியை பாடச் சொன்னதில் ஒரு உள் நோக்கம் உண்டு. அது என்ன வென்றால் எழில்மணி அவர்களுக்கு பாலா பேரில் எவ்வளவு பக்தியோ அதே போல் சீர்காழி கோவிந்தராஜன் மீதும் பக்தி இருந்தது. பாசம் இருந்தது.

அவர் பெயரில் திறந்த அந்த அரங்கம் சிறந்த அரங்கமாக திகழ எழில்மணிதான் பாட வேண்டும் என்று சீர்காழி கோவிந்தராஜன் அவர்களே பாலாவிடம் சிபாரிசு

செய்திருப்பார். இந்த லீலை சீர்காழியும் பாலாவும் சேர்ந்து செய்த கூட்டு முயற்சி என்றால் அது மிகையல்ல.

பாலா சீர்காழி கூட்டணி சில வருடங்களுக்குப் பிறகு மீண்டும் ஒரு அற்புதத்தை நிகழ்த்தியது. பாலா பீடத்திற்கு பக்கத்தில் முழுக்க முழுக்க திரு. எழில்மணி அவர்களின் முயற்சியால், ஒரு புதிய கட்டடம் கட்டப்பட்டது. கட்டடத் தின் முன்பு நிரந்தரமாக ஒரு மேடையும். அதற்கு பின்னே கலைஞர்கள் தங்க ஒரு அறையும் கட்டப்பட்டது.

கிட்டத்தட்ட அறுபதே நாட்களில் அன்னை பாலா வின் அருளாசிகளோடு புதிய பில்டிங் கட்டி முடிக்கப் பட்டது. மூன்றே வருடங்களில் தற்காலிகமாக அமைக்கப் பட்டு வந்த சீர்காழி அரங்கம், நிரந்தரமாகவும், அழகாகவும் கட்டப்பட்டது. திறப்பு விழா நவராத்திரியில் என்று முடிவு செய்யப்பட்டது.

எழில்மணி அவர்களுக்கு இந்த அரங்கத்தை புகழ் பெற்ற ஒருவரை அழைத்து வந்து திறக்கச் சொல்ல வேண்டும் என்று ஆசை. அவரது நீண்ட நாளைய கனவுதான் சீர்காழி அரங்கம். கனவு நனவாகி விட்டது. அரங்கத் திறப்பு விழா மிகவும் பிரம்மாண்டமாக இருக்கு மாறு ஒரு அமைச்சரைக் கொண்டு வந்து திறக்க முடிவு செய்தார்.

அந்த அமைச்சருக்கு, அமைச்சர் பதவி கிடைத்ததே அன்னை பாலாவின் பிரசாத மகிமையால்தான். அமைச்சர் நல்லவர்தான். ஆனால் அவர் மூலம் அரங்கம் திறப்பதை பாலா-சீர்காழி கூட்டணி ஏற்கவில்லை. எழில்மணி அவர்கள் சென்ற போதெல்லாம் ஏதோ ஒரு தடங்கல். நவராத்திரி வேறு நெருங்கிவிட்டது.

எழில்மணி தனது திட்டத்தை மாற்றிக்கொண்டு அரசியல்வாதி இல்லையென்றால் என்ன ஒரு ஆன்மீக வாதி மூலம் திறக்கலாம் என ஸ்வாமிஜி ஒருவரிடம் இந்த

விஷயத்தைக் கூற, அவரும் அதற்கு சம்மதித்து ஒரு கல்வெட்டு தயார் செய்யச் சொல்லி ஆர்டர் கொடுத்து விட்டார். இன்ன தேதியில் இன்னார் மூலம் திறக்கப்பட்டது என்ற மேட்டரும் ரெடி.

எல்லாம் முடித்துக் கொண்டு எழில்மணி அவர்கள் வீடு திரும்ப வீட்டில் பூகம்பம் கிளம்பியது. வீட்டிலிருந்த என் அன்னை உட்பட அனைவரும் எனது தந்தையிடம், இவ்வளவு கஷ்டப்பட்டு கட்டிவிட்டு, அரங்கத்தை மற்றவர் திறப்பது கூடாது, நீங்களே திறப்பு விழா செய்து அரங்கத்தைத் திறக்க வேண்டும் என்று கூறினர்.

எனது தந்தையோ, "நானே கட்டிவிட்டு, அதை நானே திறந்தால் அசிங்கம். என்னால் முடியாது. ஸ்வாமிஜி திறப்பதாகக் கூறிவிட்டார். கல்வெட்டுக்குக்கூட சொல்லி யாகிவிட்டது. இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது" என மறுத்துவிட்டார்.

இரவு அன்னையின் கனவிலே பாலா "அரங்கத்தை என் புள்ளதான் திறக்கணும். மத்த யாரையும் திறக்க விடமாட்டேன். திறக்கவும் முடியாது" என்று திட்டவட்ட மாகக் கூறிவிட, காலை எழுந்தவுடன் சண்டை. தந்தையோ "நான் எப்படி அவர்கிட்ட நீங்க திறக்கக் கூடாதுன்னு சொல்லுவேன். என்னால அது முடியாது." என அன்னையிடம் கத்தினார்.

பிறகு ஒருவழியாக சண்டை முடிந்து என் தந்தை சென்னை கிளம்பிச் செல்ல, அங்கே பாலா சீர்காழி கூட்டணி செய்த அற்புதத்தை நான் என்னவென்று எழுது வேன்! நேரே எனது தந்தை ஸ்வாமிஜியிடம் சென்றார். விஷயத்தை எப்படி அவரிடம் கூறுவது. தயக்கத்தோடு உள்ளே சென்றவருக்கு ஸ்வாமிஜி சொன்னது தேனாய் இனித்தது.

“எழில்மணி எனக்கு ஒரு முக்கியமான ஒரு யாகம் விசாகப்பட்டினத்தில ஏற்பாடாயிருக்கு. நான் அவசியம் போயாகணும். என்னால திறப்பு விழாவுக்கு வர முடியாது போலேருக்கு. என்ன செய்ய” என்றார். என் தந்தையோ “அப்ப கல்வெட்டு” என இழுக்க “கல்வெட்டு வேலை இன்னும் ஆரம்பிக்கல. அந்த ஆள் எங்கேயோ வெளியூர் போயிட்டான்.”

என் தந்தை திருப்தியோடு நெமிலி திரும்பி என் அன்னையிடம் விஷயத்தைக் கூற அனைவருக்கும் மகிழ்ச்சி. பாலாவின் லீலையை எண்ணி எண்ணி மகிழ்ந்தனர். நவராத்திரி வந்தது. முதல் நாள் முதல் நிகழ்ச்சி

“இசைமணி டாக்டர். சீர்காழி. S.கோவிந்தராஜன்” இன்னிசை அரங்கம் திறப்பு விழா.

டாக்டர். சீர்காழி எஸ்.ஜி. சிவசிதம்பரம் முன்னிலையில் நெமிலி எழில்மணி அவர்கள் அரங்கத்தை திறந்து வைக்க அனைவருக்கும் மகிழ்ச்சி. அன்னை பாலா சீர்காழி கூட்டணிக்கோ அளவிலா மகிழ்ச்சி. முதல் இசை நிகழ்ச்சியாக டாக்டர். சீர்காழி எஸ்.ஜி. சிவசிதம்பரம் அவர்களின் இன்னிசைக் கச்சேரி நடைபெற்றது.

“அவளின்றி ஓர் அசைவும் இருக்காது" என்பதற்கு இந்த நிகழ்ச்சி மற்றுமொரு உதாரணம்.

26

அன்னையைத் தேடிவந்த ஆற்றல் மிகு தெய்வங்கள்!

தெய்வங்களைத் தேடி நாம்தான் செல்ல வேண்டும். நம்மைத் தேடி தெய்வங்கள் வராது என்று சொல்வார்கள். எனது அன்னையைத் தேடி வந்து அருள் பாலித்த அந்த ஆற்றல் மிகு தெய்வங்களைப் பற்றிய ஆச்சர்யமான தகவலை நான் சொல்லாமல் போனால் எப்படி? இதில் சிறப்பம்சம் என்னவென்றால் அந்த தெய்வங்கள் அனைத்தும் என் அன்னையிடம் கனவில் வந்துதான் பேசியிருக்கின்றன. அதுவும் தன்னுடைய உண்மை வடிவத்தில் வாராமல், மனித உருவில் வந்துதான் அருள் பாலித்துள்ளன.

நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியது இந்த இடத்தில்தான். இந்தக் கலியுகத்தில் தெய்வங்கள் நேரில் தோன்றாது. மனித உருவில்தான் தோன்றும், நாட்டிற்கும் நாட்டு மக்களுக்கும் நன்மை பயக்கும். உதாரணத்திற்கு ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர், ரமணமகரிஷி மற்றும் காஞ்சிப் பெரியவாள். ஆனால் எந்த தெய்வமும் தன்னுடைய சுயரூபத்தில் நேருக்கு நேர் வந்து யாருடனும் பேசாது.

அப்படி நேரில், வந்து விட்டாலும் நாம் சத்தியமாக நம்ப மாட்டோம். ஒரு சிவனோ, பிரம்மாவோ அல்லது விஷ்ணுவோ நம் முன் தோன்றினால் நம் மனத்தில் என்ன சிந்தனை தோன்றும் தெரியுமா? ஏதோ நாடகத்தில் நடித்துக் கொண்டிருந்த நடிகர் முகவரி தவறி நம் வீட்டுக்கு வந்திருக்கிறார் என நினைப்போம். கடவுளே கதறிக் கதறி நான்தான் கடவுள் என்று அழுது புரண்டாலும் நாம் எளிதில் ஒத்துக்கொள்ள மாட்டோம். சிவனே நேரில் வந்தாலும், அவரிடம் லிங்கத்தை வரவழைத்துக் கொடுப்பாயா? என்று கேட்கும் நிலையில்தான் நாம் இன்று இருக்கிறோம்!

அப்படியே அவரைக் கடவுளாக ஏற்றுக் கொள்ள விரும்பினால் சில மட்டமான சித்து விளையாட்டுக்கள் மற்றும் மாஜிக்குகளைச் செய்து காட்டச் சொல்லி நம்மைப் படைத்து காத்து வரும் தெய்வங்களுக்கே நாம் சில பரிட்சைகளை வைத்து தண்ணி காட்டுவோம். இது கடவுளுக்குத் தேவையா? கடவுள் நம்மை சோதிக்கும் முன் கடவுளை நாம் சோதித்தால் எப்படி?

அதனால்தான் சொல்கிறேன். இன்றைய கால கட்டத்தில் தெய்வங்கள் நேருக்கு நேர் தோன்றி நம்முடன் பேசவே பேசாது. ஆண் தெய்வங்கள் பரவாயில்லை. நம்முன் தோன்றினால் நம்புகிறமோ இல்லையோ. அதனோடு பேசவாவது செய்வோம். ஆனால் பெண் தெய்வங்கள் என்றால் அவ்வளவுதான். மாரியம்மன், காளியம்மன் போன்ற தெய்வங்கள் ஆயிரம் கைகள் மற்றும், ஆயிரம் கண்களோடு நம் முன் வந்து நின்றால் என்ன வாகும்?

நேரே மோர்ட்சம்தான். பார்த்தவுடன் பயத்திலேயே இறந்துவிடுவோம். தெய்வங்களை நேருக்கு நேர் சந்திக்கும் பக்குவம் நம் யாருக்குமே கிடையாது. கடந்த 27

வருடங்களாக என் அன்னைக்கு கனவில், அதுவும் மனித உருவில் தெய்வங்கள் தோன்றி எல்லாவற்றையும் சொல்லியிருக்கின்றன.

அந்த ஆற்றல் மிகு தெய்வங்களுக்கும் எனது அன்னைக்கும் கனவு ஒரு பாலம். தனக்குத் தேவையான வற்றையும் பிறருக்குத் தேவையானவற்றையும், தேவையான நேரத்தில் வந்து தெய்வங்களே என் அன்னையிடம் இதைச் செய். இதைச் செய்யாதே என்று சொல்லி விடும். இந்த பாக்கியம் எல்லோருக்கும் கிடைத்து விடுமா?

எனது தந்தைக்கு ஒரு சமயம் டைபாய்டு ஜீரமும் அதைத் தொடர்ந்து மஞ்சட்காமாலையும் வந்து உடலை வாட்டியது. அந்த நேரத்தில் என் அன்னையின் கனவில் ஒரு பெண்மணி தோன்றி இவ்வாறு கூறினார்.

"இதோ பாரும்மா ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் விரதம் இருந்து என் கோயிலுக்கு வந்து பிரதட்சணம் பண்ணு. உன் புருஷனுக்கு எல்லாம் சரியாயிடும்"

எனது அன்னை சரி என்று தலையாட்டிய படி "எந்தக் கோயிலுக்கு வரணும்" என்று கேட்க

"அதோ எதிரே இருக்கே அந்தக் கோவிலுக்கு வா. நீ எதுக்கும் பயப்படாதே. உன் கூடவே நான் இருப்பேன்" எனச் சொல்லி எதிரே இருந்த 'மாரியம்மன் கோவிலைக் காட்டி விட்டுச் சென்றார் அந்தப் பெண்மணி.

உடனே மற்றொரு பெண்மணி அங்கு வந்து "அவளுக்கு மட்டும்தான் விரதம் இருப்பியா? எனக்கும் செவ்வாய்க்கிழமை அன்னிக்கு வாராவாரம் விரதம் இருக்கணும். ஊர் எல்லைல இருக்கற என் கோவிலுக்கு வரணும். நானும் உன் கூடதான் இருக்கேன். இன்னும் இருப்பேன். செய்வியா?" என அதட்டும் தோரணையில் கேட்டார்.

எனது அன்னையும் சரி என்று தலையாட்டிவிட்டு எந்தக் கோவில் என்று கேட்க, அந்தப் பெண்மணி கை காட்டிய திசையில் காளியம்மன் கோவில் இருந்தது. வார நாட்களில் செவ்வாயும், வெள்ளியும் மாரியம்மன் மற்றும் காளியம்மனால் புக் செய்யப்பட அப்போதுதான் ஒரு விந்தை நிகழ்ந்தது.

நெற்றியில் பெரிதாக நாமம் போட்ட பெரியவர் என் அன்னையிடம் வந்து

"அவங்க ரெண்டு பேரும் சொல்லிட்டுப் போயிட்டாங்க. அவங்க சொன்னதைச் செய். வேண்டாம்னு சொல்லலை. அதே சமயம் சனிக் கிழமை, சனிக்கிழமை எனக்காக விரதம் இரு. உன் குடும்பத்துக்கு எந்தக் குறையும் வராது" எனக் கூறிச் சென்றார்.

ஒரு நாள் இரவிலேயே ஒன்று மாற்றி ஒன்று என மூன்று தெய்வங்கள் எனது அன்னையின் கனவிலே தோன்றி அன்னைக்குத் தேவையானவற்றை சொல்லிச் சென்றன. அது நாள் வரை எனது அன்னை விரதம் இருந்ததே இல்லை. பிறகுதான் விரதம் இருக்க ஆரம்பித்தார். எனது தந்தைக்கும் உடல்நிலை சரியானது.

அதே போல எங்கள் ஊரிலிருக்கும் மாரியம்மன், காளியம்மன், பொன்னியம்மன் மற்றும் அங்காளம்மன் கோவில்களுக்கு வருடத்திற்கு ஒரு முறை அபிஷேகத்தை நவராத்திரிக்கு முன்பு எனது அன்னை செய்விப்பார்கள். அபிஷேகத்திற்கு வேண்டிய பொருட்களை வாங்கிக் கொடுத்து விடுவோம்.

ஒரு முறை எனது அன்னையின் கனவில் இரண்டு பெண்மணிகள் தோன்றி "எல்லாருக்கும் அபிஷேகம் பண்றே. எங்களை மட்டும் மறந்திட்டியே நியாயமா?" என்று கேட்க, எனது தாயார் அவர்கள் யார் என்று

தெரியாமல் குழம்பி "நீங்க யாருன்னே எனக்குத் தெரியலை" என்று கேட்டார்.

"அதுக்குள்ளே எங்களை மறந்துட்டியே! எங்க ஊர்லதானே உனக்கு கல்யாணமே ஆச்சு. எங்க ரெண்டு பேரை உனக்கு அடையாளம் தெரியலை? நான்தான் செல்லியம்மா. இவ மந்தைவெளியம்மா" என்றவுடன், எனது தாயாருக்கு ஆச்சர்யத்தோடு மகிழ்ச்சி ஏற்பட்டு, சரி என்று தலையாட்ட கனவு கலைந்தது.

எனது அன்னைக்குத் திருமணம் நடந்தது மங்கலம் எனும் கிராமத்தில். அந்த கிராமத்தின் காவல் தெய்வங்கள் தான் மந்தைவெளியம்மன் மற்றும் செல்லியம்மன். ஊருக்குள் நுழையும் போதே இரண்டு கோயில்களைத் தாண்டித்தான் செல்ல வேண்டும். இரண்டுமே சக்தி மிகு கோயில்கள்.

கனவு வந்த பிறகு, அபிஷேகம் செய்து கொள்ளும் அம்மன் லிஸ்ட்டில் மந்தை வெளி அம்மனும், செல்லியம்மனும் சேர்ந்து கொண்டன. மங்கலத்தில் வசிக்கும் வஸந்தா அத்தையிடம் பணம் கொடுத்து விடுவோம். அபிஷேகம் நல்லபடி நடந்து பிரசாதம் நெமிலிக்கு வந்துவிடும்.

இன்றளவும் ஆற்றல் மிகு தெய்வங்கள் கனவு வாயிலாக எனது அன்னையைத் தேடி வந்த வண்ணமிருக்கின்றன. தனக்குத் தேவையானவற்றை உரிமை யோடு கேட்டுப் பெறுகின்றன. அதேபோல பாலா கூறித்தான் நான் இந்த புத்தகத்தை எழுதுகிறேன்.

"எல்லாம் அவள் செயல்."

27

முன்னாள் முதல்வரின் முடிவான யாத்திரை !

அன்னை பாலாவின் விளையாட்டுக்கு அளவேது? அவளது லீலைகளுக்கு எல்லைதான் ஏது? நாம் நினைத்துக் கூடப் பார்க்காத அளவிற்கு நடந்த ஒரு வியப்பான அற்புதம் பற்றி நான் உங்களுக்குச் சொல்லியே தீர வேண்டும். புரட்சித் தலைவர் முன்னாள் முதல்வர். திரு. எம்.ஜி.ஆர் அவர்கள் ஆட்சி செய்து கொண்டிருந்த நேரம்.

புரட்சித் தலைவருக்கு உடல் நலக் குறைவு ஏற்பட்டது. அவர் குணம் அடைய வேண்டி தமிழகமே பிரார்த்தனை செய்தது. அதே சமயம் என் அன்னைக்கு ஒரு கனவு. அதிலே பாலா ஒரு பெண்மணி வடிவத்தில் தோன்ற, எனது அன்னையோ எம்.ஜி.ஆர் உடல் நிலை சரியாகுமா. அவர் மீண்டும் குணமடைவாரா என்று கேட்கிறார்.

அந்நேரம் ஒரு விமானம் வந்திறங்க அதிலிருந்து இரண்டு டாக்டர்கள் இறங்கி வருகின்றனர். அந்தப் பெண்மணி என் அன்னையிடம் "பயப்படாதே அவங்க தான் ஜப்பான் டாக்டருங்க. எம்.ஜி.ஆருக்கு சிகிச்சை தருவாங்க. எல்லாம் சரியாயிடும்" என்று சொல்லிச் சிரிக்க, எனது அன்னைக்கோ ஒரே சந்தோஷம்.

தனக்கு வந்த கனவை வீட்டில் கூற, யாருமே அதை நம்பவில்லை. கேலி செய்தனர். ஒரு வாரம் கழிந்துதான் அந்த ஆச்சர்யம் நடந்தது. புரட்சித் தலைவருக்கு சிகிச்சை தருவதற்காக இரண்டு மருத்துவர்கள் ஜப்பானிலிருந்து விமானம் மூலம் வந்திறங்கியதை T.V.யில் காட்ட அனைவருக்கும் அதிர்ச்சி.

புரட்சித் தலைவர் விரைவில் குணமடைந்தார். தமிழகமே சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தது. எங்கள் வீட்டிலும் சந்தோஷம். பொதுவாக எம்.ஜி.ஆர் என்றாலே எங்கள் குடும்பத்தினர் அனைவருக்கும் பிடிக்கும். அது மட்டுமின்றி கனவிலே பாலா வந்து அவர் குணமடைவார் எனச் சொல்லி அதே போல நடந்தால் அனைவருக்கும் கூடுதல் மகிழ்ச்சி.

எனது அன்னை “இந்த விஷயத்தை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களிடம் கூறி அவரை பாலா பீடத்திற்கு அழைத்து வரமுடியுமா” என என் த்ந்தையிடம் கேட்க அவரோ சிரித்தபடி “ஒரு M.L.Aவுக்கோ ஏகப்பட்ட பந்தோபஸ்த்து. அவரைப் பாக்கறதே கஷ்டம். இதுலே C.M பாத்து பேசிக் கூட்டிக்கிட்டு வர்றது முடியவே முடியாது” என்றார்.

“யாராவது மினிஸ்டர் மூலமா, C.Mகிட்ட சொல்லி ட்ரை பண்ணலாமே” என அன்னை, எனது தந்தையை நச்சரித்தார். “இதோ பாரு.. அப்படியே அவர் வந்தாலும் இந்த நெமிலியே பத்தாது. நம்ம வீடு எம்மாத்திரம். அவருக்கு ஆயிரத்தெட்டு அரசியல் பிரச்சனைங்க. நடுவுல அவர் உடல் நிலை இப்பதான் தேறியிருக்கு. அவர் ஒத்துக்கிடுவார்.

ஆனா அவரோட டாக்டருங்க ஒத்துக்க மாட்டாங்க. செக்யூரிட்டி பிரச்சனை வேற போதாக்குறைக்கு. இத்தனையும் மீறி அவர் வந்தா நாம எல்லாரையும் அலவ் பண்ண மாட்டாங்க. குறிப்பிட்டவங்கள மட்டும்தான்

அலவ் பண்ணுவாங்க. அவர் வர்றது தெரிஞ்சா ஊர்க்காரங்க, உறவுக்காரங்க வேற வந்துடுவாங்க. அதெல்லாம் நினைச்சுப் பாக்கவே முடியாது" என்று என் தந்தை திட்டவட்டமாக கூறிவிட்டார்.

நாட்கள் நகர்ந்தன. அதன் பிறகு அந்தப் பிரச்சினையை அனைவரும் மறந்து போயினர். சில வருடங்களுக்குப் பிறகு எனது மாமா திரு. கோதண்டராமன் அவர்களுக்கு ஒரு கனவு வந்தது. எனது மாமா எப்போதும் படுத்து உறங்குவது வீட்டு வாசலுக்கு பக்கத்தில் இருக்கும் முதல் ரூமில் எனது சின்ன மாமா குடும்பம் எதிர் ரூமில்.

இரண்டு ரூம்களும் எதிரேதிரே. இதைக் கடந்ததுதான் வாசலுக்கு வரவேண்டும். அந்த வாசலுக்கு வெளியே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் வந்து நின்று கொண்டு "கதவைத் திறங்கள்... சீக்கிரம் கதவைத் திறங்கள்" என்று கத்த மாமாவால் எம்.ஜி.ஆர் அவர்கள் போடும் சத்தத்தைக் கேட்க முடிந்தது.

ஆனால் படுக்கையை விட்டு எழ முடியவில்லை. வெளியே எம்.ஜி.ஆர் அவர்களோ கதவை பலமாகத் தட்டியபடி இருக்கிறார். கத்துகிறார். கதறுகிறார். ஆனால் மாமாவால் ரூமை விட்டு வெளியே வர முடியவில்லை. ரூமிலிருந்த ஜன்னல் வழியாக எம்.ஜி.ஆர் அவர்களின் முகம் பளிச்செனத் தெரிகிறது. ஒரு வழியாகக் கனவு கலைந்தது.

தனக்கு வந்த கனவை விடிகாலை எழுந்து வந்து அனைவரிடமும் கூற, அந்த நேரத்தில் வானொலியில் புரட்சித் தலைவர் மறைந்த விஷயத்தைக் கூற அனைவருக்கும் பயங்கர அதிர்ச்சி. "அய்யோ நான் கதவைத் திறந்திருந்தால் கண்டிப்பாக பிழைத்திருப்பார்" என மாமா ஆதங்கப்பட்டார்.

"முன்னாள் முதல்வரின் முடிவான யாத்திரையாக நெமிலி அமைந்ததை எங்களால் இன்னும் மறக்கமுடிய வில்லை.

28

அன்னையின் சன்னதியில் சாதனை அதற்குப் பிறகு வந்த சோதனை!

எனது தந்தை நெமிலி எழில்மணி அவர்களின் உடன் பிறந்த சகோதரர் T.K. வெங்கடசுப்ரமண்யம் புதல்வி இந்திராவுக்கும், நெமிலி எழில்மணி அவர்களின் உடன் பிறந்த சகோதரி வஸந்தாம்மாள் புதல்வன் பாலாஜிக்கும் திருமணம் நிச்சயமானது. மற்ற திருமணங்கள் போல அவ்வளவு சாதரணமான முறையில் இந்தத் திருமணம் நிச்சயமாகவில்லை. பல தடங்கல்களுக்குப்பிறகு, அன்னை பாலாவின் உத்தரவு வந்த பிறகுதான் நிச்சயமானது.

பார்க்கப் போனால் பாலாஜிக்கு இந்திரா மாமன் மகள். ஆனால் இந்திராவின் ஜாதகத்தில் ஏகப்பட்ட கோளாறுகள். கணித்தவர்கள் ஏதேதோ சொன்னார்கள். ஆனால் எனது பெரியப்பாவான திரு. வெங்கட சுப்ரமண்யம் அவர்களுக்கு, பாலாஜியை விட்டால் தனது மகள் இந்திராவுக்கு வேறு வரன் அமையாது என்று தீர்க்கமாகத் தெரிந்துவிட்டது.

அதே போல் பாலாஜிக்கும் தனக்கு இந்திராவைத் தவிர வேறு யாரும் மனைவியாக முடியாது என நன்றாகத் தெரியும். காரணம் எனது பெரியப்பா மற்றும் பாலாஜி இருவருக்கும் ஜாதகம் கணிக்கவும், எழுதவும் நன்றாகத்

தெரியும். ஒரு வழியாக எல்லாப் பிரச்சனைகளும் சூழ்ந்து கொள்ள இந்த திருமணம் எங்கே நடக்கப் போகிறது என ஒட்டுமொத்த உறவினர்கள் அனைவரும் முடிவு செய்து விட்டனர்.

இதில் நாம் கவனிக்கவேண்டிய மற்றொரு முக்கியமான விஷயம், இந்திராவுக்கு பாலாஜியைக் கட்டிக் கொள்ள துளிக்கூட இஷ்டமில்லை. இந்த நேரத்தில் எனது அன்னைக்கு கனவு வந்தது. பாலாவின் சன்னதியில் பாலாஜி இந்திரா திருமணம் பற்றி பேசுமாறு உத்தரவு வந்தது. அனைவரும் பாலா பீடத்தில் ஒன்று கூடினர்.

முடிந்த அளவுக்கு பிரச்சனைகளைப் பற்றி விவாதித்தனர். முடியாமல் போகவே எல்லாப் பிரச்சனைகளையும் மூட்டைகட்டி பாலாவின் காலடியில் வைத்துவிட்டனர். நீ விட்டது வழி என்று கூறிவிட்டனர். அன்னை பாலா தன் கை வரிசையைக் காட்டத் துவங்கினாள். முதலில் பாலாஜிக்கு ஒரு நல்ல வேலை வந்தது. பிறகு திருமணம் செய்துகொள்ளும் ஒரு நல்ல வேளை வந்தது.

அன்னை பாலா காய்களை நகர்த்த ஆரம்பித்தாள். இதில் பெரிய சாதனை என்னவென்றால் சிகப்புக் கொடி காட்டிய இந்திரா பச்சைக் கொடி காண்பித்ததுதான். அன்னை பாலாவின் அருளோடு பல திருமணங்கள் நடந்துள்ளன. ஆனால் பாலாவின் ஆசியோடு "பாலா பீடத்தில்" நடந்த முதல் திருமணம் பாலாஜி - இந்திரா திருமணம்தான். அன்னைபாலா நிகழ்த்திக் காட்டிய மிகப் பெரிய சாதனை. அவள் சன்னதியில் நடைபெற்ற அருமையான சாதனை.

சாதனை நடந்து முடிந்த ஓராண்டுக்குப் பின்னால் சோதனை ஆரம்பமானது. இந்திராவுக்கு குறைப் பிரசவத்தில் ஒரு குழந்தை பிறந்து, உடலில் நீல நிறம்

பாய்ந்து இறந்து போனது. பிறந்தது அழகான ஒரு ஆண் குழந்தை. (உடலில் நீல நிறம் பாய்ந்த குழந்தைகளை BLUE BABY என்று கூறுவார்கள்.)

வீட்டில் அனைவருக்கும் மிகவும் கஷ்டமாகி விட்டது. பெற்ற தாய்க்கோ பெரும் துயரம். அழுது அழுது கண்களில் ஈரம். லேடி டாக்டர் ஒருவரிடம்தான் இந்திரா அடிக்கடி செக்கப் செய்து கொள்வாள். "நீங்கள் டூர் சென்றதால்தான் அந்தக் குழந்தை இறந்து விட்டது" என அந்த லேடி டாக்டர் கூறிவிட்டார்.

வருடா வருடம் நாங்கள் ஒவ்வொரு மாநிலத்தில் உள்ள புனித ஸ்தலங்களுக்கு சுற்றுலா செல்வது வழக்கம். அந்த வருடமும் அப்படி டூர் செல்லும் போது இந்திரா - பாலாஜி இருவரும் எங்களோடு வந்தனர். சுற்றுலாவை எனது தந்தைதான் ஏற்பாடு செய்வார். எனது தந்தையின் வற்புறுத்தலால் இந்திரா - பாலாஜி டூருக்கு வந்தனர்.

உடனே உறவினர்கள் சிலர் எனது தந்தையின் தலையை உருட்ட ஆரம்பித்தனர். அவரால்தான் குழந்தை இறந்தது என்று நா கூசாமல் பேசினர். டூருக்குச் செல்லாமல் இருந்திருந்தால் குழந்தை பிழைத்திருக்கும் என்று ஆருடம் கூறினர்.

அடுத்த வருடம் மீண்டும் உறவினர்கள் சுற்றுலா ஏற்பாடானது. இந்திரா மீண்டும் கர்ப்பவதியாக இருந்தாள். ஆனால் இம்முறை அவர்கள் டூருக்கு வரவில்லை. நாங்களும் அழைக்கவில்லை. ஏற்கனவே பட்ட அனுபவத்தால் இந்த முறை எனது தந்தையும் சும்மா இருந்துவிட்டார். டூர் முடிந்து வீடு திரும்பினோம்.

பிறகு ஆடிப் பெருவிழா மிகவும் விமரிசையாக நடந்தது. ஆடிவெள்ளி, ஆடிசனி ஆடி ஞாயிறு என மூன்று நாட்களும் அமர்க்களப் பட்டது. இந்திரா, அண்ணனூர்

என்ற ஊரில் தனது அக்கா வீட்டில் தனது தாய் தந்தை யோடு தங்கி இருந்தாள். ஆடி வெள்ளிப் பூஜை நடப்பது தெரிந்திருந்தும் அவர்கள் ஏனோ நெமிலி வராமல் இந்தமுறை பூஜையைத் தவிர்த்து விட்டனர்.

ஆடிப் பெருவிழா முடிந்த மறுநாளே நெமிலியில் ஒரு மஞ்சள் நீராட்டு விழா அப்போது நடந்தது. ஆடி ஞாயிறு இரவு பூஜை எல்லாம் முடிந்த பிறகு அவர்கள், மஞ்சள் நீராட்டு விழாவில் கலந்து கொள்ள அண்ணனூரிலிரிந்து நெமிலிக்கு புறப்பட்டு வந்தனர்.

எல்லாம் நடந்து முடிந்தது இரண்டாவது குழந்தை பிறந்தது. உடலில் நீலம் பாய்ந்தது. பிறகு இறந்தது. அனை வருக்கும் அதிர்ச்சி. கண்ணிமைக்கும் நேரத்தில் எல்லாம் நடந்து முடிந்தது. இந்த முறை இறந்ததும் ஒரு அழகான ஆண் குழந்தை தான்.

இதிலே ஒரு ஒற்றுமை என்னவென்றால் இறந்தது இரண்டுமே ஆண் குழந்தைகள். இரண்டும் குறை மாதத்தில் பிறந்தவை. இரண்டுமே நீல நிறமாகி இறந்து போயின. இதில் மற்றொரு ஆச்சர்யமான விஷயம் என்னவென்றால் இரண்டாவது குழந்தையும் இறந்துவிடும் என்று என் அன்னைக்கு ஏற்கனவே தெரியும். பாலா எனது அன்னையின் கனவிலே தோன்றி இரண்டாவது குழந்தையும் இறந்துவிடும், மூன்றாவதாகப் பிறக்கும் பெண் குழந்தைதான் பிழைக்கும் எனக் கூறிவிட்டாள்.

இந்த விஷயத்தை எனது அன்னை யாரிடமும் கூறவில்லை. இந்த நேரத்தில்தான் நான் கதை எழுத வேண்டும் என்று உத்தரவானது. இதன் நடுவே என் மூலம் சில அற்புதங்களை பாலா நிகழ்த்தினாள். நவராத்திரி நடந்து கொண்டிருந்த சமயம். லட்சார்ச்சனை நடந்து கொண்டிருந்தது. லட்சார்ச்சனை செய்யும் நபர்களில் நானும் ஒருவன்.

ஏதேச்சையாக பாலா பீடத்திற்கு பக்கத்திலிருக்கும், ஓவியர் சாமி வரைந்த பாலா திரிபுரசுந்தரி அம்மன் படத்தைப் பார்த்து ஒரு நிமிடம் நான் திகைத்துவிட்டேன். ப்ளைவுட்டில் வரையப்பட்ட பாலா என்னைப் பார்த்து மிக மெல்லியதாக, தன் சிவந்த உதடுகளை விரித்து சிரித்ததைக் கண்டு நான் பிரமித்துப் போனேன்.

29

பாலாவின் புகைப்படம் பாவத்தை ஓட்டிடும்!

லட்சார்ச்சனை செய்து கொண்டிருந்த எனக்கு ஒரு நிமிடம் உடம்பு சில்லிட்டு விட்டது. மீண்டும் மீண்டும் பார்த்தேன். பாலா என்னைப் பார்த்துச் சிரிப்பது போலிருந்தது. இது நாள் வரை எத்தனையோ முறை அந்தப் படத்தைப் பார்த்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் ஏற்படாத இந்த அனுபவம் இப்பொழுது மட்டும் ஏன்? என் மனம் குழம்பவில்லை. மின்னலென ஒரு யோசனை மனத்தில் உதித்தது.

ப்ளைவுட்டில் வரையப்பட்ட இந்த பாலா படத்தை போட்டோ எடுத்து, குழந்தை இல்லாதவர்களுக்கு கொடுக்கவேண்டும். முதலில் எனது சகோதரி இந்திராவிற்கு இதைக் கொடுக்க வேண்டும் என முடிவு செய்தேன். நவராத்திரி முடிந்தவுடன், எனது அண்ணன், பூஜைகள் செய்யும் மற்றொரு பெரியப்பாவான வீரராகவன் மகனான கோபாலகிருஷ்ணனிடம் உள்ள கேமராவின் உதவியால் ஃபோட்டோ எடுத்துவிட்டேன்.

பிறகு நெமிலிக்கு வந்த இந்திராவிடம் "இந்த முறை நான் ஒரு போட்டோ தருகிறேன். காலை எழுந்து குளித்து முடித்தவுடன் அந்தப் ஃபோட்டோவை இரண்டு நிமிடம்

உற்றுப் பார் போதும். வேறெதையும் வேண்டாதே. வேண்டுவது என் பொறுப்பு. இந்த முறை உனக்கு பெண் குழந்தை பிறக்கும். அதற்கு பாலவினோதினி என்று பெயர் வைக்க வேண்டும். குழந்தைக்கு ஒன்றும் ஆகாது." என்று ஏதோ பெரிய ஞானி போலவும், மகான் போலவும் அருள் வாக்கு சொல்லிவிட்டேன். ஆனால் நிச்சயமாக இதை நான் சொல்லவில்லை. யாரோ எழுதிக்கொடுத்து பிறகு சொல்லிக் கொடுத்ததை மனப்பாடம் செய்து ஒப்பிப்பது போல ஒப்பித்தேன். ஆம் அப்படித்தான் எனக்குத் தோன்றியது.

ஆனால் ஒன்று மட்டும் ஆச்சர்யம். இந்திராவிற்கு மூன்றாவது கரு உண்டான சமயம் என்னுள் பல மாற்றங்கள் நடந்தன. அவற்றை எண்ணிப் பார்க்க எனக்கே பிரமிப்பாக இருக்கிறது. வியாழக்கிழமை ராகவேந் திரருக்கும், வெள்ளிக்கிழமை பாலாவுக்கும் விரதம் இருக்க ஆரம்பித்தேன்.

காலை மாலை இரண்டு வேளை குளித்துவிட்டு லலிதா சஹஸ்ரநாமம், சௌந்தர்ய லஹரி பாராயணம் செய்ய ஆரம்பித்தேன். ஒரு மண்டலம் வீட்டை விட்டு வெளியே எங்கும் செல்லாமல் விரதம் இருந்து பூஜைகள் செய்து வந்தேன். படுக்கையை தவிர்த்து விட்டேன். தலை யணையை ஒதுக்கிவிட்டு மணைப் பலகையை தலைக்கு வைத்துக் கொண்டு காவித் துணி கீழே விரித்து அதில் படுக்க ஆரம்பித்தேன். ஓட்டல்களில் சாப்பிடுவதை நிறுத்திவிட்டேன்.

சராசரி வாழ்க்கையிலிருந்து ஒதுங்க ஆரம்பித்த என்னை சாமியார் என கிண்டல் செய்ய ஆரம்பித்தனர். உடம்பில் உஷ்ணமேறிவிட்டது. உடம்பில் அங்கங்கே கொப்புளங்கள் வர ஆரம்பித்து விட்டன. குளிர்ச்சியான உடல் (COLD BODY), சூடான உடல் (HEAT BODY) ஆக

மாறியது. நான் எங்கு சென்று கொண்டிருக்கிறேன் என்று எனக்குத் தெரியவில்லை.

ஆனால் முகத்தில் ஒரு புது தேஜஸ் வந்திருப்பதாக அனைவரும் கூறினர். யோசித்துப் பார்க்கும் போது ஒரு விஷயம் நன்றாகப் புரிந்தது. லட்சார்ச்சனையில் பாலாவின் புன்னகையைக் கண்டதின் விளைவுதான் இத்தனை மாற்றங்கள், இவ்வளவு முன்னேற்றங்கள் என உணர்ந்து கொண்டேன்.

பாலாவின் போட்டோ எடுத்த பின்பு நடந்த அற்புதங்கள் சிலவற்றைக் குறிப்பிட்டே ஆக வேண்டும். இல்லையென்றால் இந்த அத்தியாயத்திற்கே அர்த்த மில்லாமல் போய்விடும். போட்டோ எடுத்த என் அண்ணன், குடும்பத்தோடு அப்போது திருவண்ணா மலையில் வசித்து வந்தார். நான் திருவண்ணாமலைக்குச் சென்றேன்.

அங்கு என் அண்ணன் காட்டிய ஃபிலிம் நெகட்டிவ்வை பார்த்தவுடன் உடம்பு சிலிர்த்துப் போனது. நானும் எனது அண்ணனும் சேர்ந்து எடுத்த பாலா புகைப்படத்தில் பாலாவின் வயிற்றுப் புரத்தில் கறுப்பாக ஒரு திட்டு இருந்தது. அதைக் கண்டதும் ஒரு நொடி பிரமித்துப் போனேன்.

நாங்கள் எந்த நோக்கத்திற்காக அந்த புகைப்படம் எடுத்தோமோ அந்த நோக்கம் நிறைவேறுவதை பாலா படம் பிடித்துக் காட்டி விட்டாள். பிரிண்ட் எடுத்து போட்டோவை அனுப்புவதாக அண்ணன் கூற நான் வந்துவிட்டேன். அதற்குப் பிறகு ஒரு சின்ன மனக்கசப்பு ஏற்பட்டது.

ஏதோ ஒரு பிரச்சனை பெரிதாகி விட எனக்கும், எனது அண்ணனுக்கும் ஒரு இடைவெளி வந்துவிட, அவரிடம் சென்று பாலா புகைப்படத்தை எப்படி வாங்குவது என்ற வீம்பில், வேறொரு முறை பாலாவை

உள்ளூர் ஃபோட்டோகிராஃபரை அழைத்து வந்து போட்டோ எடுத்துவிடலாம் என நினைத்தேன்.

இங்குதான் பாலா விளையாட ஆரம்பித்தாள். போட்டோ ஸ்டுடியோவிற்கு கிட்டதட்ட ஏழு முறை நடையாய் நடந்தேன். ஆனால் போட்டோஃகிராபரை பார்க்கவே முடியவில்லை. இத்தனைக்கும் அவர் வெளியூர் எங்கும் செல்லவில்லை. உள்ளூரிலிருந்து கொண்டே சொல்லி வைத்த மாதிரி நான் செல்லும்போது வெளியே சென்று விடுவார்.

ஒரு வழியாக அவரை இரண்டு நாட்கள் கழித்து சந்தித்தேன். விவரத்தைக் கூறினேன். அவர் போட்ட கண்டிஷன்களும், ரேட்டும் எனக்கு மயக்கத்தை உண்டு பண்ணியது. நிச்சயமாக அது அவர் சொல்லவில்லை. பாலாதான் நம்மோடு விளையாடுகிறாள் என்று புரிந்து கொண்டேன்.

மனத்தின் ஒரு மூலையில் முதலில் எடுத்த போட்டோதான் அமையும். அதை மற்றொரு முறை எடுக்க முடியாது என்று தோன்றினாலும், அண்ணனோடு கொண்ட மனஸ்தாபம் காரணமாக, அவர் எடுத்த ஃபோட்டோ வேண்டாம், நாம் புதிதாக புத்தாண்டு பூஜை யன்று அரக்கோணத்திலிருந்து வரும் ஃபோட்டோ கிராஃபரிடம் சொல்லி ஒரு புகைப்படம் எடுத்து விட்லாம் என மனத்தின் மற்றொரு மூலையில் நினைத்தேன்.

புத்தாண்டு வந்தது ஃபோட்டோ கிராஃபரும் வந்தார். முதலிலேயே அவரிடம் விஷயத்தைக் கூறிவிட்டேன். அவரும் ஓ.கே. சொல்லிவிட்டார். புத்தாண்டு பூஜை மற்றும் ஹோமம் முடிந்தபின்பு போட்டோ எடுத்துவிடலாம் என்றார். புத்தாண்டுப் பூஜைக்கு என் அண்ணனும் வந்திருந்தார். பூஜைகள் முடிந்தது. நான் மறதியாக இருந்துவிட ஃபோட்டோ கிராஃபர், போட்டோ எடுக்காமலே சென்றுவிட்டார்.

பிறகு எனக்கும் அண்ணனுக்கும் பேச்சு வார்த்தை நடந்து சமாதானம் ஏற்பட்டுவிட பாலாவின் புகைப்படம் என் கைக்கு வந்தது. பாலா என்னைப் பார்த்து இப்போது வேறு மாதிரி சிரித்தாள். அவள் சிரிப்பதன் உள் நோக்கம் எனக்குப் புரிந்தது. பிறகு இந்திராவிடம் அந்தப் புகைப் படத்தைக் கொடுத்தேன்.

அதன் பிறகு பாலாவின் புகைப்படம் நிகழ்த்திய லீலைகள் ஒன்றா இரண்டா? அந்த அற்புதங்களை வரும் அத்தியாயங்களில் அள்ளிப் பருகலாம் வாருங்கள், அதற்கு முன்பு ஒரு முக்கிய விஷயத்தை உங்களிடம் கூறவேண்டும் எனது தாய்க்கு ஏற்கனவே குழந்தைகள் இறக்கப்போவது தெரியும் என்று கூறினேன் அல்லவா. அந்தக் கனவில் அன்னை பாலா எனது அன்னையிடம் “இரண்டாவதாக பிறக்கும் குழந்தையும் இறக்கும். இரண்டு பெரிய உயிர்கள் பறிபோவதற்குப் பதில் இரண்டு சிறுகுழந்தைகள் உயிர் பறி போனது.

ஆனால் மூன்றாவது, பெண் குழந்தை பிறக்கும். குழந்தை பிறந்வுடன், அதை தாயிடமிருந்து வாங்கும் பொழுது எனது பீடத்திலிருக்கும் பட்டு விரிப்பைக் கொண்டு அந்தக் குழந்தையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்” என்று கூறியிருக்கிறாள். பாலா பீடத்திலிருந்த ஒரு சிகப்பு நிற பட்டுத்துணியை இந்திராவிடம் எனது தாய் கொடுத்தனுப்பினார்கள்.

இந்த விஷ்யமெல்லாம் எனக்குத் தெரியாது. நான் சென்னையிலிருந்தேன். பாலா கனவிலே பெண் குழந்தை பிறக்கும் என்று கூறிய விஷயம் தெரியாமலேயே, நானும் இந்திராவிடம் பெண் குழந்தை பிறக்கும் என்று கூறியிருக்கிறேன்.

பாலாவின் விளையாட்டை எளிதில் புரிந்து கொள்ள எவரால் இயலும்?

30

அன்னையின் சன்னதியில் குழந்தையாக அன்னை!

பாலாவின் சன்னதியில் நடந்த சாதனை மிகு திருமணத்தைப் பார்த்தோம். அதற்குப் பின் அவள் தந்த சோதனைகளையும் பார்த்தோம். நமது வாழ்வில் விளையாடுவது அவளது பொழுது போக்கல்ல. நம்மை நல்வழிப்படுத்துவதே அவளின் விளையாட்டு. பாலாவின் சன்னதிக்கு வந்தவர்கள் பாலாவின் பார்வை பட்டால் நிம்மதி என்று கூறுவார்கள்.

ஒவ்வொரு முறை என் தாயார் கனவில் பாலா தோன்றும்போதெல்லாம், எனது தந்தையான எழில்மணி அவர்களை தனது மகன் என்றுதான் குறிப்பிட்டிருக்கிறாள். தனது தாய்க்கு செய்யும் கடமையாக, எனது தந்தை பாலாவுக்காக நவராத்திரி விழாவை ஆண்டுதோறும் விமரிசையாக நடத்தி வருகிறார்.

மூச்சுக்கு முன்னூறு தடவை 'பாலா' 'பாலா' என்றே என் தந்தை நினைப்பார். தன் தாயை நினைத்து நினைத்து அவளுக்கு சேவைகள் புரிந்து புரிந்து, பாலாவோடு என் தந்தை ஒன்றிவிட்டதால், எங்களது நெருங்கிய நண்பர்கள் வீட்டுத் திருமணங்களுக்கு, விசேஷங்களுக்கு அவர்

சென்றால் பாலாவே நேரில் வந்து வாழ்த்துவதாக நினைப் பார்கள்.

மகனைப் பற்றிய கவலை தாய்க்கு இருப்பது இயல்பு. தனது மகனைப் பற்றி பிறர் வேண்டுமென்றே குற்றம் குறைகள் கூறி ஏசினால், தவறாகப் பேசினால் தாயின் மனம் தாங்குமா? இல்லை தன்னிலை மறந்து தூங்குமா? பொங்கி எழுந்து பொசுக்கிவிடாதா? அதுவும் அந்தத் தாய் உலகையே ஆட்டிப் படைக்கும் பாலா என்றால் சும்மாவா? எனது தாய்க்கு வந்த கனவில் பாலா என்ன கூறினாள் தெரியுமா?

"என்னைப் பற்றி யார் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். என் மகனைப் பற்றித் தவறாகப் பேசவோ, இல்லை நினைக்கவோ செய்தால் நான் சும்மா இருக்க மாட்டேன். அவனைக் கண்டு பொறாமைப்படுபவர்கள், புறங்கூறுபவர்கள் யார் என்று எனக்குத் தெரியும்.

அவர்கள் நிலை என்னவாகப் போகிறது என்று நீயே பார்க்கத்தான் போகிறாய். அவனை கண்டித்துப் பேசவோ, கடிந்து கொள்ளவோ உனக்கு மட்டும்தான் உரிமை உண்டு. அவனை நான் இப்போது உயர்த்தி இருக்கும் அளவு கொஞ்சம்தான். இன்னும் உயர்த்த வேண்டியது நிறைய இருக்கிறது."

என்னடா இந்தக் கலிகாலத்தில் இப்படி எல்லாம் நடக்குமா? பேனாவில் கற்பனை எனும் மை கொண்டு பேப்பரை வெறுமனே நிரப்புகிறானா? என நீங்கள் நினைக்கலாம். இதுவரை நான் எழுதிய அனைத்துமே இங்கே நடந்தவை. கனவிலே வந்து பாலா சொன்ன வாக்குகளை எழுதும்போது கூட, அதை கூட்டியோ குறைத்தோ, கற்பனை சேர்த்தோ எழுதவில்லை.

அட்சரம் பிசகாமல் அன்னை பாலா அடிக்கடி இங்கு எனது அன்னையின் கனவிலே தோன்றிக் கூறிய

விஷயங்களை அப்படியே எழுதியிருக்கிறேன். காரணம் இதை எழுதச் சொன்னது அன்னையின் உத்தரவு. பேனா பிடிப்பது நான். எழுதுவது என் அன்னை.

என்னடா... தலைப்புக்குச் சம்பந்தம் இல்லாமல் ஏதோ எழுதிக் கொண்டிருக்கிறானே என நீங்கள் கேட்பது புரிகிறது. இதோ தலைப்புக்கு வந்துவிடுகிறேன். என் தந்தையை பற்றி நான் ஏன் அவ்வளவு விரிவாகக் கூறினேன் என்றால், முதன் முதலாக ஒரு தெய்வீகக் கனவு அவருக்கு வந்தது.

எனது தாயாருக்கு கனவுகள் வருவது வாடிக்கை. ஆனால் எனது தந்தைக்கு வந்ததோ வேடிக்கை. ஒரு நாள் இரவு எனது தந்தைக்கு வந்த கனவில் பாலா பீடத்தில் அன்னை பாலாவின் விக்ரஹத்திற்குப் பதில் ஒரு அழகான குழந்தை இருப்பதை என் தந்தை பார்த்து அதிசயிக்கிறார்.

இதுதான் கனவு. அன்னையின் சன்னதியில் குழந்தையாக அன்னை காட்சி அளித்த அந்த அற்புதமான கனவு வந்த பின்னே சென்னை எழும்பூர் மருத்துவ மனையில் இந்திரா - பாலாஜி தம்பதிகளுக்கு பெண் குழந்தை பிறக்கிறது. பாலா சொன்னது போல், பெண் குழந்தையாக அவதரித்தாள்.

அந்த நேரம் நெமிலிக்கு ஃபோன் வருகிறது. நான்தான் போன் எடுத்தேன். பெண் குழந்தை பிறந்த விஷயத்தை பாலாஜி என்னிடம் கூறியதும் எனக்கு எல்லையில்லா மகிழ்ச்சி. அடுத்த நொடியில் அந்த மகிழ்ச்சி மாயமாய்ப் போனது. கண்களில் இருள் சூழ்ந்தது. கைகள் நடுக்கம் கண்டது.

"குழந்தை உடம்புல நீலம் பாய்ஞ்சிருக்கு. கொஞ்சம் சீரியஸ் கண்டிஷன். ஆக்ஸிஜன் இருக்கற கண்ணாடிப் பெட்டியிலே குழந்தையை வச்சிருக்காங்க. குழந்தை பொழைக்குமா? பொழைக்காதான்னு இரண்டு நாள்

கழிச்சுத்தான் டாக்டருங்க சொல்லுவாங்களாம். பய மாயிருக்கு. பிரசாதம் எடுத்துகிட்டு சீக்கிரம் வா" என சொல்லி போனிலே பாலாஜி அழுதவுடன் வீட்டில் அனைவரும் அழுதுவிட்டனர்.

நான் மூன்று மணிக்கு ஓச்சேரி சென்று அங்கு ஏதேச்சையாக வந்த ஒரு ஆம்புலன்ஸில் ஏறி பூந்தமல்லிக்குச் சென்று பூஜைகள் செய்து வரும் பெரியப்பா வீரராகவன் அவர்கள் வீட்டிற்குச் சென்று பெரியம்மாவை அழைத்துக் கொண்டு எழும்பூர் ஆஸ்பிடலுக்குச் சென்ற போது மணி 7.

இந்திராவைப் பார்த்து அன்னை பாலாவின் அருட் பிரசாதத்தைக் கொடுத்து பயப்படவேண்டாம். குழந்தைக்கு ஒன்றும் ஆகாது என தைரியம் கூறினேன். குழந்தையைப் பார்க்க முடியமா என்றுகேட்டதற்கு "உள்ளே செல்ல அனுமதி கிடையாது. வெளியே கண்ணாடி போட்ட ஜன்னல் பக்கத்தில் நின்றுதான் பார்க்க வேண்டும்".

இந்திரா இவ்வாறு கூறியவுடன், "சரி நான் சென்று பார்க்கட்டுமா'' என்றேன். "அப்படிப் பார்ப்பதற்கும் மாலை 5லிருந்து 6 மணி வரைதான் நேரம். அதற்குப் பிறகு திரை போட்டு விடுவார்கள். அப்படியே சென்று பார்த்தாலும் குழந்தையைப் பார்க்க முடியாது. குழந்தையை அறையின் உள்ளே இருக்கும் தொட்டிலில் கண்ணாடி பெட்டி மூலம் மூடி வைத்திருக்கிறார்கள். வெளியே இருந்து பார்த்தால் தெரியாது'' இந்திரா சொன்னதைக் கேட்டு ஸ்தம்பித்து விட்டேன்.

31

சன்னதியில் மறைந்த சக்திமிகு பாலா!

குழந்தையைப் பார்க்க முடியாத ஏமாற்றத்தோடு நானும் பெரியம்மாவும் வீடு திரும்பினோம். உடன் பாலாஜியும் வந்தார். வீட்டில் விஷயத்தைக் கூறினேன். மறுநாள் மாலை மீண்டும் ஆஸ்பிடலுக்கு கிளம்பினேன். அன்று தான் ஆடிமாத முதல் வெள்ளி. பஸ்ஸில் செல்லும்போது முதல் ஆடி வெள்ளியன்று பாலாவை தரிசிக்க முடியாமல் போனதை எண்ணி வருந்தினேன்.

ஆஸ்பிடலுக்குள் சென்றேன். அங்கே முன்னதாகச் சென்ற பாலாஜி எனக்காகக் காத்திருந்தார். நான் இந்திராவுடன் பேசிவிட்டு, பாலாஜியுடன் மாடிக்குச் சென்றேன். மாடியில்தான் சீரியஸாக உள்ள குழந்தைகள், குறைப் பிரசவத்தில் உள்ள குழந்தைகள் என பல குழந்தைகளை காற்று, புகை மற்றும் மாசு புகாத அறைகளில் வைத்திருக்கிறார்கள். மிக நீளமான வராண்டா. பத்தடிக்கு ஒன்றென திரை மூடிய ஜன்னல்கள்.

நானும் பாலாஜியுடன், அதில் ஒரு ஜன்னல் பக்கத்தில் சென்று நின்றேன். மணி 4.50 இன்னும் பத்து நிமிடத்தில் திரை விலகும். நான் பாலாஜியிடம் கேட்டேன், உள்ளே செல்ல அனுமதி உண்டா என்று. “இல்லை” என்ற

பதில் வந்தது. “உன்னுடைய குழந்தை எங்கு இருக்கிறது” என்று கேட்க “நடுவில் உள்ள ஒரு தொட்டிலில் இருக்கிறது.” நானே இன்னும் சரியாகப் பார்க்கவில்லை.” என்று கூறினார். “நமது குழந்தை என்று எப்படி அடையாளம் காண்பது” மீண்டும் கேள்விக்குத் தாவினேன்.

“ஒவ்வொரு தொட்டிலுக்கும் நம்பர் கொடுத்திருக்கிறார்கள். நம் குழந்தையின் நம்பர் பதினைந்து” என்றார். இங்கிருந்து பார்க்கவும் முடியாது. உள்ளே செல்லவும் அனுமதி கிடையாது. குழந்தை வெளியில் கொண்டு வரவும் முடியாது. தாய்ப்பால் கொடுக்கும் ஒரே காரணத்திற்காக தாய்க்கு மட்டும் அனுமதி. நான் நெமிலியிலிருந்து ஓடோடி வந்து, வெந்து, நொந்து விட்டேன்.

நான் இங்கு நொந்துகொண்டது அங்கு இருக்கும் பாலாவுக்கு எப்படித் தெரிந்ததோ, கண்ணிமைக்கும் நேரத்தில் பாலா ஒரு அதிசயத்தை நிகழ்த்திக் காட்டினாள். அதைக் கண்டு அப்படியே அழுதுவிட்டேன். மணி ஐந்தானது. திரை விலகியது. நானும் பாலாஜியும் தேடுகிறோம். 16, 18, 20 என எல்லா நம்பர்களும் தெரிகிறது. பதினைந்து மட்டும் காணவில்லை.

பாலாஜி குழப்ப மிகுதியால் நடுவில் தானே இருந்தது, இப்போது அங்கு வேறு நம்பர் இருக்கிறதே என்று வெறுத்துப் போய்ப் பார்த்தால், ஜன்னலுக்கு மிகவும் பக்கத்தில் ஒரு உயர்ந்த மேஜையில் கண்ணாடிப் பெட்டிக்குள்ளே சின்னக் குழந்தையாக பாலா கண்ணை மூடித் தூங்கிக் கொண்டிருக்க பக்கத்தில் 15 என்ற அட்டை தொங்கி கொண்டிருந்தது.

ஒரு நிமிடம் அப்படியே ஸ்தம்பித்து வேறெதுவும் தோணாமல் அந்தக் குழந்தையை வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டிருக்க, கண்ணிலிருந்து நீர் தானாக வந்து

கொண்டிருந்தது. நான் அழாமல் அழுத முதல் சம்பவம் அதுதான். தொட்டு விடும் தூரத்தில் குழந்தை.

ஆடி வெள்ளியில் கோடி அற்புதங்கள் புரியும் அன்னை பாலாவை நேரில் கண்டுவிட்ட திருப்தி எனக்கு. பிறகு விசாரித்துப் பார்க்கையில் மாலை 4 மணிக்கு மேல்தான் குழந்தையை இடம் மாற்றியிருக்கிறார்கள் என்ற விஷயம் தெரிந்தது. எனக்காக பாலா செய்த அந்த அற்புதத்தை என்னால் மறக்கவே முடியாது.

இந்திரா-பாலாஜிக்கு கூட ஆச்சர்யம். குழந்தையின் உடல்நிலை 'நேற்றுக்கு இன்று பரவாயில்லை' என டாக்டர்கள் கூறினார்கள். நான் போன் செய்து வீட்டுக்குத் தகவலைக் கூறினேன். குழந்தை தாயிடம் வரும் வரை நான் நெமிலிக்கு வரமாட்டேன் என்று கூறினேன். தினமும் ஆஸ்பிடல் சென்று குழந்தையைப் பார்த்தேன்.

குழந்தையின் உடலிலிருந்த நீலம் முழுவதுமாக மறைந்தது. உடல் நிலை சிறிது சிறிதாக முன்னேற்றம் கண்டது. முதலில் ஆக்ஸிஜனை நீக்கினார்கள். பிறகு குளுக்கோஸ் ஏற்றுவதை நிறுத்தினரர்கள். பின்பு கண்ணாடிப் பெட்டியை அகற்றினார்கள். படிப்படியான இந்த மாற்றங்களை நான் போன் மூலம் தினமும் கூறினேன்.

ஒன்பதாம் நாள் எனது தாய் தந்தை அனைவரும் வந்தனர். எனது தாயார் தனக்கு வந்த கனவைப் பற்றி கூறியவுடன் எனக்கு அதிர்ச்சி ஏற்பட்டது. சக்தி மிகுந்த அந்த சன்னதியில் பாலா மறைந்து விட பீடமே வெறுமையாய் காட்சியளித்ததாம். கடந்த எட்டு நாட்களாக பாலா பீடமே வெறிச்சோடி களை இழந்து காணப்பட்ட தாம். அந்த எட்டு நாட்களும் பாலா அங்கு இல்லவே இல்லை. நேற்று இரவு பாலா மீண்டும் சன்னதிக்குள் நுழைந்தவுடன், பாலா பீடம் பழைய நிலைமைக்கு திரும்பியதாம். இதைக் கேள்விப்பட்டவுடன் எனக்கு ஒரே

ஷாக். ஏனென்றால் நேற்று இரவுதான் குழந்தைக்கு எல்லா செக்கப்பும் முடித்து, பிரச்சனைகள் ஏதுமில்லை என்று கூறி தாயிடம் கொண்டு சேர்த்தார்கள்.

ஒரு நிமிடம் நினைத்துப் பார்த்தாலும் நமக்கு உடலெல்லாம் சிலிர்த்துவிடும். இந்த எட்டு நாட்களும் பாலா அங்கு நெமிலியில் இல்லாமல், இங்கு எழும்பூரில் குழந்தை வடிவிலே குழந்தையின் அருகிலே இருந்திருக்கிறாள் என்றால் பாலாவின் கருணையை, பாலா ஃபோட்டோவின் மகிமையை நாம் என்னவென்று கூறுவது?

பிறகு குட்டி பாலாவை அழைத்துக் கொண்டு இந்திரா, பாலாஜி இருவரும் நெமிலிக்கு வந்தார்கள். குழந்தைக்கு "பால வினோதினி" என்ற பெயரும், பாலா பீடத்தில் வைக்கப்பட்டது. பாலாவுக்கு "பால லீலா வினோதினி" என்ற ஒரு நாமம் லலிதா சஹஸ்ரநாமத்தில் வருகிறது. பெயர்ப் பொருத்தம் அருமையாக இருந்தது.

தற்போது ஒரு வயது முடிந்திருக்கும் தெய்வக் குழந்தையான "பால வினோதினியை" நவராத்திரிக்கு நெமிலிக்கு வந்தால் கண்டு வியக்கலாம்.

"நெமிலிக்கு ஒரு முறை வாருங்கள் உங்கள் நெஞ்சம் நெகிழ்வதைப் பாருங்கள்!

32

நெஞ்சம் மகிழ்ந்திடும் நெமிலியின் வரைபடம்!

மணி மண்டபம் கட்டிக் கொண்டிருந்தவேளை. கட்டுமானப் பணிகள் தடை பட்டு நின்றிருந்த சமயம். ஒரு அம்மையார் வீட்டுக்கு வந்தார்கள். தடைபட்ட காரியம் தடங்கலின்றி நடக்க பொன்னியம்மன் ஆலயத்திலிருந்து சிறிது மண் கொண்டு வந்த போடுங்கள் எல்லாம் நல்லபடியாக நடக்கும் என்று கூறினார்கள்.

அன்று இரவு எனது அன்னைக்கு ஒரு கனவு. அதிலே எனது தாயார் பொன்னி அம்மனை தன்னோடு வந்துவிடும்படி அழைக்க அதற்கு பொன்னியம்மன் கூறிய பதிலும், பொன்னியம்மன் எனது அன்னைக்கு எதிரே வரைந்து காட்டிய படமும்... அப்பப்பா இப்போது நினைத்தாலும் நெஞ்சம் படபடக்கும்.

அந்தக் கனவை இப்போது விரிவாகக் கூறுகிறேன். மண் எடுக்க கோவிலுக்குச் சென்ற அன்னை, மூலஸ்தானத்திலிருந்து வந்த ஒரு பெண்மணியைப் பார்த்து "நீ யார்" என்று கேட்க "நான்தான் பொன்னியம்மன்" எனக் கூறிட, எனது அன்னைக்கோ மிகவும் சந்தோஷம். "சரி நீ என்னுடன் வருகிறாயா" - என்று எனது தாயார் கேட்க-

“நானா... இப்பவே உன்கிட்ட, மாரி இருக்கா, காளி இருக்கா. போதாக்குறைக்கு பாலாவே இருக்கா. நானும் வந்துட்டா எப்படி. உன்னால தாள முடியாது.” - என்று பொன்னி அம்மன் கூற —

“பரவால்ல... நீ என் கூட வந்துடு எனக்காக வந்துடு” - என்று எனது தாயார் சொல்ல —

“வேண்டாம், நீ வந்த வேலையைப் பாரு. மண்ணெடுத்துட்டுப் போ. நான் இங்கேயே இருக்கேன். உனக்கு எந்தக் குறையும், கஷ்டமும் வராமப் பாத்துக்கறேன். உனக்கு மட்டும் இல்ல, இந்த ஊருக்கே எந்த தீங்கும் வராது. நாங்க நாலு பேரும்தான் நாலு திக்குல காவல் தெய்வமா இருக்கோமே.” - என்று பொன்னியம்மன் கூற —


புரியாமல் என் அன்னை பார்க்க, பொன்னி யம்மனோ மண்ணில் ஒரு படத்தை வரைந்து நடுவில் நெமிலி என்று எழுதி, நான்கு பக்கமும் குறித்து “ஒரு பக்கத்துல நான் பாத்துக்கறேன். அந்தப்பக்கத்துல பாலா. இந்தப் பக்கத்துல மாரியம்மா. இன்னொரு பக்கத்துல காளியம்மா, பக்கத்துக்கு ஒருத்தரா நாங்க நாலு பேரும் நெமிலிக்கு காவலா இருக்கோம். நீ எதுக்கு பயப்படறே” என்று கூறினாள்.

அதன் பிறகு எனது அன்னை வீடு திரும்புவதாக அந்த கனவிலே நடந்தது. பொன்னியம்மன் வரைந்து காட்டியதை என் தாயார் என்னிடம் வரைந்து காட்டினார்கள். அதை நானும் உங்களுக்காக வரைந் துள்ளேன்.

அதன் பின்பு பொன்னியம்மன் கோவிலிருந்து மண் கொண்டு வரப்பட்டது. மண்டபத்திருப்பணி நிறைவு பெற்றது.

நெஞ்சம் நெகிழ்ந்திடும் நெமிலியின் வரைபடம், பொன்னியம்மன் வரைந்திட்ட பொன் போன்ற வரைபடம் இதுதான்.

"பொன்னியம்மன் வரைந்த பொன்போன்ற வரைபடம்"



33

அன்னை பாலாவின் அளவிலா அற்புதங்கள்!

அன்னை பாலாவின் அளவிலா அற்புதங்களில் ஒரு சிலவற்றை இடமின்மை காரணமாக, உங்களுக்காக சுருக்கமாகத் தொகுத்து வழங்குகிறேன். பாலாபீடம் வரக்காரணமாக இருந்த பெரியவர் எங்கள் தாத்தா G.K.V. சுப்ரமண்யம். அவர்களுக்கு இருமல் அதிகமாக வரும்போது பல சமயங்களில் ரத்தமும் உடன் வரும். எங்கள் ஊர் மருத்துவர் நடராஜன் அவர்களிடம் எனது தாத்தா ட்ரீட் மெண்ட் எடுத்துக் கொள்வது வழக்கம்.

அவர் ஒரு முறை, இது முற்றிலும் குணமாக வேண்டும் என்றால் நீங்கள் சென்னையில்தான் ட்ரீட் மெண்ட் எடுத்துக் கொள்ள வேண்டும். எனக்கு உங்கள் நோய் சரியாக பிடிபடவில்லை. அதை குணமாக்கும் வசதியும் இங்கு இல்லை எனக் கூறிவிட்டார். சென்னைக்கு அழைத்துச் சென்றார்கள். சென்ற இடத்தில் 15 நாள் பெட்டில் தங்கவேண்டும் என்று கூறிவிட்டார்கள்.

அப்போது சென்னையில் உறவினர்கள் குறைவு. தங்கும் வசதி இல்லை. உடன் யாராவது இருக்க வேண்டும். கையில் பணமும் குறைவு. எனது தந்தை, ஆஸ்பிடலில் சேர்க்கலாமா? வேண்டாமா என சீட்டு போட்டுப்

பார்க்கச் சொல்ல, எனது தாயார் இரண்டு சீட்டுகள் எழுதினார். என்ன காரணத்தினாலோ சேர்க்கலாம், வேண்டாம் என்று எழுதுவதற்கு பதில், சேர்க்கலாம், என்று ஒரு சீட்டிலும், நடராஜன் டாக்டரிடம் காட்டி, நெமிலியிலேயே வைத்தியம் பார்த்துக் கொள்ளலாம் என அங்கேயே எழுதி பாலாவின் பேரைச் சொல்லி குலுக்கினார்கள்.

நடராஜன் டாக்டரிடமே காட்டலாம் என்று வர, தாத்தாவை நெமிலிக்கு கூட்டிவந்து விட்டனர். விஷயத்தை டாக்டரிடம் கூறி "நீங்கள்தான் ட்ரீட்மெண்ட் செய்ய வேண்டும்" என்று சொல்ல, அன்றிலிருந்து மீண்டும் அவர் ட்ரீட்மெண்ட்டைத் துவங்கி , கிட்டதட்ட 20 வருடங் களுக்கு மேல் எந்தவித பிரச்சனையுமின்றி, எங்கள் தாத்தா நடமாடி வருகிறார், அதுவும் 20 வயது இளைஞன் போல என்றால், அது பாலாவின் மிகப் பெரும் அற்புதம்தானே.

அவருக்கு 1996 ஆம் வருடம் ஜனவரி மாதம் எண்பதாம் ஆண்டு நிறைவு விழா நடைபெற்றது. விழாவை பாலா பீடத்தார், இறைபணி மண்றத்தார் மற்றும் இளைஞர் இறைபணி மன்றத்தார் விமரிசையாக கொண்டாடினார்கள்.

பாலாவின் மற்றொரு விளையாட்டு. எனது தம்பி மோகன் குழந்தையாக இருந்தபோது நடந்த அதிசயமான விளையாட்டு. ஒரு துக்கம் நடந்த இல்லத்தில் வைத்துக் கொடுத்த ஜாக்கெட் துணியில், சின்னதாக முண்டா பனியன் தைத்து, குழந்தைக்கு போட்டு விட்டார்கள்.

மாலை அந்தச் சட்டையைப் போட்டதிலிருந்து குழந்தை அழுது கொண்டே இருக்கிறது. எனது தாய்க்கு காரணம் என்னவென்று தெரியவில்லை. குழந்தை பிறந்த 45 நாள்தான் ஆகியிருக்கும். இரவு மணி 11 ஆகிவிட்டது. அப்பொழுதும் குழந்தை அழுது கொண்டே இருந்தது.

பக்கத்தில் படுத்திருந்த எனது தாய்க்கு திடீரென விழிப்பு வர ஒரு கரிய உருவம் குழந்தையை நோக்கி மெல்ல வந்து கொண்டிருக்கிறது. எனது தாய் பக்கத்தில் படுத்திருக்கும் பாட்டியை, தனது தாயை எழுப்ப நினைத்து சத்தம் போட பேச்சு வரவில்லை.

கரிய உருவமோ வந்து கொண்டேயிருக்க, திடுமென ஒரு அம்மையார் பக்கத்தில் வந்து அமர்ந்து, குழந்தையின் சட்டையை கழற்றி எறியும்படி கூற, எனது தாயால் எழ முடியவில்லை. பிறகு ஒரு கையால் குழந்தையைத் தூக்கி மற்றொரு கையால் சட்டையின் முடிச்சுகள், பட்டன்களை கழற்ற, அந்த அம்மையாரும் உடன் சேர்ந்து கழற்றினார்கள்.

கண்ணிமைக்கும் நேரத்தில் இருவரும் சட்டையை கழற்றி எறிந்த சட்டை தூரத்தில் கிடந்தது. முதன் முறையாக குழந்தை மோகனைக் காப்பாற்ற, பாலா கனவிலே வராமல், கண் எதிரிலே வந்தது மகத்தான ஒரு மறக்க முடியாத சம்பவம். நடந்தது கனவா அல்லது நிஜமா என்று இன்றுவரை என் தாயாரால் ஊகிக்க முடியவில்லை.

காரணம் திகிலூட்டும் அந்த நேரத்தில் எனது தாய் தூங்கவில்லை. படுத்தபடி பக்கத்திலிருக்கும் சின்னக் குழந்தையை ஒரு கையில் பிடித்துக் கொண்டு மற்றொரு கையால் பட்டன்களை எல்லாம் கழற்றி, கண்ணிமைக்கும் நேரத்தில் சட்டையைக் கழற்றி தூர எறிய நிச்சயமாக யாராலும் முடியாது.

மற்றொருவர் உதவி நிச்சயம் வேண்டும். வேறு யாரும் எழுந்து கொள்ளவில்லை பாலா வந்தது கனவாக இருந்தால் எல்லாமே கனவாக இருந்திருக்க வேண்டும். குழந்தையின் உடம்பில் அந்த சட்டையும் இருந்திருக்க வேண்டும். ஆனால் சட்டையோ கழற்றி தூரத்தில் எறியப் பட்டுள்ளது.

இதையெல்லாம் பார்க்கும்போது ஏதோ ஒரு சக்தி நேரில் வந்திருப்பதாகத்தான் தோன்றுகிறது. அந்த சக்தி அன்னை பாலாதான் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. பாலா நேரடியாக செய்து காட்டிய அற்புதத்தைப் பார்த்தோம். பாலா மறைமுகமாக செய்த அற்புதத்தை இப்போது பார்ப்போம்.

பாவ, புண்ணியங்களின் பலாபலன்கள் நம்மைப் பொறுத்து அமைவதோடு மட்டுமல்லாமல் நம்மைச் சார்ந்தவர்களைப் பொறுத்தும் அமைகிறது. பூஜைகள் செய்பவருக்கு மட்டும்தான் புண்ணியம் என்றில்லை. அந்தப் பூஜைகள் புரியும் நபருக்கு உதவுவதும் புண்ணியம் தான். குற்றம் புரிபவருக்கு உதவி புரிவது எப்படிக் குற்றமாகுமோ அது போலத்தான் இதுவும்.

நாம் தர்மம் கட்டாயம் செய்ய வேண்டும் என்ற அவசியமில்லை. அப்படி தர்மம் செய்பவரை தடுத்து நிறுத்தி அவருக்குத் தொல்லைகள் தராமல் இருப்பதும் ஒரு தர்மம்தான். நம்மைச் சார்ந்திருப்பவர்கள், நமது கண்காணிப்பில் இருப்பவர்கள் செய்யும் தவறுகளுக்கும் நாம் தான் பொறுப்பு ஏற்க வேண்டும்.

ஒரு ஊரில் வயதான தாய். அவருக்கு இரண்டு மகன்கள். திருமணமானவர்கள். வந்த மாட்டுப் பெண்களோ நாளடைவில் மாமியாரை மிகவும் கேவலமாக நடத்தினார்கள். ஒரு வேளை உணவுக்காக அந்த வயதான தாய், தன்னுடைய இரண்டு மருமகள்களிடத்திலும் படாத பாடுபட்டு கண்ணீர் சிந்தி அழுதாள்.

அந்தத் தாய் தன் மகன்களிடம் நடந்ததைக் கூறினால், அவர்கள் இருவரும் அதைப் பற்றிக் கண்டு கொள்ளவில்லை. அந்தத் தாயோ தன்னுடைய துன்பங்களை தனக்குள்ளே புதைத்துக்கொண்டு, அந்த வீட்டின் ஒரு மூலையில் ஒடுங்கியிருந்தார். ஒரு நாள்

விபத்து ஒன்றில் பெரிய மகனுக்கு இரண்டு கால்களும், சிறிய மகனுக்கு இரண்டு கைகளும் பறிபோயின.

பெற்ற தாய்க்கு மகன் படும் வேதனை பொறுக்க முடியவில்லை. அந்த சமயம் 90 வயதான சாமியார் ஒருவர் ஊருக்குள் வந்தார். அந்த வயதான தாய், தன்னுடைய இரண்டு மகன்களுக்கு ஏற்பட்ட இந்தப் பரிதாப நிலைக்கு என்ன காரணம் என்று சாமியாரைக் கேட்டாள்.

ஐந்து நிமிடம் கண்ணை மூடி யோசித்த அந்த சாமியார் "உன்னோட மருமகளுங்க உனக்கு இழைச்ச கொடுமைகளுக்கு, கடவுள் அவங்களுக்கு கொடுத்த தண்டனை அது" என்றார்.

"அவங்க செஞ்ச தப்புக்கு, இவங்களுக்கு தண்டனை கொடுக்கறதுதான் கடவுளோட தீர்ப்பா?" அழுதபடி கேட்டாள் அந்த வயதான தாய்.

"தட்டிக் கேக்க வேண்டிய புருஷன் தரங்கெட்டுப் போய், தாரமே கதின்னு அவ கால்ல விழுந்து கெடக்கறது எந்த விதத்துல நியாயம். மாணவர்கள் தப்பு மேல தப்பு செஞ்சிகிட்டேயிருந்தா அது ஆசிரியரோட தப்பு. மாணவர்கள தட்டிக் கேட்பது ஆசிரியரோட கடமை. அது மாதிரிதாம்மா இதுவும். கடவுள் கொடுத்தது நியாயமான தண்டனைதான் என்றார் சாமியார்.

எதையும் நேரடியாகச் செய்தால் தான் பலன் உண்டு என்றில்லை. மறைமுகமாக அது நடந்தாலும் அதற்கும் பலன் உண்டு. துன்பப்படுபவர்கள் பக்கத்தில் இருந்துதான் நாம் அவர்களுக்கு ஆறுதல் கூற வேண்டும் என்ற அவசியமில்லை. பத்தாயிரம் மைலுக்கு அப்பாலிருந்தாலும், அவருக்காக பத்து நிமிடம் .மனமுருகி, வேண்டினாலும் போதும் பலன் இருவருக்கும் நிச்சயம்.

பாரதி இளங்கோ என்ற ஒரு அன்பர், பாலாவின் அற்புதங்கள் என்ற நூலைப் படித்தார். புத்தகத்தில் எழுதப்

பட்டிருக்கும் பாலா பீடத்தைப் பற்றியோ, அல்லது புத்தகத்தை எழுதிய எனது தந்தையைப் பற்றியோ அவருக்கு எதுவும் தெரியாது. ஆனால் பாலாவின் லீலை களைப் படித்தவுடன் அழுதுவிட்டார்.

சென்னைவாசியான அவர் தனது மகளுக்கு திருமணம் நிச்சயம் செய்திருந்தார். கிட்டதட்ட ஒரு லட்ச ரூபாய் தேவை. கடன் வாங்கிதான் செய்ய வேண்டும். நண்பர்கள், தெரிந்தவர்கள் என சிலரிடம் சொல்லி வைத்திருந்தார். அதில் யாராவது ஒருவர் கை விரித்தாலும் கஷ்டம்தான். இந்த நேரத்தில்தான் "பாலாவின் அற்புதங்கள்" புத்தகத்தைப் படித்தார்.

அவர் நினைத்திருந்தால் பத்தோடு பதினொன்றாக அந்தப் புத்தகத்தை எண்ணியிருக்கலாம். இல்லை, அப்படி என்னதான் இருக்கிறது அந்த பாலா பீடத்தில், அங்கேயும் போய் ஏதோ பார்த்துவிட்டுத்தான் வருவோமே என்று அரை மனதோடு, ஆர்வமின்றி புறப்பட்டிருக்கலாம். ஆனால் அவர் அப்படிச் செய்யவில்லை.

அந்தப் புத்தகத்தையே பாலாவாக நினைத்தார். ஒரு மஞ்சள் துணியில் ஒரு ரூபாய் நாணயத்தை காணிக்கையாக முடித்து, அதை புத்தகத்திலிருக்கும் பாலா படத்தைச் சுற்றிக் கட்டிவிட்டார். இந்தக் கல்யாணத்தை நீதான் நடத்திக் கொடுக்க வேண்டும், இல்லை என் உயிர் இந்த உடலில் இருக்காது என கூறிவிட்டார்.

இந்த அளவுக்கு தன்னம்பிக்கையான பக்தி எடுத்த எடுப்பில் எவருக்கும் வந்து விடாது. பாலாவைப் பார்க்காமலேயே அங்கே பாலாவின் மேல் முழு நம்பிக்கை வைத்து என்னால் ஆகப்போவது ஒன்றுமில்லை, நீதான் எனக்கு வழி காட்ட வேண்டும் என பாரதி இளங்கோ வேண்டிக் கொண்டார்.

அவரது அசாத்தியமான தன்னம்பிக்கையும், தன்னிகரில்லா பக்தியும் வீண் போகுமா? பாலா அந்தத் திருமணத்தை நடத்திக் காட்டி பார்த்தவர்கள் வியந்து போற்றும் அளவுக்குச் செய்தாள். பிறகு அவர் தன் குடும்பத்தோடு நெமிலி வந்து பாலாவை தரிசித்தார்.

பாலாவின் அருள் வேண்டுமென்றால் பக்கத்திலேயே இருக்க வேண்டும் என்ற அவசியமில்லை. பணிவோடு சேர்ந்த பக்தியும், நம்பிக்கையும் இருந்தால் போதும்.

நமக்கென்ன மனக் கவலை! நம் தாய்க்கன்றோ தினம் தினம் நம் கவலை!!

"பாலாவை நினைக்காத"

பாலாவை நினைக்காத நாளில்லையே
பாலாவை பாடாமல் நானில்லையே
அன்பு கொண்டு ஆட்சி செய்யும்
அவள் பாதங்கள் தானே நம் வேதம்!

– பாலாவை நினைக்காத

வெள்ளியன்று அந்திமாலை தென்றல்வீசும் மாலைவேளை
அபிஷேகம் அலங்காரம் நடக்குமிங்கு!
தள்ளிநின்று காணும்போது துன்பம் என்ற வார்த்தை ஏது?
துயரங்கள் நமைவிட்டு ஓடும்போது!
நவராத்திரி நாட்கள் தன்னில் நலமோடு வளம்சேர
பொருளோடு புகழ்தன்னை தருவாளம்மா
நவமிதன்னில் புறப்பட்டு மகிஷனுடன் போரிட்டு
தசமியன்று வெற்றிவாகை கொண்டாளம்மா!
உயிர் நீயே உணர்ந்தேனே!!

–பாலாவை நினைக்காத

அமைதி தவழ் நெமிலியிலே அருமையான பீடத்திலே
அழகோடு நீ அமர்ந்து அருள் புரிகின்றாய்!
அருந்தவங்கள் பலபுரிந்தும் அமைதியற்று இருப்பவர்க்கு
அன்போடு உபதேசம் நீ தருகின்றாய்
அடுத்திங்கு பிறப்பொன்று அமைந்தாலும் தாயே உன்
அருளோடு நெமிலிக்கு வர வேண்டுமே
அருள் பொங்கும் தாயே உன் அற்புதங்கள் பலவற்றை
நானிங்கு பாடும் வரம் தர வேண்டுமே!
அதை நீயே தருவாயே.

–பாலாவை நினைக்காத

"சொல்லுங்கள் சொல்லுங்கள்"

சொல்லுங்கள் சொல்லுங்கள் பாலாதான்
சொந்தம் நமக்கு பாலாதான்!
பாடுங்கள் பாடுங்கள் பாலாதான்–நமை
பார்த்து ரட்சிப்பவள் பலாதான்!
என்றும் நாங்கள் நம்பினோம்
உன்னை நம்பினோம்!
பாலா எங்கள் பாலா!

–சொல்லுங்கள்

சொல்லிவிட்டோம் எங்களுக்கு எந்தக்குறையும் இல்லையம்மா
சொந்தமென்று நீஇருக்க எங்களுக்கு இன்பமம்மா
அருளைக்கேட்டு வந்தவர்க்கு நீ அன்பைத் தந்தாயே!
இருளைப்போக்கி எந்த நாளுமே இன்பம் தந்தாயே!
நல்ல மாற்றம் தானம்மா உனைபார்த்த நாளிலே
நல்ல ஏற்றம் தானம்மா நீ பார்க்கும் போதிலே!
பாலா எங்கள் பாலா!

–சொல்லுங்கள்

பாடுகின்றோம் உன்புகழை வேறுகுறைகள் இல்லையம்மா
கூடுகின்றோம் உன்னிடத்தில் கூட்டம் குறையவில்லையம்மா
ஆற்றினிலே மிதந்துவந்த உன் ஆற்றல் கொஞ்சமா–அதை
போற்றிப்பாட எங்களுக்கு சொற்கள் பஞ்சமா
நல்லமாற்றம் தானம்மா உனைப் பார்த்த நாளிலே!
நல்ல ஏற்றம் தானம்மா நீ பார்க்கும் போதிலே!
பாலா எங்கள் பாலா

–சொல்லுங்கள்

"அம்மா உந்தன் அழகு"

சிலுசிலுசிலுவென தென்றல் காற்றே மாலையில் வீசாதோ
பளபளபளவென பாலா முகமே கண்களைக் கூசாதோ
ராத்திரி நேரத்து பூஜையில் தாயே பாடலும் வாராதோ
நவராத்திரி பூஜையில் தாயே உந்தன் பெருமையைக்
கூறாதோ

அம்மா உந்தன் அழகுமுகம் நானின்று கண்டு கொண்டேன்!
தாயே உந்தன் சன்னிதியில் நானின்று மெய் மறந்தேன்!
நேற்றோடு நான் கொண்ட துன்பமெல்லாம்
காற்றோடு நான் செல்லக் கண்டேன்!
பாட்டோடு பொருள் யாவும் நீயே என்று
பாடல்கள் பலபாட வந்தேன்!
பாடல்களே வேதங்களா பாலா உன் பாதத்திலே
—அம்மா உந்தன்

உந்தன் கண்ஜாடை அது ஒன்று போதும்—போதும்
கவலைகள் யாவுமே மாறும்
உந்தன் சிங்காரச் சிரிப்பொன்று போதும்—போதும்
வேறென்ன எமக்கினி வேண்டும்
உள்ளம் துடி துடிக்கும்
உன்னை நானிங்கு பாராமல் போனால்
உயிர் பட படக்கும்
உன்னை நானிங்கு பாடாமல் போனால்
ஒரு முறைதான் உனை நினைத்தேன்
உந்தன் புகழ்தன்னை நானிங்கு சொன்னேன்
சொல்கின்ற வேளையில் நான் என்னை மறந்தேன்!
—சிலுசிலுவென

இங்கு வந்தாலே இன்பங்கள் சேரும்–சேரும்
துன்பங்கள் தானாய் மாறும்
நீ பார்த்தாலே நிம்மதி சேரும்–சேரும்
சன்னிதி அதனைக் கூறும்
உந்தன் திருமுகம்தான்
என்றும் நிலவாய் ஜொலித்திடும் ஜொலித்திடும்
உந்தன் அருள்முகம்தான்
என்றும் கனிவாய் சிரித்திடும் சிரித்திடும்
இது சரியா இல்லை தவறா
என்று நாங்கள் பார்ப்பது இல்லை
தாயே நீதானே அன்பின் எல்லை!

–சிலுசிலுவென

"எங்கள் அன்பு பாலா"

எங்கள் அன்பு பாலா—நீ என்றும் எமைக்காப்பாயே
அன்னை எங்கள் பாலா—எங்கள் ஆசைதன்னை தீர்ப்பாயே
சின்னப் பூங்குயிலும் நீதானே !
சிந்தும் புன்னகையும் தேன்தானே !—ஒரு
நந்தவனப் பூ தானே – உன்னை
நம்பி வந்தால் நலம்தானே !

—எங்கள் அன்பு

குறைகள்தான் குறைந்து போகுமா ?
துயரந்தான் தீருமா ?
துன்பந்தான் விலகிப் போகுமா ?
இன்பந்தான் சேருமா ?
அன்னை வந்து கொஞ்சும் அழகு நெமிலியில்
நீயும் வந்து பாடு குறைகள் விலகிடும்
ஆற்றல் கொண்ட அன்னை அவளும் இருக்க
துன்பத்திற்கு துன்பம் வந்து ஓடிடும் !
ஆற்றில் வந்தவள் ! ஆற்றல் தந்தவள் !
அகிலம் முழுதும் பாலாவே !

—எங்கள் அன்பு

அன்புதான் அவளின் மந்திரம் !
இல்லையே தந்திரம் !
காக்குமே அவளின் எந்திரம் !
காவலும் நிரந்தரம் !
அன்னை வந்து சேர்ந்த அந்தப் பீடத்தில்
பாடல் ஒன்றுதானே வேத மந்திரம் !
வேதம் நான்கும் சொன்ன தாயும் அவளின்

பாதம் கண்டால் போதும் பாவம் தீர்ந்திடும்
பாடல் பாடுவோம்! பாதை தேடுவோம்
பாலா நம்மைக் காப்பாளே!

– எங்கள் அன்பு

"ஆற்றில் மிதந்து வந்து"

ஆற்றில் மிதந்து வந்து
அழகாய் நெமிலி நகர்
வந்தாய்! அருள் தந்தாய்!
போற்றி தினமும் உன்னைப்
பாட பாடல்கள் பல
தந்தாய்! பாட்டில் வந்தாய்!
என் பாலாவே அன்பாலே
எமைக் காப்பாயே தன்னாலே
எம் காவல் நீயே!

–ஆற்றில் மிதந்து

சின்னப் பெண்ணம்மா என்றும் சிங்காரப் பெண்ணம்மா
வண்ணப் பெண்ணம்மா எங்கள் வாழ்க்கை நீயம்மா (Repeat)

நீ பார்த்தாலே இங்கேதான் நிம்மதியம்மா (Repeat)

நாங்கள் வந்தோமே என்றும் உன் சன்னிதியம்மா
இங்கு வந்தாலே இன்பந்தான் கூடும் சத்தியமா!

– ஆற்றில் மிதந்து

உன்னைத் தவிர வேறு துணையும் ஏதம்மா?
உன்னை விடவும் வேறு தெய்வம் ஏதம்மா? (Repeat)

உன் பாதங்கள் எங்களுக்கு வேதங்களம்மா! (Repeat)

உன் பீடத்தில் என்றுமில்லை பேதங்களம்மா!
இங்கு வந்தாலே இன்பந்தான் கூடும் சத்தியமா!

– ஆற்றில் மிதந்து

"எந்தன் உயிர் பாலா"

எந்தன் உயிர் பாலா ஏற்றம் தருவாளா ?!
சொந்தம் அந்த பாலா சொல்லித் தருவாளா ?!
பந்தம் அந்த பாலா பாடல் தருவாளா ?!
சந்தம் அந்த பாலா சாந்தம் தருவாளா ?!
(எந்தன் உயிர்)

நாளும் உனைநாடி ஓடி வருவேனே
நாவினிலே பாடல் கோடி தருவேனே
நாற்புறமும் நீயே நன்மை புரிவாயே
நான் அழைக்கும்போது ஓடி வருவாயே
(எந்தான் உயிர்)

அனைவரும் இங்கு ஒன்றாக வந்தோம்
அனுதினமும் உந்தன் புகழ்பாடி நின்றோம்
அருளதனை எமக்கு அள்ளித் தருவாயே
இருளதனை நீக்கி இன்பம் தருவாயே
(எந்தன் உயிர்)